

# ஞானகுரு

# ஞானகுரு

அமரர்
**புலவர்மணி கா.நீலகண்டன்**
நிறைவு மலர்

பதிப்பாசிரியர்
**செல்லத்துரை சுதர்சன்**
விரிவுரையாளர் - தமிழ்த்துறை
பேராதனைப் பல்கலைக்கழகம்

வெளியீடு
**நீ.நித்தியானந்தன்**
*"புலவர் இல்லம்"*
துவாளி வீதி
உடுப்பிட்டி
15.03.2015

Title: 'Gnanaguru'
Pulavarmani K.Neelakandan
Memorial Publication

Editor : Sellathurai Sutharsan

First Edition: 15.03.2015

Published by: N.Nithiyananthan ©
'Pulavar Illam'
Thuvaly Road, Uduppiddy.

Cover Design: Sellathurai Sutharsan

Printer: Guru Printers
39/2, Adiyapatham Road,
Thirunelvely, Jaffna.

No of Pages: 180

No of Copies: 400

Paper Used: 120gms Art Paper



## சமர்ப்பணம்


தந்தையாய் வந்தெம் தெய்வமா யானீர்
வந்தனை செய்து வணங்கிட வாழ்ந்தீர்
செந்தமிழ்ப் பெரியோர் உரைத்தவும் புகழை
சந்ததி போற்றவும் தாளிணை வைத்தோம்.

நீலகண்டன் நித்தியானந்தன் (மகன்)
தாரணி சிவநேசன் (மகள்)

தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமம் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவுரு சிந்தித்தல் தானே.

**- திருமந்திரம் - 138**

*சாரும் பிறவி யனைத்திலுமே*
*சைவ னாகப் பிறக்கவருள்*



பொலிகண்டிக் கந்தவனம் திருவருள்மிகு
ஸ்ரீ கல்யாண வேலவ சுவாமி
(பழையவர்)

**அறுசீர் விருத்தம்**

**சாரும் பிறவி யனைத்திலுமே**
**சைவ னாகப் பிறக்கவருள்**
**பேரு மினிமை நறியதமிழ்**
**பேசு வோனாப் பிறக்கவருள்**
**ஆரு மன்பா னின்றாளி**
**னருள்மெய்ச் சீரைப் பாடவருள்**
**ஏரு லாஞ்சீர்க் கந்தவனத்**
**திருக்கு மெங்கள் முருகையா.**

*(கந்தவன மணிமாலை : 14 -*
*புலவர்மணி கா.நீலகண்டன்)*

"வேலுமயி லுந்துணை யெனச்சதா காலமும்

விருப்புட னுரைக்கவருள்க

வெம்பிணிக ளாலுமிடி யாலுமுட லோடுள

மெலிந்திடா வண்ணமருள்க

காலுமுக மாறுநின தம்பவள வாயுங்

கனாவினு நினைக்கவருள்க

காலன்வரு மந்திய தினத்திலுயிர் சற்றுங்

கலங்கா திருக்கவருள்க

மேலுமொரு தாய்வயின் விடுத்திடினு மாசைவ

மெய்ந்நிலையி னிற்கவருள்க

வேறுபல வுண்டெனினு மெற்கிவைக ளேபெரிதும்

வேண்டும்வேண் டுந்தெய்வமே

மாலுமய னுஞ்சுருதி நாலுமுடி வோர்வரிய

வள்ளலே கந்தவனமேல்

வருமமல பரமசிவ குருபரமெய் விரதர்புகழ்

வரதவுல கருண்முருகனே."*

*(*சிவசம்புப்புலவர் - கந்தவனநாதர் பதிகம் :10)*

ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி தொண்டரும்
யாழ்ப்பாணத்து உடுப்பிட்டி புலவர் இல்ல வாசரும்
ஈழத்து முதுபெரும் தமிழ் அறிஞருமாகிய



அமரர்

# புலவர்மணி காங்கேயன் நீலகண்டன்

**திதி நிர்ணய வெண்பா**

ஜயவருடம் மாசித் தகுமபர பட்சத்
துயரறுமே காதசிநாள் தூயோன் - நயமுடையான்
காங்கேயன் நீலகண்டன் கார்த்திகை மைந்தன்
ஓங்குதிருத் தாளிணைகள் உற்றான்.

(31.05.1930 - 14.02.2015)

மறக்கு மனத்தினை மாற்றி எம் ஆவியை வற்புறுத்தி
பிறப்பில் பெருமான் திருந்தடிக் கீழ்பிழை யாத வண்ணம்
பறித்த மலர்கொடு வந்துமை ஏத்தும் பணியடியோம்
சிறப்பிலித் தீவினை தீடப்பெறாதிரு நீலகண்டம்.

**- சம்பந்தர் - திருநீலகண்டப்பதிகம் : 6**

# "ஞானகுரு"

## புலவர்மணி கா.நீலகண்டன் நிறைவு மலர்

கந்தவனம் திருவருள்மிகு ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி தொண்டரும் யாழ்ப்பாணத்து உடுப்பிட்டி வாசருமாகிய புலவர்மணி கா.நீலகண்டன் சிவசம்புப்புலவரின் பூட்டன். சிவசம்புப்புலவரின் நேரடி மாணாக்கரும் மருகருமான ஆறுமுக உபாத்தியாயர் இவர்தம் குரு. ஆறுமுக உபாத்தியாயர்தம் குருகுலச்சீடர், இவர். உடுப்பிட்டி அமெரிக்கமிஷன் கல்லூரியின் பழைய மாணவர். பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் பயின்றவர். உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரியின் பெருமைமிகு ஆங்கில ஆசிரியர். தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம் முதலாய மொழிகளில் ஆழ்ந்த புலமையுடையவர். இலக்கியம், இலக்கணம், தத்துவம், நிகண்டு, சோதிடம், சங்கீதம் முதலாய துறைகளில் கற்றோர்க்குத் தாம் வரம்பாகிய தலைமையர். எதிர்காலம் அறிந்துரைக்கும் தீர்க்கதரிசி. நூறிற்கும் மேற்பட்ட தலப்பிரபந்தங்களையும் பலநூறு தனிக்கவிதைகளையும் யாத்தவர். பழந்தமிழ் இலக்கியம் மற்றும் இலக்கணம் பற்றிய நனிசீர்மிகு கட்டுரைகள் படைத்தவர். இறுதியாக வெளிவந்த இவரின் பிரபந்தம் கந்தவனமணிமாலை. மகத்தான மாணவர் பரம்பரை ஒன்றை ஈழத்துப் புலமைமரபில் உருவாக்கியவர். சிவசம்புப்புலவர் புலமை மரபில் ஈழத்தின் ஆழ்ந்த தமிழ்ப்புலமையின் அடையாளமாக நின்றிலங்கியவர். இவர் தந்தை அமரர் காங்கேயன்(காங்கேசு). தாய் அமரர் செங்கமலம் (சேதுப்பிள்ளை). இவர் மனைவி அமரர் பண்டிதை தேவகியம்மாள். மகன் நித்தியானந்தன். மகள் தாரணி. மருகர் சிவநேசன். பேர்த்தி தேவகி. எனது ஞானகுரு. புலவர்மணி பற்றிய நினைவுசார் எழுத்துக்களே ஞானகுரு எனும் மகுடம் தாங்கிய இந்நூல்.

**பதிப்பாசிரியர்**

*செல்லத்துரை சுதர்சன்*



# தோத்திரப் பாக்கள்

## விநாயகர் துதி

திருச்சிற்றம்பலம்

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து.

## தேவாரம்

அந்தணாளனுன் னடைக்கலம் புகுத
அவனைக் காப்பது காரணமாக
வந்த காலன் தன் ஆருயி ரதனை
வவ்வினாய்க் குன்றன் வண்மைகண்டடியேன்
எந்தை நீயெனை நமன்றமர் நலியில்
இவன் மற்றென் னடியானென விலக்குஞ்
சிந்தையால் வந்துன் திருவடி யடைந்தேன்
செழும் பொழிற் திருப்புன் கூருளானே.

## திருவாசகம்

உடையாள் உன்றன் நடு இருக்கும்
உடையாள் நடுவுள் நீ இருத்தி
அடியேன் நடுவுள் இருவீரும்
இருபத்தானால் அடியேனுன்
அடியார் நடுவுள் நான் இருக்கும்
அருளைப் புரியாய் பொன்னம் பலத்தெம்
முடியா முதலே என்கருத்து
முடியும் வண்ணம் முன்னின்றே.

## திருவிசைப்பா

நையாத மனத்தினனை
நைவிப்பான் இத்தெருவே
ஐயா நீ உலாப் போந்த
அன்று முதல் இன்று வரை
கையாரத் தொழு தருவி
கண்ணாரச் சொரிந்தாலும்
செய்யாயோ அருள் கோடைத்
திரைலோக்கிய சுந்தரனே.

## திருப்பல்லாண்டு

சீருந் திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன்
பெற்றதார் பெறுவாருலகில்
ஊரும் உலகும்கழற உழறி
உமை மணவாள னுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம்
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

பன்னிரு கரத்தாய் போற்றி பசும் பொன் மாமயிலாய் போற்றி
முன்னிரு கருணையாறு முகப்பரம் பொருளே போற்றி
கன்னியர் இருவர் நீங்காக் கருணை வாருதியே போற்றி
என்னிரு கண்ணே கண்ணுள் இருக்கும் மாமணியே போற்றி.

## திருப்புகழ்

பிறவியலை ஆற்றிற் புகுதாதே
பிரகிருதி மார்க்கமுற்று உழலாதே
உறுதிதரு வாக்கியப் பொருளாலே
உனதுபத காட்சியைத் தருவாயே
அறுசமய சாத்திரப் பொருளோனே
அறிவுள் அறிவார் குணக் கடலோனே
குறுமுனிவர் ஓத்துமுத் தமிழோனே
குமரகுரு கார்த்திகைப் பெருமாளே.

## வாழ்த்து*

ஆறு கமல முகம்வாழி
யாறு முகம்பெய் யருளவாழி
யாறு மாறு மானதொகை
யான வரைத்தோ ணிரைவாழி
வீறு சேவல் மயில்வாழி
விரிசீர்க் கந்த வனமுருகன்
ஏறு வெற்றிச் சுடரொளியோ
டிலங்கு நெடிய வேல்வாழி.


திருச்சிற்றம்பலம்

(*புலவர்மணி கா.நீலகண்டன்-
கந்தவன மணிமாலை)

புலவர்மணி கா.நீலகண்டன் அவர்களின்
குருவும் பாட்டனாரும்

சிவசம்புப்புலவரின்
மாணாக்கரும் மருகருமான

## வித்தகர் ஆறுமுக உபாத்தியாயர்



### குரு வணக்கம்

முந்தைநற் பேற்றின் முதிர்வா லகவிருண் முட்டிரிய
வந்தவ னெற்கருங் கல்வி யளித்தின்ப வாழ்வுதந்தான்
செந்தமிழ் வித்தக னாறு முகக்குரு தேசிகன்றாள்
சிந்தையில் வைத்தெந்த நேரமும் போற்றுதல் செய்குவனே.

- புலவர்மணி கா.நீலகண்டன்

புலவர்மணி கா.நீலகண்டன் அவர்களின்
தந்தையார்

# அமரர் முத்துச்சாமி காங்கேயன்
# (காங்கேசு)



## தந்தை வணக்கம்

பாங்கே யிப்புகழ்ப் பரிசுற வைத்தசீர்க்
காங்கேய னெந்தைபூங் கழலென தகத்ததே

- புலவர்மணி கா.நீலகண்டன்

*"வாயினால் சொல்லிடவும் அடங்காதப்பா*
*வரிசையுடன் எழுதி வைக்க வகையுமில்லை*
*ஞாயிற்றைச் சங்கிலியால் அளக்கலாமோ*
*ஞானகுரு புகழினை நாம் வகுக்கலாமோ*
*ஆயிரநூல் எழுதிடினும் முடிவுறாதாம்..."*

\- பாரதியார்

# புலவர்மணி வாழ்வும் வளமும்



# கந்தவன முருகனின் கழல்பாடி வாழ்ந்தவர் கவிஞர் புலவர்மணி

சிவப்பிரம்ம ஸ்ரீ ச.வைத்தியநாதக் குருக்கள்

பிரதமகுரு - கந்தவனம் கல்யாண வேலவ சுவாமி தேவஸ்தானம்.

புலவர்மணி நீலகண்டன் அவர்கள் உலகை நீத்த செய்தி எமது தேவஸ்தானத்தினருக்கும் அடியவர்க்கும் பெரும் துக்கத்தைத் தந்தது. அவரின் இழப்பு எமக்கும் தமிழுக்கும் பேரிழப்பாகும்.

இலங்கையின் முதுபெரும் புலவராகிய சிவசம்புப் புலவர் கந்தவனப்பதி முருகப் பெருமான் மீது அளவுகடந்த பக்தி உடையவராக வாழ்ந்தவர். கந்தன் அருளால் பல பிரபந்தங்களை இயற்றியவர். பக்திச்சுவை பெருகும் புலவரின் பிரபந்தங்கள் ஓதுவதற்குரியவை. புலவர், தாம் இழந்த தமது கண்ணொளியை மீளவும் தருமாறு கந்தவன முருகப்பெருமானை வேண்டிப் பாடிக் கண்ணொளி பெற்றவர். சுந்தரமூர்த்தி நாயனாருக்குப் பின்னர் கண்ணொளி வேண்டிப்பாடிக் கண்ணொளி பெற்றவர் உடுப்பிட்டி சிவசம்புப் புலவரே. அத்தகைய அருள்திறம் பெற்ற புலவர் வழியில் வந்தவரே, புலவரின் பூட்டன், தமிழ் அறிஞர், புலவர்மணி கா.நீலகண்டன் ஐயா அவர்கள். அவர் எம்முருகன் மீது கந்தவன மணிமாலை எனும் பிரபந்தத்தைப் பாடியுள்ளார்.

ஆலயத்தில் சிறுவர் முதல் பெரியவர் வரை பாடும் வகையில் மிக எளிய தமிழில், இனிமையான

முறையில், பக்திரசம் ததும்பப் புலவர்மணி ஐயா அவர்கள் இப்பாடல்களை ஆக்கித் தந்துள்ளார்கள். பாடல்கள் முழுவதும் எமது சைவசமயக் கருத்துக்களும் சைவசித்தாந்தக் கருத்துக்களும் எளிமையாகவும் சிறப்பாகவும் அமையப் பெற்றுள்ளன. முருகனது திருவிளையாடல்கள், அற்புதங்கள் முதலிய பல்வேறு சிறப்புகளும் பாடல்களில் இடம்பெற்று ள்ளன.

இப்பாடல்களில் வரும் அருள் வேண்டும் பகுதிகள் நெஞ்சை உருக்குவனவாய் அமைந்துள்ளன. கந்தவனத் தலத்தின் பெருமை, தலத்தின் சிறப்பு, தலத்தோடு தொடர்புடைய வரலாற்றுச் செய்திகள் முதலிய பலவும் பாடல்களில் பதிவு பெற்றுள்ளன.

இப்பாடல்கள் பக்தர்களால் மனனம் செய்து பாடப்பட வேண்டியன. இப்பாடல்களைப் பாடுபவர் கந்தனின் அருளைப் பெறுவர் என்பது உறுதியாகும்.

பக்திச்சுவை பொதிந்த இந்நூலை கந்தவன ஆதீன கர்த்தா திருமதி சிவயோகநாயகி இராமநாதன் அம்மையார் புலவர்மணியின் மாணவர் சுதர்சன் அவர்களைப் பதிப்பாசிரியராகக் கொண்டு இவ்வருட, தைப்பூசத் திருநாளில் ஆலயமண்டபத்தில் முருகனின் முன்னால் வெளியிட்டு வைத்தார்கள். எமது ஆலயத்திற்கு உரிய பக்தி இலக்கிய சொத்துக்களில் புலவர்மணியின் கந்தவன மணிமாலையும் ஒன்றாகும்.

*நீல மயிலூர் கந்தவன*

*நிமலா விரிந்து பரந்தவிந்த*

*ஞால வுயிர்கட் குயிரான*

*நாதா சுவையின் செழுந்தமிழால்*

*கால மெல்லா முன்றனருட்*

*கமலத் தாட்சீர் தனைப்பாடிச்*

*சால மகிழ்ச்சி கொள்ளவரந்*

*தருவாய் தருவாய் தருவாயே.*

*என்று அவர்பாடுகிறார். கந்தவன முருகனின் கழல்பாடி வாழ்ந்தவர் அவர். அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போம்.*

பொய்யில் கீரன் முதலாய

புலவோர் மாலை புனைந்தேத்தி

யெய்தற் கரிய மாபெரும்பே

றெய்தி யுய்தி யதுபெற்றார்

வெய்ய வினையே னதைவெட்டி

மெய்யின் புய்தி பெறலன்றோ

செய்ய தமிழ்வாழ் கந்தவனச்

செம்பொற் றளிவாழ் வேலவனே.

*(கந்தவன மணிமாலை : 3-*
*புலவர்மணி கா.நீலகண்டன்)*



# புலவர்மணி நீலகண்டன் காலத்தை வென்று நிற்பார்

பேராசிரியர் சா. உதயசூரியன்
அயல்நாட்டுத் தமிழ்க் கல்வித்துறைத் தலைவர்
தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

*09.03.2015*

தமிழ்நாட்டுக்குத் "திரிசிபுரம் மீனாட்சி சுந்தரம்" எனும் பெயரில் ஒரு மகாவித்துவான் கிடைத்ததுபோல ஈழநாட்டுக்கு "உடுப்பிட்டிச் சிவசம்புப் புலவர்" எனும் பெயரில் ஒரு மகாவித்துவான் கிடைத்திருக்கிறார் என்பதை ஈழத்தமிழிலக்கிய வரலாறு அடையாளங் காட்டுகிறது.

பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிழ்ப் படைப்பிலக்கியத்தின் கம்பீரமான முகவரியாய் அவர் இருந்து வருகிறார். அவருடைய சிற்றிலக்கிங்களை ஒரு சேரத் திரட்டித் தந்து தன் பூட்டனாரின் பெருமைக்குப் பெருமை சேர்த்தவர் புலவர்மணி கா.நீலகண்டன்.

இவர் பெரும்புலவரின் வழித்தோன்றல் என்பதைத் தன் படைப்புகள் வழியும் நிறுவிக்காட்டியவர். ஆங்கிலப் புலமையினூடாகத் தமிழுக்குத் தொண்டு செய்த பெருமையும் இவருக்குண்டு.

ஆவணப்படுத்தல் அருகியுள்ள தமிழ்ச் சூழலில் இவர் தனது மாணவனுடன் தொகுத்துத் தந்த "பிரபந்தப் பெருந்திரட்டு" தமிழிக்கியம் மற்றும் பண்பாட்டு ஆய்வுக்கு அடிப்படைத் தரவுகளை அள்ளித் தருபவை.

ஈழ மண்ணின் மிகப்பெரிய கவிதை ஆளுமையை உரிய முறையில் உரிய இடத்தில் பதிவு செய்து தன்னையும் வரலாற்றில் பதியவைத்துக் கொண்ட புலவர்மணி கா.நீலகண்டன் காலத்தை வென்று நிற்பார் என்பதை அவருக்காகப் பூக்கும் இந்த மலர் உறுதிப்படுத்தும்.

இந்த மலராக்கத்திற்கு ஓயாது உழைத்த ஈழத் தமிழாய்வின் "இளைய நம்பிக்கை" செல்லத்துரை சுதர்சனுக்கு என் நெஞ்சம் நிறைந்து வாழ்த்துக்கள்.

(சா. உதயசூரியன்)



# புலவர்மணியின் கவிக்கொத்து கந்தவனத்தின் அருட்சொத்து

"செவாலியர்" திருமதி சிவயோகநாயகி இராமநாதன்

ஆதீன கர்த்தா - கந்தவனம் கல்யாண வேலவ சுவாமி தேவஸ்தானம்

தொலைபேசி வாயிலாக வந்தசெய்தி ஒன்று எம்மைப் பெருஞ்சோகத்துள் ஆழ்த்தியது. எமது ஆலயத்தில் தமிழ் வளர்த்த முதுபெரும் அறிஞர் புலவர்மணி நீலகண்டன் அவர்கள் எம்மைவிட்டுப் பிரிந்தார் என்ற செய்தி இப்போதும் பொய்க்காதா என்று மனம் ஏங்குகின்றது.

அருணகிரிநாத சுவாமிகள் முதலாக இற்றைவரை பல அருளாளர்களும் முருகன் அருள்பெற்ற கவிஞர்களும் எமது கந்தவனக் கந்தன் மீது பக்திப்பாக்களைப் பாடிப் பரவியுள்ளனர். லௌகீக வாழ்விலும் ஆன்மீக வாழ்விலும் நிறைவு வேண்டிப் பாடிய இப் பக்திப்பாடல்கள் கந்தவனக் கந்தனின் அருட்திறனைப் புலப்படுத்துவனவாய் அமைந்துள்ளன. இப்பாடல்கள் பிற அடியவரும் பக்தியுடன்பாடி, முருகன் அருள்பெறும் வகையில் உயர்வுநிலை பெற்றனவாய் அமைந்துள்ளன. கந்தவனக் கந்தனின் அருள்பெற்ற தமிழ் அறிஞரும் கவிஞருமாகிய புலவர்மணி காங்கேயன் நீலகண்டன் அவர்கள் கந்தவனமணிமாலை எனும் பிரபந்தத்தை எம் ஆலயத்தின் மீது பாடியிருப்பது சிறப்புக்குரியதும் போற்றுதற்குரியதுமாகும். எமது ஆலயத்துக்குரிய பக்திப்பாக்களின் வரிசையில்

இந்த நூலும் என்றும் நின்று நிலவும் என்பதைப் பெருமையுடன் பதிவு செய்கிறோம்.

உடுப்பிட்டி சிவசம்புப்புலவரின் பூட்டன் அவர்களே புலவர்மணி. பக்தர்கள் பாடிப் பயன்பெறும் வகையில் அவர் பாக்களை ஆக்கியிருப்பது வரவேற்கத்தக்கதாகும். அவரது பாக்களால் முருகனைப் பாடித்துதிப்போர் வேண்டியதை வேண்டியவாறு எய்துவர் என்பது உறுதி. சிவசம்புப் புலவரின் புலமைச் சந்ததி பாவினால் முருகனைப் பாடிப்பரவும் சந்ததி என்பதைப் புலவர்மணி தமது இறுதிக்காலம்வரை நிரூபித்தார். புலவர்மணி கா.நீலகண்டன் அவர்கள் உயிருடன் இருக்கும் போது வெளியிட்ட இறுதிநூல் எமது ஆலயத்தைப் பற்றியதே. அதனை நாம் வெளியிட்டு வைத்துக் கந்தனின் அருளைப்பெற்றோம். புலவர்மணியின் வாழ்வில் அவரின் நூல் ஒன்றை வெளியிடும் பேற்றை அவர் அளித்தமையை நினைத்துக் பெருமையுடன் கண் கலங்குகின்றோம்.

சிவசம்புப் புலவரின் கந்தவனநாதர் பதிகம், கந்தவன நாயகர் ஊஞ்சல், கந்தவன நான்மணி மாலை, கந்தவனநாதர் கீர்த்தனம் (1915) ஆகியவை எமது ஆலயத்தின் அருட்சொத்துக்கள். அந்த வரிசையில் புலவர்மணியின் கந்தவன மணிமாலையும் சேர்ந்திருப்பது மகிழ்ச்சிக்குரியது. புலவர்மணிக்கு முருகன் என்றும் பிறவாத பேரின்ப நிலையை அருளவேண்டும் என வேண்டுகின்றோம்.

*புலவர்மணியின் மகன் நித்தியானந்தன், மகள் தாரணி, உறவினர்கள் மற்றும் அவரின் சுவட்டைக் கணமும் பிரியாது தொடரும் மாணவர்கள் அனைவருக்கும் தேவஸ்தானத்தின் சார்பில் அமைதி கிடைக்கவேண்டும் என்று பிரார்த்திக்கின்றோம்.*

*தமிழரின் வரலாற்றில் இடம்பிடித்த புலவர்மணியின் கவிக்கொத்து எம் ஆலயத்தின் அருட்சொத்தாக என்றும் நிலைபெறும்.*

பாடு புலவோர் தங்களிடர்ப்
பாடு யாவும் பறந்தோட
நீடு பேரின் பாழிதனில்
நிலையா யுற்றுத் திளைத்தாட
ஈடு கூற வொண்ணாத
வின்பக் கந்த வனத்தலத்தான்
ஆடு மயின்மீ தேறிவரு
மவன்றா ளிணையைப் போற்றுமினே.

*(கந்தவன மணிமாலை : 2-*
*புலவர்மணி கா.நீலகண்டன்)*



# நான் சந்தித்த ஒரு பெரியார்

**'இந்த நூலில் எனது பெயர் இருக்கிறதே! நான் இதை எழுதவில்லையே!'**

திருமிகு பூ.சோதிநாதன்
முன்னாள் சிரேஷ்ட விரிவுரையாளர்
பேராதனைப் பல்கலைக்கழகம்

மாக்கஸ் அரேலியர் கி.பி முதலாம் நூற்றாண்டு காலப் பகுதியில் உரோம சாம்பிராஜ்சியத்தின் சக்கரவர்த்தியாக இருந்தவர். அவர் இலத்தீன் மொழியில் எழுதிய ஆத்மசிந்தனை என்ற நூல் உலகிலுள்ள பெரும்பாலான எல்லா மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. அது பன்னிரண்டு அத்தியாயங்களை உடையது. முதலாவது அத்தியாயத்தில் மாக்கஸ் அரேலியர் தான் யார் யாரிடம் எந்தெந்த நற்பண்புகளைக் கற்றுக் கொண்டேன் என்பதை மிக விபரமாக விளக்கியுள்ளார். அவர் அவ்வாறான ஒரு புகழ்பெற்ற நூலை எழுதுவதற்கு அவர் தான் சந்தித்த மனிதர்களிடம் கற்றுக் கொண்ட அந்த நற்பண்புகளே காரணமாக இருந்தன.

தத்தாத்திரேயர் என்ற ஆன்மஞானி தனக்குக் குருமார் இருபத்திநாலு பேர் என்பார். அவர்களில் பறவைகள், விலங்குகளும் அடங்கும். அவற்றிலிருந்து அவர் அவதானித்துக் கற்றுக் கொண்டதனால்தான் அவர் ஞானி ஆனார். மாணிக்கவாசகர் முதலான சமய ஞானிகள் எல்லோருமே அடியார் உறவையும், சத்சங்கத்தையும் நாடியதன் மூலமே அவர்கள் எல்லோரும் பெரியவர்கள் ஆயினர்.

ஔவையாரின் ஆத்திசூடி, திருவள்ளுவரின் திருக்குறள், திருமூலரின் திருமந்திரம் முதலான பல நூல்கள் உலக வாழ்க்கையின் கேடுகளில் வீழ்ந்து விடாமல் தப்பிக்கொள்வதற்கான ஒரே ஒரு வழி பெரியாரைத் துணைக்கொள்ளுதல் என்றே விளக்குகின்றன. எமர்சன் என்ற அமெரிக்க அறிஞர் ஒருவருடைய சேர்க்கை, அதாவது அவர் யார் யாரிடம் எல்லாம் பழகுகின்றார் என்பதை அறிந்து கொண்டால் அவர் எப்படிப்பட்ட பண்புகளை உடையவர் என்பதை ஊகித்துவிடலாம் என்பர்.

பெரியோரது துணை எவ்வளவு முக்கியம் என்பதற்கு ஒரு திருக்குறளை உதாரணத்திற்கு இங்கே எடுத்துக்காட்டலாம். திருக்குறளில் பெரியாரைத் துணைக்கோடல் என்ற அதிகாரத்தின் பத்தாவது குறள் மேல் வருமாறு :
“பல்லார் பகைகொளலின் பத்தடுத்த தீமைத்தே
நல்லார் தொடர்கை விடல்”

ஒருவர் நற்பண்புள்ள பெரியோரது நட்பைக் கொள்ளாது விடுவது அவர் தனியாகப் பல பகைவர்களை வைத்திருப்பதைக் காட்டிலும் பத்து மடங்கு தீமை உடையது என்பது இக்குறளின் பொருளாகும்.

மயிலாப்பூர் இராமகிருஷ்ண மடத்திற்குச் சென்ற போது அங்குள்ள சுவாமியைச் சந்திக்கும் ஓர் அருமையான வாய்ப்புக் கிட்டியது. அப்போது அமெரிக்காவில் வசிக்கும் ஒரு குடும்பத்தினரும் இருந்தார்கள். சுவாமி ஒரு மணிநேரம் பல உயர்ந்த ஆன்மீக விடயங்களை எமக்கு எடுத்து விளக்கிய பின் நீங்கள் யாராவது ஏதாவது கேள்வி கேட்க விரும்பினால் கேளுங்கள் என்றார். உடனே

இலங்கையைச் சேர்ந்த, அமெரிக்காவில் வசிக்கும் பெண்மணி அமெரிக்கச் சூழலில் வாழும் எமது பிள்ளைகளுக்கு நாங்கள் கூறக்கூடிய சில ஆலோசனைகளை எங்களுக்குக் கூறுவீர்களா? என்று கேட்டார். உடனே சுவாமி "நீங்கள் அவர்களுக்கு எந்த ஆலோசனையும் கூற முற்படாதீர்கள். நீங்கள் அவர்களுக்கு எதைக் கூறவேண்டும் என்று விரும்புகிறீர்களோ அதன்படி நீங்கள் எடுத்துக்காட்டாக வாழ்ந்து காட்டுங்கள். அது மிகவும் பயனளிக்கும் என்று விடை கூறினார்.

இன்று யாழ்ப்பாணத்திலே நடைபெறுகின்ற தினங்களிலே கல்லூரிகளில் பல்கலைக்கழகங்களிலும் படிக்கும் மாணவர்களின் பெற்றோரும் மற்றும் பெரியவர்களும் அம்மாணவர்கள் பலவிதமான கேடுகளுக்கு ஆளாகின்றார்கள். அவர்களின் எதிர்காலம் எப்படி அமையப் போகின்றது என்று ஆதங்கப்படுவதை அவதானிக்க முடியும். அம்மாணவர்கள் கேடுகளில் வீழ்ந்து விடுவதற்கு யாரும் முன்மாதிரியாக நடக்கவோ ஆலோசனை செய்யவோ தேவையில்லை. அதற்கான காரணம் மனிதமனம் இயல்பாகக் கேடுகளில் வீழ்ந்துவிடும் இயல்பு உடையது. இன்றைய நவீன சூழல் அம் மாணவர்களுக்கு அந் நிலையை ஏற்படுத்தி விடுகிறது. அம்மாணவர்களின் பெற்றோரில் பலரும் ஆசிரியரில் பலரும் நவீன சூழலினால் உதாரண புருஷர்களாக வாழமுடியாமல் தடம் புரண்டு விடுகிறார்கள்.

இப்படியான ஒரு சமுதாய சூழலின் பின்னணியிலேயே புலவர் மணி காங்கேயன் நீலகண்டன் அவர்களை அவரது இறுதி இரண்டு

ஆண்டுகளில் பல தடவை சந்தித்துப் பழகும் வாய்ப்பைப் பெற்றேன். அவரது மிக எளிமையான வாழ்க்கைமுறை எனக்கு மிக வியப்பாகவே இருந்தது. அவர் ஓர் ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியர் என்பதை அறிந்திருந்ததனால் அப்படி வியந்து போனது இயல்பே.

அதிகாரம், புகழ், பெருமை, போலித்தனம், மற்றவர்களில் தங்கியிருத்தல் முதலான எக்குறைபாடுகளும் இல்லாதவராகவே அவரை அவரது வாழ்க்கை முறையிலிருந்து அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

பலருக்கு அவர் கற்பித்து, அவர்கள் மிக உயர்ந்த நிலைக்குவரக் காரணமாக இருந்திருக் கின்றார். அது தனது கடமையே தவிர அவர்களிடம் எதனையும் எதிர்பார்க்கக் கூடாது என்ற எண்ணத்தோடேயே வாழ்ந்து வந்தார். தெரிந் தெடுத்த ஒரு சிலருடனேயே பழகிக் கொள்வார்.

தனி மனிதனும் சரி, பெரிய பேரரசுகளும் சரி அவை அழிந்து போனதற்குக் காரணம் அவை ஆடம்பரமாக வாழ முற்பட்டதன் பின்பு என்பதை வரலாறு எமக்குப் படிப்பினையாக மீண்டும் மீண்டும் கூறுகின்றது. ஆனால் நாம் ஒருவரை ஒருவர் பார்க்க முடியாவிட்டாலும் கூட ஆடம்பரமாக வாழ்ந்து சமுதாயத்தோடு அதன் நீரோட்டத்தோடு சேர்ந்துவிடுகின்றோம். அந்தப் பெரியசமுதாய நீரோட்டத்தை மிகத் தைரியமாக எதிர்த்துத் தனியாகவே எளிமையாக வாழ்ந்து காட்டிய பெரியார் புலவர்மணி நீலகண்டன் ஆவார். அதனால் அவரிடம் கூர்ந்து அவதானித்தால் அன்றித் தெரியாத ஆத்ம பலம் மறைவாக இருந்ததைக் காணமுடிந்தது.

அவர் ஆங்கில ஆசிரியராகச் சேவையாற்றிய போதும் உடுப்பிட்டிச் சிவசம்புப்புலவரின் வழித்தோன்றல் என்ற காரணத்தினால் இயல்பாகவே புலமைமிக்கவராக விளங்கினார். பல பிரபந்த நூல்களை அவர் எழுதி இருந்தாலும் புகழையும், பெருமையையும் விரும்பாததால் அடக்கம் மிக்கவராய் வாழ்ந்து வந்தார். அவரது மாணவனும் பேராதனைப் பல்கலைக்கழக விரிவுரையாளருமான செ. சுதர்சன் அவர்கள் அப்பிரபந்தங்களுள் ஒன்றான கந்தவன மணிமாலையை அவரின் இறுதி நாட்களில் பதிப்பித்திருந்தார். எந்த விருப்பு வெறுப்பும் இல்லாத நிலையில் அந்த நூலைப் பார்த்த அவர் "இந்த நூலில் எனது பெயர் இருக்கிறதே! நான் இதை எழுதவில்லையே!" என்று கூறுமளவு தன்முனைப்பற்ற அடக்கம் மிக்கவராக வாழ்ந்த ஒரு பெரியார் ஆவார்.

பெருமளவில் விழுமியங்கள் புறக்கணிக்கப்படும் இன்றைய மிக நெருக்கடியான ஒரு காலகட்டத்தில் பல உயர்ந்த விழுமியங்களின் உயிருள்ள உருவமாக வாழ்ந்துவந்த ஒரு பெரியாரோடு பழகக் கிடைத்தமையை நினைக்கும் போது மனமகிழ்ச்சியே கிடைக்கின்றது. அவர் தான் வழிபடும் தெய்வமான முருகப் பெருமானுடன் இரண்டறக் கலந்திருப்பார்.



# NEELAKANDAN MASTER : AN EMBODIMENT OF VIDHIYA DHARMA

**Professor S. Srisatkunarajah**

*Professor in Mathematics & the Dean of the Faculty of Science, University of Jaffna,*

What is "Dharma"? Dharma is, that which supports existence. Amongst the different dharma, Vidhiya Dharma(வித்யாதர்மம்) is the supreme one as vidhiya dharma fosters and promotes Knowledge, Wisdom and Self-reliance. Neelakandan Master dedicated his whole professional life, spanning forty years, for this purpose by imparting and disseminating knowledge to generations of students at the Uduppiddy American Mission College(UAMC).

He hailed from a highly respected family of Saiva-Tamil tradition. His grandfather late Sivasampu Pulavar, who is regarded as a great legendary Tamil Pulavar of Saiva Tradition in Eezham (ஈழம்), inspired and guided Neelakandan master in Education and Saivasim. So that, with the assistance of his Guru Arumuga Upathiyayar. Neelakandan Master was able to develop deep and profound knowledge in Tamil Language and Saiva Siddantha while he was young. Due to this fortunate relationship with the genuine Guru, Neelankandan Master was deeply convinced to follow the regulatory principles of Saivasim from young hood without any illusion. Nowadays it is a rare

event to see people holding fast to their religious doctrines andregulatory principles. Truly, Neelakandan Master has been a living testimony for steadfastness in holding high principles and selfless service with match less qualities of a great personality. During the tenure of Neelakandan Master at the UAMC, the school enjoyed a notable growth in diverse fields and fulfilled its commitment to the students and Uduppiddy community due to thetireless and meticulous services of Neelakandan Master and his colleagues.

I am very fortunate to be associated with Neelakandan Master during the golden period of Past Pupil Association (PPA) of UAMC under the abled leadership of late Professor Alagaiah Thurairajah and the late Principal Sithamparapillai Master, both of them were his class mates. Neelankandan Master had extended his invaluable assistance to the PPA to sustain the activities of the UAMC when it was displaced with a manmade burial of all of its buildings during the Operation Liberation in 1987. I have been so impressed to witness that Neelakandan Master was decorated with the many immaculate qualities: truthfulness, cleanliness, mercy, perseverance, renunciation, peacefulness, simplicity, control of the senses, equilibrium of the mind, austerity, equality, forbearance, placidity, learning, knowledge, detachment, opulence, chivalry, influence, strength, memory, independence, tactfulness, patience, kindheartedness, ingenuity, gentility, determination, proper execution, steadiness, faithfulness,

respectfulness and lack of false egotism. It was a great honour for me, as I was invited by Nellakandan Master last year (2014) for the publishing ceremony of the Masterpiece Pirabhanthathiradu (பிரபந்ததிரட்டு) of his master "SvasampuPulavar" compiled by Neelakandan Master's beloved and favorite student Mr. S.Sutharsan, Lecturer in Tamil, University of Peradeniya. It was incredible that Neelakandan master could recall all the missing songs of the retrieved collection from the damaged old Palm leaf bundles whenever Mr. S.Sutharsan was seeking during the compilation. No wonder his Kula Thievam (குலதெய்வம்) elephant face Thuvali Pillaiyar (துவாளிபிள்ளையார்) had blessed Neelakankan Master with lasting memory for which the elephants are well known for. Neelakandan Master has always been an ardent devotee of Lord Murugan. The famous devotee of Lord Murugan, Arunakirinathar's matchless gift for us is the Kanthar Anuputhy (கந்தர் அனுபூதி) which was the last hymns of Arunakirinathar before departing to God head. Fittingly in a similar manner, just two weeks before his departure on the Thaipusam (தைப்பூசம்) day, $27^{th}$ of January 2015, Neelakandan Anuputhy glorifying the Polikandy Kanthan consisting of 250 hymns was released at the Polikai Kanthavanam temple with an able assistance from Mr. S.Sutharsan. This book will be a treasure for us to know and relish his expressions on Murugan's Anuputhy. It is said that "one lit candle can light thousands of unlit candles". Through his scholarship, dedicated service and anuputhy, Neelakandan Master had been enlightening thousands and thousands of

students and teachers in their pursuit of knowledge. Time (காலம்) has the greatest influence of nature on Human beings. All relationships would be separated in due course of time. We are sad that Neelakandan master has now departed with unbearable loss to his family and the UAMC society.

His beloved children Tharani and Nithi and spouse late Mrs. Thevakiyammah had been the motivating force for him to render tireless service to the community. It was self-evident that all of them were extending him with much needed love and great care to this conservative gentleman who led a solitude life with full of devotion and scholarship.

I feel very proud of his children Nithi and Tharani and his student Sutharsan, for their efforts and assistance to Neelakandan master to fulfill his life time desire to bring out the masterpiece of Sivasampupulavar as a quality book. People say no one is indispensable in this world, but the elevated gentleman like Neelakandan master was an exception and truly indispensable because in my opinion Neelakandan master was a manifestation and embodiment of Vithiya Dharma. May the Almighty bless his beloved ones with peace and him with eternal bliss.



# அமெரிக்கன் மிஷன் கல்லூரி அன்னையின் புதல்வர் அருந்தமிழ்ப் புலவர்

திருமிகு சு.கிருஷ்ணகுமார்
கல்லூரி முதல்வர்
உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி

எமது கல்லூரி அன்னையின் கனதிமிக்க புதல்வர்களுள் ஒருவரே அமரர் புலவர்மணி கா.நீலகண்டன் அவர்கள். அவர் தமது கல்வியுலக வாழ்வைக் கல்லூரியிலே ஆரம்பித்துக் கல்லூரிக்காவே வாழ்ந்து கல்லூரியை வாழவைத்தவர். அவரின் இறப்பு எமது கல்லூரிச் சமூகத்திற்குப் பேரிழப்பாகும்.

புலவர்மணி எமது கல்லூரியில் மாண வனாக, ஆங்கில ஆசிரியராக, சாரணிய ஆசிரியராக, இன்னும் சொல்லப்போனால் பல்துறைசார் விற்பன்னராக இருந்து பணியாற்றியவர். அவரது காலத்தில் சாரணிய அணி இலங்கையின் முதல் அணியாக இருந்து எமது கல்லூரிக்குப் பெருமை சேர்த்தது.

புலவர் எமது கல்லூரிக்காக எழுதிய கல்லூரிக்கீதம் தமிழ் மொழிமூல மாணவர்களுக்குத் தாரக மந்திரமாகவும் கல்லூரித்தாயின் இன்னிசைப்பாடலாகவும் அமைந்திருப்பது அவரது வரலாற்றுச் சாதனைகளில் ஒன்று என்பதை நாம் என்றும் மறந்துவிடக்கூடாது.

"ஒளி இருளை அகற்றும்" என்பது கல்லூரியின் மகுடவாசகம். புலவர்மணி ஐயாவின் அறிவொளி அறியாமை என்கின்ற இருளை மாணவர்களின் மனங்களில் இருந்து அகற்றியது. அவரின் ஆத்மா சாந்தியடையக் கல்லூரி சார்பில் பிரார்த்திக்கின்றேன்.

செய்ய தமிழ்ப்பா வைவுக்குஞ்
சிந்தைக் குளிர்ச்சி யாகவருள்
செய்யும் வள்ள லெனவாப்தர்
செப்பி னார்க ளதையோர்ந்தே
துய்ய மறைவாழ் கந்தவனச்
சுந்த ராவிக் கடையேனு
முய்ய வருள்வா யுனையன்றி
யிங்குற் றருளவாருளரே.

*(கந்தவன மணிமாலை : 4 - புலவர்மணி கா.நீலகண்டன்)*



# புலவர்மணி தம்புகழ் நிறீஇய பழுத்தபழம்

பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா
முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

புலவர்மணி நீலகண்டன் ஆசிரியர் அவர்கள் காலமானார் என்ற செய்தியைக் காலங்கடந்துதான் அறிந்தேன். திரு சுதர்சன் தொலைபேசியிலே இச்செய்தியைச் சொன்னார். "சேர் எல்லாம் முடிந்துவிட்டது" என்று அவர் கூறினார். எமது மரபுவழிக்கல்வியின் ஊற்றுக்கால்களின் வாரிசான அவரின் இறப்பு "எல்லாம் முடிந்துவிட்டது" என்ற தொடரை அர்த்தபுஷ்டியாக விளங்க வைத்தது.

உடுப்பிட்டிச் சிவசம்புப் புலவரை அறியாத ஈழத்துத் தமிழியல் ஆய்வாளர்கள் இருக்க முடியாது. சிவசம்புப் புலவரின் பூட்டனான திரு நீலகண்டன் ஆங்கில ஆசிரியராகவும் தமிழ் அறிஞராகவும் திகழ்ந்தவர். மரபு வழித்தமிழ்க் கல்வியின் உள்ளூரம் அவருக்குப் பிதிரார்ஜித் சொத்தாகக் கிடைத்தது.

தமிழிலும் வடமொழியிலும் வல்லுநராகத் திகழ்ந்த உடுப்பிட்டிச் சிவசம்புப்புலவர் "புலவர்" என்ற சொல்லுக்கு இலக்கணமாகத் திகழ்ந்தார். ஆயிரக்கணக்கான பாடல்களைப் பாடிய இவரை நாவலரே "புலவர்" எனக்கூறி நெஞ்சுநிறைய வாழ்த்தியதாக அறிகிறோம். "வல்லான் வகுத்ததே

வாய்க்கால்". இன்றுவரை இவர் புலவர் என்றே அழைக்கப்படுகிறார். இனியும் அது தொடரும்.

புலவராகவும் போதனாசிரியராகவும் உரையாசிரியராகவும் புராணபடனகாரராகவும் திகழ்ந்த இவரின் தோற்றப் பொலிவு பற்றிய செய்திகளைச் செவிவழியாக நாம் அறிந்திருக்கி றோம். அவரின் "மெய்யுரு" (Photo) இருப்பதாகத் தெரியவில்லை.

19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலே "கீர்த்திப் பிரதாபம் வாய்ந்தவராகத்" திகழ்ந்த புலவரிடம் சிறப்புப் பாயிரம் ஒன்று பெற வேண்டும் என, அக்காலத் தமிழறிஞர்கள் பலர் "தவமிருந்ததாகவும்" கூறப்படுகின்றது. புலவரின் கவிதா ஆளுமையை அவரது பாயிரங்களினூடும் கண்டு கொள்ளலாம்.

இலங்கைப் பல்கலைக்கழகத் தமிழ்க்கல்வி மரபின் "ஊற்றுக்காலாகப் புலவரைக் கொள்ளலாம். காரைதீவுப் பிள்ளையார் ஆலய அர்ச்சகராக இருந்த திரு வைத்திலிங்கதேசிகர் புலவரின் மாணாக்கர். இவர் விபுலானந்தரின் ஆரம்பகாலத் தமிழாசிரியர்களில் ஒருவர். தும்பளை முத்துக்குமார சுவாமிக்குருக்கள் புலவரின் மாணாக்கர். முத்துக்குமாரசாமிகளிடமே பேராசிரியர் கணபதிப்பிள்ளை இலக்கிய இலக்கணங்களையும் வடமொழியையும் வரன்முறையாகக் கற்றவர். இவர்கள் இருவரினதும் தமிழ்க்கல்வி மரபின் தொடர்ச்சி இன்றுவரை ஓடிக் கொண்டிருக்கிறது.

புலவரின் ஆக்கங்களைப் பேணியும் பாதுகாத்தும் வந்த அமரர் நீலகண்டன் புலவரின் ஆக்கங்கள் பலவற்றைத் திரு சுதர்சனைப் பதிப்பாசிரியராகக் கொண்டு வெளிவர ஏவுவதற்குக் கர்த்தாவாக இருந்தவர். சுதர்சன் சிறந்த இயற்றுதற் கர்த்தாவாக விளங்குகிறார். சுதர்சன் புலவர்மணியின் புலமையை அவரைத் தொடர்ந்து பெற்ற ஒரு மாணவர். எமது நம்பிக்கை நட்சத்திரமாக விளங்குபவர்.

சிவசம்புப்புலவர் பிரபந்தப் பெருந்திரட்டு வெளியீட்டு விழாவில் நயப்புரையாற்ற என்னை அழைத்திருந்தார். என்னைக்கண்டதும் மிகவும் மகிழ்ந்து பேசினார். சிவசம்புப்புலவரின் ஓலைச்சுவடி பதித்த நினைவுச் சின்னம் ஒன்றையும் என் நயவுரைக்குப் பரிசாக வழங்கினார்.

அவர் எம்மைவிட்டுத் திடீரெனப் பிரிவார் என்று நாம் எண்ணியிருக்கவில்லை.

கவிதை, கட்டுரை, கற்பித்தல் எனப் பல்பரிமாண ஆளுமையால் தம்புகழ் 'நிறீஇய' நீலகண்டன் "பழுத்தபழமாக" வீழ்ந்தவர். அந்தப் பழத்தின் வித்துக்கள் பல இடங்களிலும் பரவி முளைத்துப் பயன்தரும் என நம்புகிறேன்.

அன்னாரின் ஆன்மா கந்தன் திருவடிகளிற் கலந்துறையப் பிரார்த்திப்போமாக.



# KANKEYAN NEELAKANDAN : GURU AND SOCIAL WORKER

**T.Sangarapillai**
*Retd. Teacher & His Friend*

Kankeyan Neelakandan hails from a revered Pulavar family at Uduppiddy, SivasambuPulavar the well known Tamil erudite was his grandfather. Neelakantan is as epitome of the Pulavar, though he is not entitled to claim the same level of excellence and recognition as that of the Pulavar, He had the traits of the Pulavar from his Youth. He grew and developed his talents and became an eligible grandson of the Pulavar.

Neelakantan, though short in stature stood tall at the school and public performances. He was deep and sincere in his thoughts, words and deeds. He was orderly systematic, methodical and disciplined his conduct and manners. His piety and devotion eared the respect of everyone he came across. He led an untainted, unblemished pure life. All through he led a simple, humble and unsophisticated life. His children bear testimony to his noble qualities. He was never proud of his acquisitions or achievement. He would, wherever he was invited for any discourse at any function, reading accept the invitation, address the gathering, enlighten them and guide them to lead a noble, devoted life. He was a devout Hindu and a strict vegetarian. His exemplary life was a role model to his

students, friends, relatives. neighbours and to his village at large.

He was multifaceted and talented. He was inimitable as a husband, father, Guru and social worker. His noble qualities and deeds are worth being emulated. He was a proud son of the Uduppiddy soil. He had his education at Uduppiddy American Mission College and at the Training college. The U.A.M.C is proud and privileged to have produced such a true duty conscious and faithful student and teacher. All through he was very much attached it his school. His life and soul had been intertwined with the activities and welfare of the school. He had seen and experienced the ups and downs of his Alma master, with fortitude and with the fullest cooperation and collaboration of the parents and well wishers of the school, he had rendered Yeoman service to resuscitate and regain the pristine glory of the school.

His intense love towards language, literature, religion, philosophy and spiritualism is immense. He had been keenly interested and engaged in these fields and had done researches review and analyses and had enlightened the public through various media. The untiring efforts he had taken to compile and compose the life and valuable works of SIVASAMBU PULAVAR deserve special mention and applause. That particular achievement half would remain for ever as a hall mark and an indelible reminder to his benevolent, large hearted devoted service to the preservation of our age old literature, arts culture.

The accolades, acclaims and honors showered on Mr.Neelakantan are not an empty boast. Neither they are voiced to father his soul or his family. They are tributes paid from the bottom of our hearts to a genuine soul. Mr.Neelakantan is mo more will us physically. But in the hearts of hearts of everyone he moved with, he would remain ever green and un withered.

He has led a full and fruitful life. On the 31st ceremony of his demise let's reminisce his dedicated services and pray for his soul to rest in peace and tranquility.

Thank you all.



# மரபுப் புலமையின் மகத்தான அடையாளம் எளிமையின் திருவுரு

பேராசிரியர் கி.விசாகரூபன்
தமிழ்த்துறை தலைவர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

ஈழத்தின் மரபுவழித் தமிழ்ப் புலமையின் அடையாளங்களில் ஒருவராக எம்மிடையே வாழ்ந்து வந்த புலவர்மணி கா.நீலகண்டன் அவர்கள் 14.02.2015 அன்று இவ்வுலக வாழ்வை நீத்தார் என்ற செய்தியை அருமை நண்பர் செ.சுதர்சன் (விரிவுரையாளர், தமிழ்த்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்) வாயிலாக அறிந்தபோது மிகவும் துயரடைந்தேன்.

உடுப்பிட்டிச் சிவசம்புப் புலவரின் நூல்வெளியீட்டு விழா ஒன்றின்போது புலவர் எனக்கு அறிமுகமானார். அந்நிகழ்வை என் வாழ்வின் பேறுகளிலொன்றாகக் கருதுகிறேன். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரால் "புலவர்" என்ற பட்டம் கொடுத்துச் சிறப்புச் செய்யப்பட்ட உடுப்பிட்டிச் சிவசம்புப் புலவரின் பேரன், ஆறுமுக உபாத்தியாயரின் விருப்புக்குரிய மாணாக்கன், பழந்தமிழ் இலக்கணம், இலக்கியம், நிகண்டு, சோதிடம் முதலான புலங்களில் மிகுந்த "தாடனம்" உள்ள மரபுவழித் தமிழ்ப் புலமையாளன் எனப் பல்வேறு பெருமைகளுக்கெல்லாம் சொந்தக்காரர். அமைதியே உருவாக, எளிமையாக ஆழ்ந்தடங்கிக் காட்சி தந்தபோது உண்மையிலேயே நான் வியந்துதான் போனேன்.

புலவர்மணி கா.நீலகண்டன் அவர்கள் தனது மாணாக்கர்களுக்கு "ஆதர்ஷ ஆசிரியராக" மட்டும் விளங்காது அவ்வப்போது நூற்றுக்கும் மேற்பட்ட பிரபந்தங்களையும் யாத்தளித்த பெருமைக்குரியவர். தனக்கிருக்கக்கூடிய தமிழ்ப்புலமை, மரபு வழியாகப் புலவருக்கு வந்திருக்கக்கூடிய பெருமை இவை எல்லாவற்றையும் உதறித்தள்ளிவிட்டு எல்லோரிடமும் அன்பாகவும், எளிமையாகவும் பழகுவதை அமரர் தனக்குரிய தனித்துவமான அடையாளமாக வரித்துக் கொண்டிருந்தார். தன்னுடைய பெயரைத் தலைமுறை வழியாகக் காவிச்செல்லக்கூடிய திறமையும், விசுவாசமும் மிக்க மாணவர் குழாம் ஒன்றினையும் அமரர் உருவாக்கத் தவறவில்லை.

தமிழ்ப் பசியுடன் தன்னை நாடிவந்த மாணாக்கருக்குப் போதும் என்ற அளவில் தமிழறிவை ஊட்டிய பெருமகனார். அவர்களின் இன்ப துன்பங்களிலெல்லாம் பங்கெடுத்துக் கொண்ட பெரும் பண்பாளராக விளங்கினார். சொல்லுக்கும் செயலுக்குமிடையே பாரிய இடைவெளிகளைவிட்டுப் போலியாக வாழ்ந்துவரும் "கற்ற கயவருள்ளே" புலவர் மிகப்பெரிய கனவானாக விளங்கினார். மரபுவழித் தமிழ்ப் புலமையுடன் நவீன ஆய்வறிவுத் திறனும், முற்போக்குச் சிந்தனையும் ஒருங்கே வாய்க்கப்பெற்ற புலவர்மணி கா.நீலகண்டன் உண்மையிலேயே வித்தியாசமான ஓர் ஆளுமைதான். இவ்வாறான ஒரு பெருமகனாரை இழப்பது என்பது மனதை நெருடுகின்ற ஒரு சோகம் தான்.

புலவர்மணி கா.நீலகண்டன் அவர்களை எனக்கு அறிமுகம் செய்து வைத்தவர் என் அருமை நண்பர் செ.சுதர்சன். மூல விக்கிரகத்தை அருகிருந்து பார்க்கக் கிடைத்த சந்தோசம் அது. புலவருடைய பெருவிருப்புக்குரிய மாணவராக செ.சுதர்சன் விளங்கினார். புலவரின் புலமை ஊற்று சுதர்சனூடே அரும்பி வெளிப்பட்டு நிற்பதைக் காணும்போது மகனின் பெருமையில் இன்பம் காணும் ஒரு தந்தையாக நான் உருகிப்போகிறேன். ஆசிரியர் அமைவது மட்டுமல்ல நல்ல மாணாக்கர் அமைவதென்பதும் ஒரு வரம்தான் என்பதை நான் மனதார உணர்கிறேன்.

இறுதியாகச் செல்வச்சந்நிதியானின் வெண்மணல் பரப்பிய வெளிவீதியிலே புலவரைத் தூரத்தில் கண்டேன். கதைக்கக் கிடைக்கவில்லை. "நெருங்கி நீளக் கதைக்க வேண்டும்" என நினைத்த அந்த நினைப்புச் சாத்தியமாகவில்லை. நினைப்ப தெல்லாம் நடந்துவிடுமா என்ன? நான் கொடுத்து வைத்தது அவ்வளவுதான். வாழ்வின் நியதிகள் கசப்பானவைதான் என்றாலும் ஏற்றுக் கொள்ளத்தானே வேண்டும்.

புலவருக்குச் சாவில்லை. சாகாவரம் பெற்ற அன்னாரது அருமருந்தான படைப்புக்களினூடும், விசுவாசமும் திறமையும் வாய்க்கப்பெற்ற அவரது மாணவர் பரம்பரையினூடும் அமரர் என்றென்றும் வாழ்வார் என்பது திண்ணம்.



# தமிழ்க்கனி சான்றோன் புலவர்மணி புகழ்

கவிஞர் த.ஜெயசீலன்
பிரதேச செயலர்
வடமராட்சி வடக்கு, பருத்தித்துறை

தமிழெனுங் கடல் ஆழம் அறிந்திடும்
தாகம் கொண்டு.. தலைமுறையாகவே
தமிழுணர்ந்தோரின் சீடராய் நின்று... அத்
தமிழின் ஆழத்தைக் கணிசமாய்த் தேர்ந்து... நற்
தமிழ்ப் பரம்பரை ஒன்றைச் சமைத்து... இத்
தலைமுறைக்கும் தமிழுணர்வூட்டிய
"தமிழ்க்கனி", சான்றோன், "புலவர்மணி", புகழ்...
நீலகண்டனார் பாதம் சரணமே!

உடுப்பிட்டி சிவசம்புப் புலவர்க்கு
உறவில் பூட்டர், மருகனின் மாணாக்கர்.
உடுப்பிட்டி அமெரிக்கமிஷன் கல்லூரிக்கு
உகந்தமைந்தர், பண்டிதமணியிடம்
தொடர்ந்து கந்தமுருகேசனாரிடம்
தொல்தமிழைச் சுவைத்துப் பயின்றவர்.
இடையில் பலாலிஆசிரிய கலாசாலை
என்ற கோவிலில் கற்றும் நிமிர்ந்தவர்.

செம்மொழியினில் ஆழம், பழந்தமிழ்ச்
சீர் இலக்கண இலக்கியப் பரீச்சயம்,
எம்... நிகண்டுதத்துவம் சோதிடம் கற்ற
ஏற்றம், ஆங்கிலம் சமஸ்கிருதத் திலே
செம்மைஞானம், ஆம்... "ஆங்கில இலக்கிய
லண்டன் பீ.ஏ" பட்டம், என... வென்ற

*நம் தலைமகன் நீலகண்டன் திறம்...*
*நம்பெருமையை உயர்த்திடும் நல்வரம்!*
*கந்தவனத்துக் கடவைப் "பழையவர்"*
*கந்தவேளே கதியென் றனுதினம்*
*சிந்தை, சொல், செயல் அர்ப்பணஞ் செய்தவர்.*
*திருப்புகழுக்குப் பிறகு... கடைசியாய்க்*
*"கந்தவனமணி மாலையால்" போற்றினார்.*
*"கந்தவனத்தானே காப்பு... இம் மானுடப்*
*பந்தவனத்துள் அலைவோர்க்கு..." என்று... தான்*
*பயின்ற ஞானத்தால் இறையை அணுகினார்!*

*உடுப்பிட்டி அமெரிக்க மிஷனிலே*
*உபாத்தியாயனாய் ஆங்கிலம் கற்பித்தும்,*
*தடையிலாத் தமிழ் கொண்டுபிரபந்தம்*
*சரமாரியாகநூறுஅருளியும்,*
*நடையில் நின்றுயர் நாயகியோடு... இல்லறத்தில்*
*சேய்களைக் காத்து உயர்த்தியும்,*
*கடமை தீர்த்துவான் போனார், அகம், புறம்*
*கசிந்து போற்றி அன்னார் புகழ் பாடுவோம்!*

மருவே யெனக்கு வாய்த்தகண்ணின்
மணியே தொழுவார்க் கிரங்கியருள்
தருவே யெங்கள் தமிழன்னை
தவமே கந்த வனமேவு
திருவே நாலு மறைக்குமெட்டாத்
தேவே மன்றி லாடுசிவ
குருவே யெளியன் பவரோகங்
கொடுகி யழிய வந்தருளே.

*(கந்தவன மணிமாலை : 12-*
*புலவர்மணி கா.நீலகண்டன்)*



# மண்மறக்க முடியாத மாண்புமிகு மனிதர் புலவர்மணி

பேராசிரியர் துரை. மனோகரன்
முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர்
பேராதனைப் பல்கலைக்கழகம்

உடுப்பிட்டி சிவம்புப்புலவர் (1829 - 1910) இலங்கையின் சிறந்த புலவர்களில் ஒருவர். பத்தொன்பதாம் நூற்றாண்டில் புகழ்பெற்றுத் திகழ்ந்த ஓர் இலக்கியவாதி. அவர் அவரது பரம்பரையில் அவரது பூட்டனாக வந்தவர் புலவர்மணி கா.நீலகண்டன். சிவம்புப்புலவர் பரம்பரையில் கடைசி வாரிசாகவும் விளங்கியவர். ஆறுமுக உபாத்தியாயரின் நன்மாணாக்கராகவும் திகழ்ந்தவர். உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றவர். பழந்தமிழ்ப் புலமை மிக்கவர். அதேபோன்று ஆங்கிலப் புலமையும் நிறைந்தவர். இலங்கையின் பல்வேறு ஆலயங்கள் மீதும் பல பிரபந்தங்களை அவர் பாடியுள்ளார்.

புலவர்மணி கா.நீலகண்டன் பாடிய பிரபந்தங்களில் ஒன்று கந்தவன மணிமாலை ஆகும். 2002இல் அவர் கொழும்பில் இருந்த போது அந்நூல் எழுதப்பட்டது. ஆனால் 2015 இலேயே அது வெளிவந்தது. இதுவே அவர் எழுதி வெளிவந்த இறுதி நூலாகும். பொலிகண்டிக் கந்தவனம் கல்யாண வேலவ சுவாமி மீது பாடப்பட்டது. "பரவு கந்தசுவாமி கானகம்" என்று அருணகிரிநாதரால் பாடப்பட்டது, இத்தலம். இந்நூலைப்

பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை விரிவுரையாளர் செல்லத்துரை சுதர்சன் பதிப்பித்துள்ளார். காப்பு முதல் வாழி வரையிலான 215 பாடல்களைக் கொண்டதாகக் கந்தவன மணிமாலை விளங்குகிறது. அருமையான, அழகான பாடல்களைக் கொண்டதாக இந்நூல் திகழ்கிறது. இந்த நூலில் இடம்பெறும் இனிய பாடல்களில் இரண்டை இவ்விடத்தில் எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

"பூவே பூவின் நறுமணமே
பொன்னே பொன்னின் தண்ணொளியே
பாவே பாவின் றனிச்சுவையே
பரிவே பரிவின் றிருவுருவே
தேவே தேவர் சிறைமீட்ட
சிவமே வளஞ்சேர் கந்தவனக்
கோவே நின்றாள் தஞ்சமெனக்
கொண்டே னென்னை யாண்டுகொள்ளே.

"எந்த வனத்திற் சிக்கினார்க்கு
என்றோ ஒருநாள் மீட்சிகிட்டும்
பந்த வனத்திற் சிக்கினோம்யாம்
பரிந்து மீட்ப ரெவரென்று
நொந்த மனத்த ராகிநிதம்
நுடங்கி யேனோ வழிகின்றீர்
கந்த வனத்தை நண்ணியுள்ளங்
கரைந்து வேண்டி யழுதிரப்பிர்."

இவ்வாறு சுவையான பாடல்கள் பல இந்நூலில் உள்ளன.

புலவர்மணி நீலகண்டனின் பிறிதொரு முக்கியமான பணி உடுப்பிட்டி சிவசம்புப்புலவரின் பாடல்களைச் சுதர்சனோடு இணைந்து உடுப்பிட்டி சிவசம்புப்புலவர் பிரபந்தப் பெருந்திரட்டு என்னும் பெயரில் பதிப்பித்தமையாகும். உடுப்பிட்டி சிவசம்புப்புலவர் (1829 - 1910) என்ற தலைப்பில் ஒரு விரிவான கட்டுரையை அவர் அந்நூலுக்கு எழுதியிருந்தார். அக்கட்டுரையில் சிவசம்புப்புலவர் தொடர்பான பல்வேறு விடயங்களையும் சம்பவங்களையும் அவர் கூறியுள்ளார். இவ்வாறான பணியைச் செய்ய வேண்டும் என்ற ஆவல் அவருக்கு நீண்டகாலமாக இருந்திருக்கிறது என்பதைக் கந்தவன மணிமாலை என்ற நூலில் இடம்பெறும் ஒரு பாடலும் இனங்காட்டுகிறது.

“போற்று தமிழுக்கோ சிவம்புப்
புலவன் செய்த கவிகளையச்
சேற்றி வெளியிட் டுயரறிஞர்
இன்ன வாவைப் பூர்த்திசெயும்
பேற்றை யெளியேற் குற்றருள்வாய்
பேணித் தேகம் விழுமுன்னம்
சாற்ற வொணாச்சீர்க் கந்தவனத்
தளியுற் றாடும் வேலவனே”

என்பது அப்பாடல். அவர் விரும்பியவாறு சிவசம்புப்புலவரின் பாடல்களின் தொகுப்பு வெளிவந்தமை நிச்சயம் அவருக்கு மனநிறைவை ஏற்படுத்தியிருக்கும். பேராதனைப் பல்கலைக் கழகத்தின் முன்னாள் முதுநிலை விரிவுரையாளர் பூ. சோதிநாதன் உடுப்பிட்டிச் சிவசம்புப்புலவர் பிரபந்தப் பெருந்திரட்டு என்னும் நூலின் சாற்றுகவியில் புலவர் நீலகண்டனின் பாரிய முயற்சியைப் பின்வருமாறு மனமாரப் பாராட்டுகின்றார்.

"எண்ணில் அடங்காப் பிரபந்தம்
எளிதில் பாடி முடித்துள்ளார்
அண்ணல் அன்று பாடியவை
அரிதே இன்று பெறமுடியும்
திண்ண மான மனத்தோடு
திரட்டி அவற்றைத் தொகுத்திடவே
எண்ணம் கொண்டார் நீலகண்டன்
என்னும் புலவர் வழித்தோன்றல்."

அரிதின் முயன்று அரியவற்றைச் செய்து அரும்புகழைப் பெற்றவர். புலவர்மணி நீலகண்டன் உடுப்பிட்டிச் சிவசம்புப்புலவர் பற்றிய பெரு நூலில் குறிப்பிடும் ஒரு விடயம் கவனத்திற்குரியது.

"இலங்கைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்ப் பீடத்தை முதல்முதல் அலங்கரித்தவரான சுவாமி விபுலானந்தரவர்களும் (இவர் அண்ணாமலைச் சர்வகலாசாலையிலும் தமிழ்ப்புலமை நடாத்தியவர் என்பதும் நினைவிற் கொள்ளப்பட வேண்டும்) சுவாமிகட்குப்பின் அப்பீடத்தில் அமர்ந்தவரான பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை அவர்களும் சிவசம்புப்புலவர் மாணவ பரம்பரைக்குரியவர்கள். இன்றும் இலங்கைப் பல்கலைக்கழகங்களி ளெல்லாம் சுடரொளி வீசித் திகழுந் தமிழ்ப் புலமையாளர் எல்லாம் சிவசம்புப்புலவர் பரம்பரையினர் என்றே சொல்ல வேண்டும். அல்வைக் கவிஞர் மு.செல்லையா ஈறாக வந்து நிற்பதும் இந்தப் பரம்பரையே. அண்மையில் மறைந்தவரான டாக்டர் பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை அவர்களும் சிவசம்புப்புலவர் பரம்பரைக்குரியவர் என்பதை மறுக்கவோ மறைக்கவோ முடியாது. சிவசம்புலவரின் மாணவர் பரம்பரை ஒன்றுண்டு என்பது பல்லாற்றானும்

மறக்கப்பட்டுவிட்டது. ஆசிரியரால் மாணாக்கரும், மாணாக்கரால் ஆசிரியரும் சிறப்பெய்துவது இயல்பு, மரபு."

என்று முக்கியமான இவ்விடயத்தை அவர் குறிப்பிட்டுள்ளமை வரவேற்கத்தக்கது.

இலங்கையின் மரபுவழிப் புலவர் பரம்பரையின் கடைசி வாரிசு என்று சொல்லக் கூடியவராக வாழ்ந்தவர், புலவர்மணி கா.நீலகண்டன். இலக்கியப்புலமை கொண்ட பல மாணவர்களை உருவாக்கிய பெருமை அவருக்கு உண்டு. அத்தகைய மாணவர்களில் அவரின் கடைசி வாரிசு என்று சொல்லக்கூடியவர் பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை விரிவுரையாளர் செ.சுதர்சன்.

புலவர்மணி கா.நீலகண்டன் வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தவர். வளமான வாழ்வை அனுபவித்தவர். நல்லன நினைத்து நல்லனவே செய்தவர். தமது அறிவுச்செல்வத்தைத் தம்மை நாடிவந்த மாணவர்களுக்கு அள்ளி வழங்கியவர். ஈழநாட்டுப் புலவர் பரம்பரையின் உன்னத வாரிசுகளில் ஒருவராகத் திகழ்ந்தவர். ஆன்மீக வாழ்விலும் அனுபவரீதியாக ஊறித்திளைத்தவர். சைவமும், தமிழும் தமது இரு கண்கள் என வாழ்ந்தவர். இலங்கை மண் ஒருபோதும் மறக்க முடியாத மாண்புமிகு மனிதராக வாழ்ந்து மறைந்தவர் புலவர்மணி கா.நீலகண்டன்.



# நிலைக்கும் நினைவுகள்

திருமதி இராஜேஸ்வரி தில்லையம்பலம்
ஓய்வு நிலைத் தமிழ் ஆசிரியை
புலவர்மணியின் மாணவி மற்றும் மைத்துனி

"குணம் நாடிக் குற்றம் நாடி அவற்றுள்
மிகை நாடி மிக்க கொளல்"
இது வள்ளுவர் நிலையற்ற வாழ்வில் நிலையான ஆசைகளோடு எமக்குத் தந்த அற்புதமான குறள் ஆகும்.

அமரர் கா. நீலகண்டன் ஆசிரியர் அவர்களைப் பற்றி எடுத்துக்கூறுவதானால் நான் சிறுவயதிலிருந்து அவரில் கண்டுகொண்டவை, கண்டிப்புமிக்க ஆற்றல் வாய்ந்த ஒரு நல்லாசிரியர். சமய, தமிழ், ஆங்கில அறிவுமிக்கவர். அதனை மேலும் வளர்ப்பதற்கேற்ற வாசிப்பு ஆர்வம் உடையவர். இலக்கணத்துடன் கூடிய பிழையற்ற உறுப்பமைந்த தமக்கே உரிய தெளிவான எழுத்து ஆற்றல் மிக்கவர். எடுத்த விடயத்தைப் பல பழைய, புதிய நிகழ்வுகளுடன் தொடர்புபடுத்திச் சுவாரசியமாகக் கேட்பவர்களைக் கவரும் வண்ணம் சில சந்தர்ப்பங்களில் சிலேடை, உவமான உவமேயங்களுடன் கூறும் திறமை மிக்கவர். எல்லாவற்றுக்கும் மேலாக நல்ல நோக்கத்துடன் யார் எந்த நேரத்தில் கேட்டாலும் முடியாது என்று கூறாது அவர்கள் கேட்ட செய்யுட்களைச் சுடச்சுடப் படைத்துக் கொடுத்து அந்தப் படைப்பில் தாமும் நிறைவு கொள்வார். மரபுக் கவிதைகளையே

பெருமளவில் புனைந்தாலும் எளிய நடையில் அரிய கருத்துக்களைப் பொதிந்து பாடும் வல்லமை உடையவர் என்பதை உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரிக் கீதத்தில் அதுவும் மறைந்த இசை ஆசிரியர் திரு சதாசிவம் அவர்களின் இசை அமைப்புடன் கேட்பவர் உள்ளம் எல்லாம் உறுதியும் மகிழ்ச்சியும் நெகிழ்ச்சியும் அடையும் வண்ணம் வெளிக்காட்டியுள்ளார்.

19ஆம் நூற்றாண்டின் பெரும்புலவரான உடுப்பிட்டிச் சிவசம்புப் புலவரின் பெருந்தொகை யான பிரபந்தங்களையும் தனிப்பாடல்களையும் சிறுவயதிலிருந்தே தேடிக்கண்டுபிடித்து அவற்றை நூல்வடிவில் கொண்டு வரவேண்டுமென்ற பெருங்குறிக்கோளுடன் அரும்பாடுபட்ட இவர் முயற்சி 2014ஆம் ஆண்டு தை மாதத்தில் அதாவது அவரின் 84ஆவது வயதில் அவரது மாணவனும் இன்றைய பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை விரிவுரையாளருமாகிய திரு செ.சுதர்சன், புலவர்மணியின் மகன் திரு நீ.நித்தியானந்தன் மற்றும் தமிழ் அறிஞர்கள், ஆர்வலர் உதவியுடன் நிறைவு பெற்றது. இந்தப் பெருங்குறிக்கோளின் மூலம் உடுப்பிட்டிச் சிவசம்புப் புலவரை என்றும் தமிழ் கூறும் நல்லுலகம் நினைவில் நிலைக்கக்கூடியதாகச் செய்துள்ளார். இத்துடன் புலவர் மீது பற்றுக்கொண்டவன் என்று மட்டும் இல்லாது அவர் பணியைத் தொடர்ந்து, பல தல ஊஞ்சல்கள், பிரபந்தங்கள் என்பவற்றைப் பாடிப் "புலவர்மணி" என்ற பட்டத்தைப் பெற்றதோடு தம் இறுதிநேர முயற்சியாகக் "கந்தவன மணிமாலையைப் புனைந்து பொலிகண்டிக் கந்தவனம் திருவருள்மிகு ஸ்ரீ கல்யாண வேலவ சுவாமிக்கு" சூட்டியுள்ளார்.

எனது தனிப்பட்ட வாழ்க்கையைப் பொறுத்தவரை எனக்கு அவர் பலதுறைகளில் வழிகாட்டியாக வாழ்ந்தார். முக்கியமாக எனது கல்லூரி, பல்கலைக்கழகக் கல்வி வளர்ச்சிக்கு உற்ற துணையாக இருந்தார். தமிழ் மொழி மூலம் நான் கல்விகற்ற காரணத்தால் ஆங்கிலத்தில் போதிய கவனம் செலுத்தவில்லை. சாதாரண சித்தி மட்டும் பெற்றிருந்தேன். ஆங்கிலப் பட்டதாரிப் பயிற்சி நெறிக்கு நான் தெரிவுசெய்யப்பட்டபோது நான் அதற்குப் போவதற்கு விரும்பாது அடம்பிடித்த போது "உனக்கு ஏதோ தகுதியிருப்பதால் தானே தெரிவு செய்திருக்கிறார்கள். இந்தச் சந்தர்ப்பத்தை நீ உன் ஆங்கில அறிவு விருத்திக்குப் பயன்படுத்திக் கொள்" என எனக்கு அறிவுரை கூறி அனுப்பியதோடு ஆறுமாதங்களில் நான் விசேட சித்தியடைவதற்கும் உறுதுணையாக இருந்தார். இது என் பிற்கால ஆசிரியத் தொழிலை நல்லமுறையில் செய்வதற்குப் பேருதவியாக இருந்தது.

எங்கள் குடும்பத்தில் மனித நேயம், ஆத்மீகம், தமிழ், ஆங்கிலம், கணிதம் என்பவை இணைந்து பயனளித்த இருபாரிய பலன்தரும் விருட்சங்கள் காலத்தின் நியதிக்கேற்பச் சாய்ந்துவிட்டன. இது எமக்கும் சமூகத்திற்கும் பேரிழப்பு. எனினும் இந்த விருட்சங்களின் கிளைகள், விதைகள் எல்லாம் இன்று அறிவும் ஆக்கமும் நிறைந்த மாணவ மணிகளாக உருவெடுத்து அவர்களின் சமூகப் பணிகளை முன்னெடுப்பார்கள் (முன்னெடுக்கின்றார்கள்) என்ற நம்பிக்கை உறுதியாக உண்டு.



# புலவர்மணி : ஒரு புலமையூற்றும் பல ஓட்டங்களும்

பேராசிரியர் வ.மகேஸ்வரன்
தமிழ்த்துறைத் தலைவர்
பேராதனைப் பல்கலைக்கழகம்

இலங்கைத் தமிழ் இலக்கியச் செல்நெறி கூழங்கைத் தம்பிரானில் இருந்து ஊற்றெடுத்துப் பரவியது என்பது வரலாறு. இப்புலமை ஊற்று சம்பந்தப் புலவர், சரவணமுத்துப் புலவர் ஆகியோரிடம் ஒன்றாகக் கற்ற மாணாக்கராகிய ஆறுமுகநாவலர், சிவசம்புப் புலவர் ஆகிய இருபெரும் ஆளுமைகளுடாக ஆறுமுக நாவலர் மரபு, சிவசம்புப் புலவர் மரபு என இரு ஓட்டங்களாகப் பின்னர் பிரவாகித்தது.

சிவசம்புப் புலவர் புலமை மரபு ஈழத்துக்கு அணியாய் ஆன்ற புலமை பெருக்கியதாய் அமைந்துள்ளது. கம்பன் பாடும் கோதாவரியாய் தண்நிறை ஒழுக்கம் தழுவிய ஈழத்துத் தமிழ்ச் சான்றோரின் வித்துவத்தை விரித்துச் சென்றது. சிவசம்புப் புலவர் புலமை மரபே என்றால் அது மிகையாகாது. செழுமை மிக்க ஈழத்துத் தமிழ்ப் புலமைப் பாரம்பரியத்தின் ஊற்றுக்களையும் ஓட்டங்களையும் சிவசம்புப் புலவர் மரபினூடாகவும் காணமுடியும்.

சிவசம்புப் புலவருடைய மாணவர் புலோலி வைத்தியலிங்கதேசிகர். இவர் காரைதீவில் இருந்தவர். இவரது மாணவரே எமது

பல்கலைக்கழகத் தமிழ்த்துறையின் முதல் தலைவரும் பேராசிரியருமாகிய சுவாமி விபுலானந்தர் ஆவார். சுவாமி விபுலானந்தரின் மாணவரே பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை அவர்கள். இந்த மரபு இன்னும் இன்னும் விரிந்து தொடரும். இது சிவசம்புப் புலவர் கல்வி மரபு நவீன நிறுவனக் கல்வி முறையினூற்றாக அமைவதை, தொடர்வதைக் காட்டி நிற்கிறது.

சிவசம்புப் புலவரின் மாணவர் சுன்னாகம் முருகேச பண்டிதர். பண்டிதரின் மாணவர் அ.குமாரசாமிப் புலவர். இந்த மரபும் இன்னும் இன்னும் விரிந்து தொடரும். இது சிவசம்புப் புலவரின் மரபுக் கல்வியின் தொடர்ச்சி ஓட்டத்தைக் காட்டுகிறது.

இவ்விரு மரபும் இணைந்த ஒருவரே புலவர்மணி நீலகண்டன் அவர்கள். புலவர்மணி, சிவசம்புப் புலவரின் நேரடி மாணாக்கர், ஆறுமுக உபாத்தியாயரின் நேரடி மாணவர் ஆவார். சிவசம்புப்புலவரின் பூட்டன் ஆறுமுக உபாத்தியாய ருக்குப் பாட்டன்.

புலவர்மணி மரபுக் கல்வியிலும் நவீன கல்வியிலும் தேறிய ஒரு ஆளுமை. நூறுக்கும் மேற்பட்ட பிரபந்தங்களை அவர் எழுதியுள்ளார். பெரும் புலமையாளராக இந்த நூற்றாண்டின் முற்பகுதி வரை வாழ்ந்த அவர், தமது வீட்டிலே தமிழ்ப்பாட வகுப்பு இலவசமாக நடத்தியவர். கல்லூரியில் இலண்டன் ஆங்கில பரீட்சையில் தேறிய ஒரு ஆங்கில ஆசிரியர்.

இலங்கைத் தமிழ்ப் புலமைத்துவத்தின் அடையாளமாகிய அவர் சிவசம்புப் புலவர் பெருந்திரட்டு வெளியீட்டு விழாவிற்கு வருமாறு என்னைத் தொலைபேசி வாயிலாகவும் திருமுக வாயிலாகவும் கேட்டுக்கொண்டார். எமது பல்கலைக்கழகத்தையும், தமிழ்த்துறையையும் தாய்ப் பல்கலைக்கழகம் என்றும் தாய்த் தமிழ்த்துறை என்றும் அப்போது அவர் மனதாரக் கூறியது இப்போதும் என் காதில் ஒலித்தவண்ணம் உள்ளது. நான் வெளியீட்டு விழாவிற்குச் சென்றபோது அவரின் அடக்கம், எளிமை, புலமை அறிந்து வியந்துபோனேன். அந்த நாள் என் வாழ்வில் மறக்கமுடியாத பெருநாள். அரங்கில் எனது ஆய்வுரையைக் கேட்டு எனக்கு ஆசி தந்தார். அத்துடன் நினைவு விருதும், விருந்தும் தந்து பேராதனைவரை வாகனத்தில் அனுப்பியும் வைத்தார்.

காலன் அவரைக் கவர்ந்து சென்றுவிட்ட போதும் அவரது புலமை ஓட்டம் நின்றுவிட வில்லை. அவர் விதைத்த வித்துக்கள் நாளை பெருமரங்களாகும். விழுது எறியும் காலம் வந்துள்ளது. அவரது புலமைப் பாரம்பரியம் இவ்வாறு தொடரும். அவரது பிரபந்தங்களும் ஒரு பெருந்திரட்டாக வெளிவரவேண்டும்.

அவரின் பிரிவால் துயருறும் அவரின் மகன் நித்தியானந்தனுக்கும் மகள் தாரணிக்கும் மாணவன் சுதர்சனுக்கும் என் அனுதாபங்கள். புலவர்மணி ஈழத்துப் புலமையூற்றுக்களில் ஒருவர். அவரது புலமைத்திறன் பல புலமை ஓட்டங்களுக்குக் காரணமாகியமை சிறப்பிற்குரியது. அவரது மாணவர் அவரைத் தொடர்வர் என்பது எனது நம்பிக்கை.



# பூசு நீறுபோல் உள்ளமும் புனிதர் உத்தம ஆசான்

உடுவை எஸ். தில்லை நடராசா
பொதுச்சேவைகள் ஆணைக்குழு
இலங்கை

ஆறாம் வகுப்பு என்ற நினைவு...! ?....ஆம் ! அந்த நினைவு சரிதான் !

1958 ம் ஆண்டில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் ஆறாம் வகுப்பின் ஆரம்பத்தில் எங்கள் வகுப்புக்கு தமிழ்ப்பாடம் கற்பிக்கும் ஆசிரியராகவும் சாரண ஆசிரியராகவும் திருமிகு. நீலகண்டன் ஆசிரியரை அறிந்து கொள்கின்றோம். ஆசிரியரைப்பற்றி சிறு வயது மாணவர்கள் எங்களுக்குள் பரிமாறிக்கொண்ட அபிப்பிராயங்கள் பல இன்னும் என் நினைவில் பசுமையாக...

எங்கள் கல்லூரியில் அக்காலத்தில் கல்வி கற்பித்த ஏனைய ஆசிரியர்களோடு ஒப்பிடும் போது உயரத்தில் சற்று குறைவானவராகவும், மெலிந்த தோற்றம் கொண்டவராகவும் எமது பார்வையில் தெரிந்தவர் ஆசிரியர் நீலகண்டன். அவரது அரைக்கை சேர்ட்டும்- சேர்ட்டுக்கு மேலால் வேட்டி கட்டும் பாணியும் ஒரு வகையான சிரிப்புடன் கூடிய துள்ளல் நடையும் சுறுசுறுப்பான செயற்பாடுகளும் ஆசிரியர் நீலகண்டனை ஏனைய ஆசிரியர்கள் பலரிலிருந்து வேறுபடுத்திக் காட்டியது. பெரும்பாலும் தூய வெள்ளை நிறத்தில் அல்லது மிக மெல்லிய பச்சை நிறத்தில் நீளக்கை சேர்ட் அணியும் நாட்களில் முழங்கை வரை உருட்டி

விட்டிருப்பார். பொன்னிறமான அவர் நெற்றிக்கு திருநீறு சுந்தரப் பொலிவைக் கொடுத்தது. சில நேரங்களில் நெற்றியில் பொட்டுடனும் காதில் பூவுடனும் பார்த்ததாக நினைவு.

நடை உடை தோற்றத்தால் சில ஆசிரியர்களைப் பார்த்த மாத்திரத்தில் பயப்படத் தொடங்கிய என் போன்றவர்களுக்கு நீலகண்டன் ஆசிரியரைப் பார்த்ததும், அவரை எளிதாகச் சமாளித்துக் கொள்ளலாம் என்ற எண்ணமும் இருந்தது. சொல்லி வைத்தது போல கரணவாய் என்றழைக்கப்பட்ட அயலூர் கிராமத்திலிருந்து ஆசிரியரின் பெயரைக் கொண்ட மாணவன் ஒருவனும் புதிதாக எங்கள் வகுப்பில் சேர்ந்து கொண்டான். முதல் நாள் வகுப்பறையில் மாணவர்கள் நாங்கள் ஒவ்வொருவரும் எங்கள் பெயரைச் சொல்லி மாணவர்களாகிய எங்களை ஆசிரியர் நீலகண்டனுக்கு அறிமுகம் செய்யத் தொடங்கினோம்.

மாணவனாகிய நீலகண்டனும் எழுந்து நின்று, “வணக்கம் சேர். எனது பெயர் நீலகண்டன்” என்றதும் ஆசிரியர் நீலகண்டன் சிரித்துக் கொண்டே, “நல்லது நான் இரு” என்றார். நீலகண்டன் ஆசிரியரோடு சேர்ந்து நாங்களும் நன்கு சிரித்தோம்.

எங்கள் வகுப்பிலுள்ள மற்ற மாணவர்களின் பெயர்களைச் சொல்லி “இரு”-“எழும்பு”-“புத்தகத்தை வாசி”- “பதில் சொல்லு” என்று கட்டளைகளைப் பிறப்பிக்கும் போது, மாணவன் நீலகண்டனின் பெயரைச் சொல்லாமல், “நான்

எழும்பு"-"நான் சொல்லு" என்று ஆசிரியர் சொல்லும்போது வகுப்பறையில் பெரிய சத்தத்திலான சிரிப்பொலி அலை மோதும்.

சிரிப்பொலி அலைமோதியதெல்லாம் சில நாட்களுக்குத்தான். "நீலகண்டன் ஆசிரியரைச் சமாளித்துப் போடுவம்" என எங்கள் மனதில் இருந்த எண்ணம் படிப்படியாக மாறத் தொடங்கியது. வகுப்பறையில் நுழையும்போது எங்களது "வணக்கம் சேர்" என்னும் வரவேற்புக்குப் பதிலாக- புன்சிரிப்புடன் பதில் வணக்கம் சொன்னாலும், எங்களால் எள்ளளவேனும் அலட்சியம் செய்ய முடியாத வகையில் அக்கறையுடனும் ஆர்வத்துடனும் கூடியவகையில் கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகள் தொடர்ந்தன.

மாணவர்களாகிய நாங்கள் வழிமாறிப் போகும்போது வாங்கிக் கட்டிய நிகழ்வொழுங்குகளும் கிரமமாக நடந்தேறின. அப்படியான சந்தர்ப்பங்களில் ஆசிரியர் நீலகண்டன், " அடியைப் போல அண்ணன் தம்பி..." என ஆரம்பிக்கும் வார்த்தைகளைச் சொல்லி முடிக்காமல் இழுத்துக் கொண்டு செல்லும் போது, "...உதவான்" என்று நாங்களே சொல்லி முடித்ததும், ஆசிரியர் சிரித்துக் கொண்டே, "அப்ப வா.." என அழைத்து மூங்கில் பிரம்பால் சாத்திய நினைவுகளும் இன்னும் எனது மனத்திரையில்... அப்போதெல்லாம் அடி வாங்கியது மெல்லிய வலி போலத் தெரிந்தாலும் - அவை எம்மை நெறிப்படுத்திய நல்ல வழிகளாக இப்போது உணர முடிகிறது.

முறையான கல்வியும் நல்லொழுக்கமும் மாணவர்களால் சிறந்த முறையில் பின்பற்றப்பட வேண்டுமென்பது அவரது எதிர்பார்ப்பு. ஏதாவது ஒன்று குறையும்போது தண்டனைக்கு ஆளானோம். தண்டனை மூன்று வகைப்படும். "பிரப்பம் பழ தண்டனை" தான் ஆகக் குறைந்தளவு தண்டனை. "கிட்ட வா" என்று உரத்த குரலில் கூப்பிடும்போது, கூப்பிடும் தொனியும், அவர் கரத்தில் நர்த்தனமிடும் பிரம்பும் மனதில் ஒருவகைப் பயத்தை ஏற்படுத்தினாலும் அடிகள் உறைத்ததாக யாரும் முறைப்பட்டதாக உணரமுடியவில்லை. காலப்போக்கில் திருக்குறள் படித்தபோது. "கடிதோச்சி மெல்ல எறிக..." என்ற குறளை ஆசிரியர் நீலகண்டன் பின்பற்றியதை விளங்கிக் கொள்ள முடிந்தது. அதாவது அவரின் ஏச்சும் பேச்சும் மனதில் படிந்ததைப் போல பிரம்பால் வழங்கிய அடிகள் உடலை நோக வைக்கவில்லை.

அடுத்த வகையான தண்டனையை, "நுள்ளு ஸ்பெசல்" என்போம். அவரது பெரு விரலுக்கும் ஆட்காட்டி விரலுக்கும் இடையில் மாணவரது முழங்கைக்கு மேலுள்ள சதைப் பகுதி அகப்படும்போது, "ஆ..." என்ற மாணவரது சத்தமும், நிலத்திலிருந்து சில அங்குல உயரத்துக்கு மேலும் மேலும் எழும் குதிக்காலும் மீண்டும் தவறிழைக்கும் சந்தர்ப்பத்தைத் தவிர்த்துக் கொள்ளும்.

மூன்றாவது வகையான தண்டனைதான் அதிக பட்ச தண்டனை., அந்த வகையான தண்டனையை அனுபவித்தவர்கள் மிகக்குறைவு தான். உள்ளங்கைகள் இரண்டையும் ஒன்றுடன்

ஒன்றைச் சேர்த்து, மூன்று பென்சில்களை விரல்களுக்கிடையில் வைத்து, தமது கைகளைத் தாங்களே மேசையில் ஓங்கி அடிக்கும்போது தண்டனையின் அளவைப் புரிந்து கொள்வர்.

அநேகமாக ஒரு முறை ஆசிரியர் நீலகண்டனால் தண்டிக்கப் பெற்றோர் மறுமுறை தண்டிக்கப்பட்ட நிகழ்வு குறைவு என்று சொல்வதைவிட இல்லை என்பது பொருந்தும். அதனால் எங்களை நாங்களே உணர்ந்து கொள்ள தவறுவிடும் சந்தர்ப்பங்கள் இல்லாமலே போய் விட்டது.

அவருக்கே உரித்தான பாணியைத் தெரிந்து கொள்ள எனக்கு இன்னொரு சம்பவம் நிகழ்ந்தது.

1960 என நினைவு. தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய வருடாந்த உற்சவ காலத்தில் சாரணர்களை ஆசிரியர் நீலகண்டன் அழைத்துச் சென்று, ஆலயத்துக்கு அருகாமையில் கூடாரம் அமைத்து தங்க ஒழுங்குகள் செய்தார். கோவிலிலும் சுற்றுப்புறங்களிலும் ஆலய நிர்வாகத்துக்கும் பொலிசாருக்கும் உதவியாகக் கடமையாற்றினோம். கடமை தவிர்ந்த நேரங்களில் சமையல், தையல், முதலுதவி என்று வாழ்க்கைக்குத் தேவையான பல விடயங்களைப் பயின்று கொள்ள ஒழுங்குகள் செய்யப்பட்டன.

இரவு வேளையில் உணவையடுத்து காம் பயர் (CAMP FIRE) என்ற நிகழ்வு நிலவொளியில் வெளியில் நடுவே விறகுகளால் தீ மூட்டி, அதைச் சுற்றி ஆடுவோம்.., பாடுவோம்.., நாடகம்

நடிப்போம், கதை சொல்வோம்., கருத்துகளும் பரிமாறிக் கொள்வோம். ஒரு நாள் இரவு வெளியே சென்ற ஆசிரியர் நீலகண்டன் வெகுநேரமாகியும் திரும்பி வரவில்லை. சக மாணவ நண்பர்கள் என்னை உற்சாகப்படுத்தி சூடேற்ற நான் சில ஆசிரியர் களைப் போல. கல்லூரியின் ஏனைய ஊழியர்களைப் போல மிமிக்கிரி செய்ய ஆரம்பித்தேன். அந்த ஆசிரியர் பட்டியலில் சாரண ஆசிரியர் நீலகண்டனும் உள்வாங்கப்பட்டார். அவரது உயரம் குறைந்த மெல்லிய தோற்றத்தை மையமாக வைத்தே எனது நையாண்டி நடிப்பு அரங்கேறியது.

எல்லோரும் நன்கு இரசித்துக் கொண்டே சிரிக்கையில் ஒருவன் மாத்திரம் கண்களாலும் கைகளாலும் என்னைத் திரும்பிப் பார்க்கும்படி சைகை செய்ய, மெதுவாகத் திரும்பிப் பார்த்தேன். அங்கே ஆசிரியர் நீலகண்டன். அன்று எனக்குக் கிடைத்த தண்டனை சற்று வித்தியாசமானது.

“உருவு கண்டு எள்ளாமை வேண்டும்” என்று சொல்லி விட்டு, ‘விளங்குதோ ?’ எனவும் கேட்டார். நான் இல்லை என்பதன் அடையாளமாக தலையை ஆட்டினேன். திருக்குறளில் வினைத்திட்பம்’ அதிகாரத்தில் “உருவு கண்டு எள்ளாமை வேண்டும்” குறளைப்படி விளங்கும்.. என்றார்.

அதன் பின்னர்தான் கல்லூரியில் சகல ஆசிரியர்களையும் இவர், “சேர்” என்றும் “மாஸ்டர்” என்றும் பண்பாக அழைத்ததன் பக்குவத்தை உணர்ந்து கொள்ள முடிந்தது. மாணவர்களுக்கு மட்டுமல்ல சில ஆசிரியர்களுக்கும் முன்மாதிரியாக வாழ்ந்து காட்டியமைக்கு பல உதாரணங்களைக் காட்டலாம். அவரின் உதாரணங்களையும்

முன்மாதிரிகளையும் பல மாணவர்கள் பின் பற்றத் தொடங்கியமையும், அங்ஙனம் பின்பற்றியோர் வாழ்க்கை வளமாக அமைந்ததையும் அவதானித்துள்ளேன்.

மாணவர்களைப் பல தரப்பட்ட நூல்களை வாசிக்கவும், வாசிப்பிலிருந்தும் அவ்வப்போது அவதானித்தவற்றிலிருந்தும் எழுத்தாக்கங்களைச் சமர்ப்பிக்கவும் உற்சாகப்படுத்தி விடுவார்.

எனது ஊர், நான் படிக்கும் பாடசாலை, கல்லூரியில் நடந்த கலைவிழா ஆகிய தலைப்புகளில் ஆசிரியர் நீலகண்டனின் கட்டளைக் கிணங்க கட்டுரைக் கொப்பியில் எழுதினாலும், அவை எனது மாணவப் பருவத்திலேயே பிரபல பத்திரிகைகளில் பிரசுரமாகும் தரத்தையும் பெற்றுக் கொண்டதற்கு ஆசிரியர்களுக்கு நன்றி தெரிவிப்பது என்கடன்.

இன்னொரு சம்பவம்:- அந்த நாட்களில் இந்தியாவிலிருந்து வரும் வாராந்த சஞ்சிகையான “குமுதம்” இதழைக் கையில் எடுத்தால் மனதை மயக்கும் நறுமணம் நாலாபுறமும் பரவும். குனேகா சென்ட் என அழைக்கப்படும் வாசனைத்திரவியம் குமுதம் வார சஞ்சிகையின் பின்புற அட்டையில் பூசிவிடுவதால் அந்த வாசனை என்பதை அறிந்து யாழ்ப்பாணத்தில் ‘தமிழ்ப்பண்ணை’ புத்தக சாலையில் அதனை வாங்கி சிறிய பஞ்சில் குனேகா வாசனைத் திரவியத்தைத் தடவி காதில் வைத்துக்கொண்டு கல்லூரிக்குச் சென்றேன்.

கல்லூரி மாணவர்களுடன் சேர்ந்து ஆசிரியர்களும் என்னைச் சற்று வித்தியாசமாகப் பார்க்க, ஆசிரியர் நீலகண்டன் காரணத்தைக்

கேட்டார். நான் சென்ட் பூசியிருப்பதாகச் சொன்னேன். அவர் சென்ட் என்ற வார்த்தைக்கு SPELLING என்னவென்று கேட்டு, எழுத்துக் கூட்டும்படி சொன்னார்.

நான் SENT என்றேன். அவர் உடனே நீ சொன்னது Past tense of SEND... சரியான Spelling CENT என்று சொல்லித் திருத்தினார். எனக்கு மட்டுமல்ல மற்ற மாணவர்களுக்கும் நேரம் காலம் இடம் பார்க்காமல், யாருடைய மனமும் நோகாமல் மனதில் நிலைத்து நிற்கத்தக்க வகையில் பள்ளிக்கூடப் பாடங்களுக்கு அப்பாலும் அறிவையும் அனுபவங்களையும் பகிர்ந்து கொண்டார்.

*1999* ல் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில், நடை பெற்ற எனது நூல் வெளியீட்டில் ஆசிரியர் கவி வாழ்த்துப் பாடி, ஆசிரியர் என்னை ஆசிர்வதித்தையும் எனது கலை இலக்கிய ஈடுபாட்டினைப் பாராட்டியதையும் நினைத்துப் பார்க்கின்றேன்.

இப்படி ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஒவ்வொன்றை இன்றும் நினைத்துப்பார்க்க ஒருபுறம் அவரது மாணவனாக இருந்தது பெருமை., எனினும் அவரது இழப்பு எம்மவருக்கு ஒருபோதும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பு என்றே உணர வைக்கின்றது.

உடுப்பிட்டிச் சிவசம்புப் புலவரை உலகமெங்கும் அறிந்து கொள்ள வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்தவர். *1829-1910* காலப்பகுதியில் ஈழத்தில் சிறப்புற வாழ்ந்த

தமிழ்ச்சுடர் சிவசம்புப் புலவரின் பிரபந்தப் பெருந்திரட்டுகள் முழுவதும் நூலாக்கி, **2014** ம் ஆண்டில் பல்கலைக்கழக புலமைசார் அறிஞர் பெருமக்களை புலவரின் பிறந்த ஊரான உடுப்பிட்டிக்கு அழைத்து, அவர்களின் பங்களிப்புடன் நூலை வெளியிட்டு, அந்நூலினை உலகமெங்கும் உலவ வழிகாட்டிய பெருமையையும் உடுப்பிட்டிச் சிவசம்புப் புலவரின் பேரனான அமரர் நீலகண்டனுக்கு உரியது.

தமிழ் ஆங்கிலம் சமஸ்கிருதம் ஆகிய மொழிகளில் ஆழ்ந்த புலமை மிக்க ஆசிரியர் நீலகண்டன் நூற்றுக்கு மேற்பட்ட பிரபந்தங்களை யாத்துள்ளதாகவும், கடைசியாக அவர் அமரத்துவம் அடைவதற்கு சில தினங்கள் முன்னதாக கந்தவன மணிமாலை என்னும் பிரபந்தத்தை யாத்ததாக பேராதனை பல்கலைக்கழக விரிவுரையாளர் செல்லத்துரை சுதர்சன் ஓரிடத்தில் குறிப்பிட்டுள்ளார்.

ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு என்பது போல அவர் உருவாக்கிய நூற்றுக்கணக்கான மாணவர்களில் நானும் ஒருவன் என்ற நன்றியுடன், ஆசிரியப் பெருந்தகை அமரர் நீலகண்டனின் ஆத்மா சாந்தியடையவும், அவரது பிள்ளைகள் என்றும் நல்வாழ்வுபெறவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.



# ஈழத்து இலக்கியத்துக்கு வடமராட்சி தந்த பெரும் அறிஞர்

பேராசிரியர் செ.யோகராசா
மொழித்துறை
கிழக்குப் பல்கலைக்கழகம்

உடுப்பிட்டிப் புலவர்மணி நீலகண்டன் அவர்கள் இயற்கையெய்திய செய்தி எம்மைப் பெரும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கியது. எழுபதுகளில் இருந்து அவருடன் பழகும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. ஈழத்து மரபுவழிப் புலவர்கள் பற்றிய எனது பல்கலைக்கழகக் கல்விக்கான தேடலின்போது எனக்கு அறிமுகமானவர் புலவர்மணி நீலகண்டன் ஆசிரியர். அவரை அவரது புலவர் இல்லத்தில் சந்தித்து உரையாடியிருக்கின்றேன்.

புலவர்மணியின் அமைதியும் எளிமையும் என்னை மிகவும் கவர்ந்தவை. அவரைச் சந்தித்த வேளைகளில் அவரது புலமைத்திறனைப் பார்த்து வியந்துபோயிருக்கிறேன். அவர் அபார ஞாபகசக்தி உடையவர்.

பத்தொன்பதாம் நூற்றாண்டிலும் இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் வாழ்ந்த சிவசம்புப் புலவரின் பாடல்கள் அனைத்தையும் தமது நினைவில் இருந்து எடுத்துச் சொல்லும்விதம் என்னை அதிசயிக்க வைத்தது. பாடல்களைக் கூறும்போது அதனைச் சந்திபிரித்துக் கூறும் விதமும் அவர் கூறும் தொனியில் உள்ள ஏற்ற

இறக்கங்களும் பொருளை இலகுவாக விளங்க வைத்துவிடும். எனக்குத் தெரிந்தவரையில் பல ஆண்டுகளாக தனது நினைவில் சிவசம்புப்புலவரின் பாடல்கள் அனைத்தையும் சுமந்து நின்ற பெரியவர் அவர்.

புலவர்மணி இல்லாதுவிட்டால் தமிழ் இலக்கிய வரலாற்றில் சிவசம்புப்புலவரின் இடத்தை நிரப்பியிருக்கப் பெரும் பிரயத்தனப்பட்டிருப்போம். அவரது அபிமான மாணவரும் பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை விரிவுரையாளருமான செ.சுதர்சனின் துணையோடு பிரபந்தத் திரட்டை வெளிக்கொணர்ந்தமை ஈழத்து இலக்கிய வளர்ச்சியில் முக்கியமான ஒரு நிகழ்ச்சியாகும்.

புலவர்மணி இயற்றிய பல பிரபந்தங்களும் தொகுத்து வெளியிடப்படவேண்டும். இருபதாம் நூற்றாண்டில் பல புதுமையும் எளிமையும் நிறைந்த நூறுக்கும் மேற்பட்ட பிரபந்தங்களை அவர் இயற்றியுள்ளார். அவற்றில் சிலவே என் பார்வைக்கு எட்டின. அவை யாவும் சிறுசிறு தொகுதிகளாக அவரின் நினைவாக ஆண்டுதோறும் வெளிவரவேண்டும். இதனை நிறைவேற்றி புலவர்மணியின் வழியிலே தமிழை வளம்படுத்துவது அவரின் பிள்ளைகளுக்கும் மாணவருக்குமான பெரும்பொறுப்பாகும். புலவர்மணி தமது படைப்புக்கள் ஊடாகவும் தமது மாணவர் சுதர்சனின் ஆக்கபூர்வமான இலக்கியச் செயற்பாடுகள் ஊடாகவும் எப்போதும் இலக்கிய உலகில் நினைவுகூரப்படுவார்.

*ஈழத்து இலக்கிய வளத்துக்கு வடமராட்சி தந்த பெரும் அறிஞர்களில் புலவர்மணியும் ஒருவர். ஈழத்து மரபு இலக்கிய வளர்ச்சியிலும் முக்கியமான ஒருவர். அத்தகைய பெரியவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறேன்.*

மூன்று கண்ணான் றந்தபிரான்
மூன்று தமிழைத் தந்தபிரான்
தேன்றார் நீபஞ் சூடுபிரான்
தேவர் சிறையை மீட்டபிரான்
தோன்றாத் துணையா யுள்ளபிரான்
துதிப்போ ரகத்து மேவுபிரான்
வான்றா னென்ன விளங்குகந்த
வனத்தில் நீங்கா துறைபவனே.

*(கந்தவன மணிமாலை : 8-*
*புலவர்மணி கா.நீலகண்டன்)*



# சுத்தமனத்தொடு சுந்தரத் தமிழ் வளர்த்த புனித ஆத்மா

வல்வை ந.அனந்தராஜ்
முன்னாள் அதிபர்
உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி

"அனந்தராஜ்..! நீங்கள், எங்களுடைய கல்லூரிக்கு அதிபராக வந்ததையிட்டு மிகவும் மகிழ்ச்சியாக இருக்கின்றது..." நான் 1991 ஆம் ஆண்டு நான் படித்த கல்லூரிக்கே அதிபராக நியமனம் செய்யப்பட்ட பொழுது, நான் கடமை ஏற்ற அன்று பிற்பகல், எங்களுடைய விளையாட்டு மைதானத்திற்குச் சற்றுத் தள்ளி இருந்த, "நீலகண்டன் சேரின்" வீட்டிற்குச் சென்று சந்தித்த பொழுது, எனது இரு கைகளையும் இறுக்கமாகப் பற்றிக் கொண்டு அவர் தூய தமிழில் மிக அழகாகக் கூறிய அந்த வார்த்தைகளால் எனது நெஞ்சம் நெகிழ்ந்தது. அப்பொழுது, அவர் ஓய்வு பெற்றுத் தனது மனைவி மற்றும் மகளுடன் இருந்தார்.

"நீலகண்டன் சேர்" காலமாகிவிட்டார் என்ற அந்தத் துன்பகரமான செய்தியை நான் அந்தநேரம் கனடாவில் இருந்ததால், பத்து நாட்களின் பின்னரே அறியக் கூடியதாக இருந்தது.

புலவர்மணி, என்று பெருமையுடன் பேசப்பட்டாலும், அவர் எங்களுடைய ஆசான் என்பதை நினைக்கும் பொழுது தான் இன்னும் கூடிய பெருமையாகவும், அவரிடம் நான் கற்றவன் என்ற வகையிலும்,அவரால் மதிக்கப்பட்ட ஒரு

மாணவன் என்ற வகையிலும் நினைத்துப் பார்க்கும் பொழுது, அவருடைய மறைவின்பொழுது, நான் அவரது புகழுடலைத் தரிசிக்க முடியவில்லையே என்ற ஏக்கம் தான் அதிகமாக வாட்டுகின்றது.

நான் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் ஆறாம் வகுப்பில் சேர்ந்து கற்பதற்காகச் சென்றபொழுது, அவரிடம் ஆங்கிலம் படித்திருக்கின்றேன், நல்ல தமிழைக் கற்றிருக் கின்றேன், கணிதத்தையும் கூடச் சுவையாகக் கற்றுத் தந்திருக்கின்றார் என்றால், அவருடைய ஆளுமை மிக்க பன்முக ஆற்றலை எண்ணி வியந்திருக்கி ன்றேன். அந்த நாட்களில், எங்கள் எல்லோரையும் எதையாவது வாசிக்க வேண்டுமென்ற ஆர்வத்தை ஏற்படுத்தியவர்களுள் நீலகண்டன் சேரும் ஒருவர்... இதற்கு அவரது, புலமைப் பாரம்பரியம்தான் காரணமாக இருந்திருக்க வேண்டும்.

ஆறுமுகநாவலர் காலத்தில் வாழ்ந்து, அவர் ஆற்றிய சமய, இலக்கிய, நூல்வெளியீட்டுப பணிகளைப் போன்று, உடுப்பிட்டியில் பிறந்து, தமிழகமெங்கும் புகழ்பரப்பிப் பெயர்பெற்ற உடுப்பிட்டி சிவசம்புப் புலவரின் பூட்டன் என்பதாலும், அப்புலவரின் நேரடி மாணாக்கரும், மருமகனுமான ஆறுமுக உபாத்தியாயரின் மாணவராக இருந்ததாலும் தமிழில் பாண்டித்தியமும் படைப்பாற்றலும் இயல்பாகவே அவரிடமும் வந்து சேர்ந்திருக்கின்றது.

இன்று “உடுப்பிட்டி” என்றால் அந்த நகரத்திற்குப் பெருமை சேர்த்த ஒருவராக வாழ்ந்தவர் உடுப்பிட்டி சிவசம்புப் புலவர். உடுப்பிட்டி உலகளாவிய ரீதியில் பெருமையுடன்

பேசப்படுகின்றது. அவரது வழித்தோன்றலாக உதித்து மீண்டும் உடுப்பிட்டியின் பெயரைப் பெருமைப்படுத்திய எங்கள் பெருமைக்குரிய ஆசான், "நீலகண்டன் சேர்" அமரத்துவம் அடைந்து விட்டார் என்பதை நினைக்கும் பொழுது, அவரையும், அவரது ஆளுமையையும் ஈடு செய்வதற்கு எதிர்காலத்தில் யார் ஒருவர் பிறப்பெடுப்பார் என்றே எண்ணத் தோன்றுகின்றது.

1930 ஆம் ஆண்டில் இந்த மண்ணில் அவதரித்த எங்களுடைய நீலகண்டன் சேரின் கல்வி உயர்ச்சியிலான விடாமுயற்சியும், கல்வி கற்றலினூடாக அவர் அடைந்த வளர்ச்சியும், அவற்றால் அடைந்த பெருமையும் தான் என்னைப் போன்ற மாணவர்களுக்கான ஒரு உந்து சக்தியாக இருந்தது. அவர் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியிலேயே தனது முழுமையான ஆரம்ப, இடைநிலைக் கல்வியைப் பெற்றதன் பின்னர், அவர் ஒரு பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியராக இந்தக் கல்லூரிக்கே நியமிக்கப்பட்டுத் தன் ஆசிரியப் பணியைத் தான், கற்ற கல்லூரியிலேயே ஆரம்பித்தார்.

ஒரு நல்ல ஆசிரியர் எப்பொழுதும் கற்றுக் கொண்டே இருக்கவேண்டும். அப்பொழுது தான் ஆற்றல் மிக்க ஆளுமை படைத்த நல்ல மாணவர்களை உருவாக்க முடியும் என்பதற்கு ஒரு குறியீடாக நீலகண்டன் சேர், தனது ஆசிரியப் பணியை அர்ப்பணிப்புடன் மேற்கொண்டார்... அவர் சாதாரண ஒரு பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியராகத் தனது பணியை ஆரம்பித்து, தமிழில் உயர் கல்வியைப் பெறவேண்டுமென்பதற்காகப்,

பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை புலோலி தமிழ்த் தாத்தா கந்தமுருகேசனார் ஆகியோரிடமும் சென்று, சில காலங்கள், கற்று பழந்தமிழ் இலக்கணம், இலக்கியம், நிகண்டு, தத்துவம், சோதிடம் ஆகியவற்றில் தேர்ச்சி பெற்றார்.

இத்தனை அருமையான இலக்கிய முயற்சிகளுக்கும் மேலாக, புலவர்மணி அவர்களினால் உணர்வு பூர்வமாக எழுதப்பட்ட எங்களுடைய கல்லூரியின் கீதமான,

"வாழிய வாழிய வாழியவே" உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி வாழிய வாழியவே..." என்று தொடங்குகிறது. இடையில் இடம்பெறும், "தன்னலம் நீக்கி இன்னலைப் போக்கி, தாய்த்திரு நாட்டினுக்காய்த் தினம் வாழ்ந்திடும் உன்னத வீரரை ஒய்விலாதாக்கி" என்ற அந்தத் தீர்க்கதரிசன மிக்க பாடல் அடிகளைக் கொண்ட அர்த்தம் நிறைந்த "கல்லூரிக் கீதம்" இன்றும் கூட உயிர்த்துடிப்புடன், எல்லோரினதும் காதுகளில் ஒலித்துக் கொண்டே இருக்கின்றது. இதே போன்ற உணர்ச்சி மிக்க பாடல் அடிகளைக் கொண்ட பாடசாலைக் கீதத்தை நான் எந்தக் கல்லூரியிலும் கேட்கவில்லை.

அவருடைய ஆற்றலினாலும் தமிழ் மீது கொண்ட பற்றுதலினாலும், எவருக்கும் இலகுவில் கிடைத்தற்கரிய "புலவர்மணி" என்ற பட்டத்தைப் பெற்று உடுப்பிட்டிக்கு மட்டுமல்லாது,தமிழ் உலகத்திற்கே பெருமை சேர்த்தவர். ஒரு சிறந்த சாரண ஆசிரியராகத் திகழ்ந்து, என்னைப் போன்ற ஆளுமை மிக்கவர்களைச் சாரணியத் தத்துவத்தினூடாக சிறந்த நிர்வாகிகளாக வளர்த்தெடுத்தவர்.

ஓய்வு பெற்ற பின்னரும் அவர் எப்போதுமே ஓய்ந்து இருக்கவில்லை என்பதை, பல ஆண்டு களுக்குப் பின்னரும், அமரர் பேராசிரியர் அழகையா துரைராஜா அவர்களுடன் சேர்ந்து ஆற்றிய சமய தமிழ் இலக்கியப் பணிகளை நாங்கள் எவரும் மறந்து விட முடியாது. 1993 ஆம் ஆண்டுகளில் "தொண்டைமானாறு சந்நிதியான ஆச்சிரமத்தில்" திரு.மோகன்தாஸ் சுவாமிகளினால் ஆரம்பித்து வைக்கப்பட்ட சந்நிதியான் ஆச்சிரம கலைபண்பாட்டுப் பேரவையில் அமரர் பேராசிரியர் அ.துரைராஜா அவர்களின் தலைமையில் அவர் ஆற்றிய சமய, இலக்கியப் பணிகள் இன்றும் நினைவு கூரப்படுகின்றன.

அவரது மிகச் சிறந்த ஒரு பணியாக கடந்த இரு வருடங்களுக்கு முன்னர், உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி மண்டபத்தில் நடந்த நூல் வெளியீட்டு விழாவில் இடம்பெற்ற நிகழ்வுகள் எனது மனதை இன்றும் நிறைத்துக் கொண்டிருக்கின்றது. நான் அதிபராக இருந்தபொழுது, மிகச் சிறந்த மாணவனாக எங்களுடைய கல்லூரிக்குப் பெருமை சேர்த்துக் கொடுத்தவரும், அவரிடம் சென்று தமிழ் கற்று இன்று உயர்ந்த மதிப்போடு பேராதனைப் பல்கலைக் கழகத்தில் தமிழ் விரிவுரையாளராகக் கடமையாற்றும் மிகச் சிறந்த எழுத்தாளரான திரு.செல்லத்துரை சுதர்சனின் முயற்சியினால், அவர்கள் இருவரும் சேர்ந்து வெளியிட்ட அரிய நூல் பெட்டகமான உடுப்பிட்டி சிவசம்புப் புலவரின் முழுமையான பிரபந்தத்திரட்டு அவர் ஆற்றிய மிக உயர்ந்த தமிழ் தொண்டாகும் அவர்கள் இருவரும் சேர்ந்து உருவாக்கிய அந்த நூல் வெளியீட்டு விழா உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன்

கல்லூரியில் இடம் பெற்றபொழுது, அந்த நிகழ்வுக்குத் தலைமை தாங்கக் கிடைத்த சந்தர்ப்பம், எனது வாழ்வில் எனக்கு கிடைத்த ஒரு உயர்ந்த விருதாகவே நான் பெருமையுடன் நினைத்துப் பார்க்கின்றேன்.

நூற்றுக்கும் மேற்பட்ட இலக்கிய ஆர்வலர்களும், எழுத்தளர்களும், அவரது மாணவர்களும் கலந்து கொண்ட அந்தப் பிரமாண்டமான வெளியீட்டு விழாவில்,அந்த நிகழ்வில் தலைமை வகித்த என்னை அன்புடன் அழைத்த, புலவர்மணி நீலகண்டன் சேர் அவர்கள், "அனந்தராஜ்...! இன்று இந்த நூல் வெளியீட்டு விழாவில் நீங்கள் நடந்து கொண்ட முறையையும் உங்கள் ஆழமான பேச்சையும் பார்க்கும் பொழுது, எனக்கு இரட்டிப்பு மகிழ்ச்சியாக இருக்கின்றது. எனது மாணவன் சுதர்சனின் முயற்சியினால் இந்த அரிய நூலைத் தொகுத்து ஆவணமாக்கிய மகிழ்ச்சி ஒரு புறம். எனது மாணவனாகிய உங்களுடைய ஆளுமையை இன்று பார்த்தபொழுது, இன்னும் மகிழ்ச்சியாக இருக்கின்றது." என்று கூறி என்னை மனந்திறந்து வாழ்த்திய பொழுது, எனது கண்கள் குளமாகிக் கொண்டு வந்தன. ஆம்... அந்த உன்னதமான ஒரு மாமனிதரின் உள்ளத்தில் இருந்து எழுந்த அந்த வாழ்த்துரைகள் காலம் காலமாக என்னை மிகச் சிறந்த ஒரு மனிதனாகவே வாழ வைத்துக் கொண்டிருக்கும். அந்த மகிழ்ச்சியில், அவரது நினைவுகளை அடிக்கடி மீட்டிப் பார்த்த எனக்கு அவரது மரணம் எனக்கு மட்டுமல்லாது தமிழ் உலகத்திற்கே அதிர்ச்சியை ஏற்படுத்தியிருந்தது.

ஆயினும் பிறந்தவர்கள் எல்லோரும், என்றோ ஒரு நாள் இந்த உலகத்தைவிட்டு நீத்துப் போவர் என்பது உலக நீதி என்றாலும், அவர் வாழ்ந்த வாழ்க்கை முறையும், அவரது கல்வி மற்றும் சமய, இலக்கியப் பணிகளும் ஒரு போதும் மறைந்து விடா... அவர் எங்களுடன் பேசும் பொழுது, மென்மையான தொனியில், அறுத்து உறுத்து நல்ல தமிழில் பேசும் அந்த மொழிகள் இன்றும் எங்களுடைய காதுகளில் ஒலித்துக் கொண்டிரு க்கின்றன. அவரது புனிதமான ஆத்மா சாந்தியடைய வேண்டும்... அவரது இழப்பால் துயருறும் அவரது செல்வ மகன் பொறியியலாளரான, திரு க.நித்தியானந்தன் அவர்களுக்கும், அன்பு மகள் திருமதி. தாரணி சிவநேசன் அவர்களுக்கும், அன்னாரது குடும்பத்தினருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

துதிசூ டயிற்கைக் குமரேசன்
சொல்லின் றமிழ்தேர் குமரேசன்
விதிமா லறியாக் குமரேசன்
மின்னா ரிருவர் குமரேசன்
மதியை குருவாங் குமரேசன்
மயின்மீ தூருங் குமரேசன்
கதியே யான குமரேசன்
கந்த வனத்துக் குமரேசன்.

*(கந்தவன மணிமாலை : 15-
புலவர்மணி கா.நீலகண்டன்)*



# பின்நிகழ்வை முன்னுரைக்கும் புனிதர் எம்மூர்த் தீர்க்கதரிசி

திருமிகு ஆர்.எல்.தேவராஜா
ஓய்வுபெற்ற பிரதி அதிபர்
உடுப்பிட்டி

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியின் புகழ்பூத்த ஆசிரியர்களில் ஒருவரான நீலகண்டன் Sir ஐக் குறித்துச் சிந்திக்கும் போது எனது மனத்திரையில் ஏறக்குறைய அரை நூற்றாண்டுக்கு முற்பட்ட காலத்தின் காட்சிகள் வீடியோவாக விரிகின்றன. நீங்காத நினைவுகளாக என்மனதில் பதிந்திருக்கும் அந்நிகழ்வுகள் அவரது ஆளுமைக்கு நான் மிக அதிகமாக ஆட்பட்டிருக் கின்றேன் என்பதை எனக்கு உணர்த்துகின்றன.

வெள்ளை வெளேரென்ற ஆடையணிந்து, புன்னகை பூத்த முகத்தோடு சில வேளைகளில் பாடல் ஒன்றை முணுமுணுத்தவாறு குடுகுடு வென்று நடந்து குறித்த நேரத்திற்கு அவர் வகுப்பிற்குள் நுழையும் காட்சி நேற்று நடந்தது போல் நினைவில் இருக்கிறது. திணைக்களம் வகுத்திருந்த பாடத்திட்டத்திற்கு அப்பால் சென்று தற்துணிவோடு பல்வேறு விடயங்களை கற்றல் கற்பித்தல் நடவடிக்கைக்குள் அவர் புகுத்தி யிருந்தார். அவற்றுள் ஒன்று, ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு மாணவனும் ஒவ்வொரு பந்தி பார்த்தெழுதல் வேண்டும். அவர் அவற்றைப் பார்வையிட்டு உறுப்பமைய எழுதப்படாத எழுத்துகளின் கீழ் சிவப்புக்கோடிட்டு அதன் அருகே

அந்த எழுத்தை உறுப்பமைய எழுதிவிடுவார். இதனால் எங்களில் பலரின் கையெழுத்துக்கள் ஓரளவு சீரடைந்தன என்பதோடு பார்த்தெழுதிய பலவிடயங்கள் மனதில் பதிவாகி பல்வேறு சந்தர்ப்பங்களில் பயன்படுத்தப்பட்டு பாராட்டுக்களைப் பெற்றுத் தந்திருக்கின்றன. “வாரம் ஒரு குறள்” “வாரம் ஒரு பாடல்” என்ற தலைப்பிட்டு அவர் தந்தவை எமது செவிகளுக்கு உணவாக அமைந்தன. “வாரம் ஒரு குறள்” என்ற வரிசையில் “எந்நன்றி கொன்றார்க்கும்...” என்ற குறளை எமக்கு ஒரு நாள் அறிமுகம் செய்தார். அப்போது நான் அவரிடம் “ Sir வள்ளுவர் முதல் வரியில் நன்றியைக் கொல்ல அனுமதிக்கின்றார். ஆனால் இரண்டாவது வரியில் முரண்படுகிறாரே” என்று கேட்டேன். அதற்கு அவர் தந்த விளக்கம் “வீதியோரத்தில் நிற்கும் மரங்களில் நிழலை நீ அனுபவிக்கிறாய். அதற்காக அந்த மரத்தை நாட்டியவருக்கு நன்றியாய் இருக்காவிட்டால் பரவாயில்லை ஆனால் வீதியிலே நீ விபத்துக்குள்ளான வேளையிலே உனக்கு முதலுதவி செய்து சிகிச்சைக்காக வைத்திய சாலைக்கு எடுத்துச் சென்றவருக்கு நன்றியாயிருக்க நீ தவறினால் நீ நன்றி கொன்றவன். உனக்கு உய்வில்லை” உதாரணங் களுக்கு ஊடாக அவர் எந்நன்றி செய்ந்நன்றி இரண்டையும் வேறு பிரித்துக் காட்டிய விதம் என்னை மிகவும் ஈர்த்தது.

ஒரு நாள் அவர் வகுப்புக்கு வந்தபோது அவரது தலையில் மஞ்சள் நிறமான ஒரு சிறிய இலை காணப்பட்டது. நான் Sir உங்கள் தலையிலே ஓர் இலை இருக்கின்றது அதை எடுத்துவிடட்டுமா?;; என்று கேட்டேன். “சரி எடு” என்றார். எடுத்தேன்.

அவர் அதனைத் தன் கைகளில் வாங்கி வைத்துக்கொண்டு "மஞ்சள் நிறமாக இருப்பதால் இதனை தங்க இலை எனலாம் எனது தலையிலே தங்கியிருந்ததால் அதனை எனது தலையிலே தங்க இலை எனலாம். இப்போது அது எனது தலையிலே தங்காமல் அகற்றப்பட்டு விட்டதால் அது எனது தலையிலே தங்க இலை எனலாம்" என்றார். தற்செயலாக நடைபெற்ற ஒரு சம்பவத்தை வைத்துக்கொண்டு அவர் ஆடிய சொல் விளையாட்டில் எனது வகுப்புத் தோழர்களும் நானும் ரசனையின் உச்சத்தைத் தொட்டு ஆரவாரித்தோம்.

"வாரம் ஒரு பாடல்" என்ற வரிசையில் ஒரு நாள் "விற்றதார்? கலை பாதியோடு வனத்திலே அழவிட்டதார்? வெஞ்சிறைபுகவிட்டதார்? துகிலுரிய விட்டு விழித்ததார்..." என்ற ஆரம்பவரிகளைக் கொண்ட பாடலோடு வந்தார். மன்னவன் ஒருவன் பிரஜை ஒருவரின் மகளை மணமுடிக்க ஆசை கொண்டு தூதுவன் ஒருவனை அனுப்பி திருமணப்பேச்சை ஆரம்பிக்க முற்படுகின்றான். அந்தத் தூதுவனைப் பார்த்துப் பெண்ணின் தந்தை பேசுகின்றதாக அல்லது ஏசுகின்றதாக அந்தப்பாடல் அமைந்திருக்கிறது. மன்னர்கள் தங்கள் மனைவியரைத் தவிக்கவிட்ட சந்தர்ப்பங்களைச் சுட்டிக்காட்டி தனது மகளை மன்னனுக்கு மனைவியாக்க மறுப்புத் தெரிவித்து "மன்னர் பெண்கொளல் ஒக்குமோ? உமியடா மணமென்ற வாய்" என்று தூதுவனைச் சாடுவதாக அந்தப்பாடல் அமைந்திருந்தது. பாடலிலே குறிப்பிடப்பட்டிருந்த மன்னர்களான அரிச்சந்திரன் (மனைவியை விற்றவர்) நளன் (கலைபாதியோடு

வனத்திலே அழவிட்டவர்) ராமன் (வெஞ்சிறை புகவிட்டவர்) பாண்டவர் (துகிலுரிய விட்டு விழித்தவர்) ஆகியோரை அப்போ நாம் அறிந்திருக்கவில்லை இதனால் அத்தனை கதைகளையும் எமக்குச் சொல்வதற்காக உடனடியாக வாரத்தில் ஒரு பாடவேளையை ஒதுக்கினார். யாராவது ஒரு பாட ஆசிரியர் வராத நாளில் நீலகண்டன் Sir இற்கு வேறு வகுப்பில் பாடம் இல்லையென்றால் அவரை நாம் கதை சொல்வதற்கு அழைத்து வந்து விடுவோம். கதையை அவர் தொடரவேண்டுமென்றால் முன்கதைச் சுருக்கத்தை எம்மில் ஒருவர் சொல்லவேண்டும். அதுவும் எமக்கு நல்ல பயிற்சியாக அமைந்தது. தற்காலத்து தொலைக்காட்சி நெடுந்தொடர்களைப் போல அடுத்தது என்ன என்ற ஆவல் எழும் சந்தர்ப்பத்தில் "தொடரும்" போட்டுவிடுவார். அவ்வாறு அவர் எழுந்து செல்லும் வேளையில் வழமையாக வகுப்பு முடியும் போது சொல்லவேண்டிய "Thank You Sir" ஐக் கூடசொல்லாமல் ஸ்தம்பித்திருப்போம். தனது ஓய்வு நேரத்தை மனமுவந்து எம்மோடு பகிர்ந்து கொண்ட எம் ஆசானை நன்றியோடு நினைவுகூருகின்றேன்.

"சாதி இரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால் ....." என்ற பாடலை ஒரு நாள் அறிமுகம் செய்து விளக்கினார். கொடுப்பவர் எல்லாம் மேல் சாதி மற்றவர் எல்லாம் கீழ்சாதி என்பதை விளக்கியபின் "மனிதர்களிலே நான்கு வகையினர் உள்ளனர் தெரியுமா?" என்று கேட்டார். கரும்பலகையிலே பின்வருமாறு ஆங்கிலத்தில் எழுதினார்.

(i) These who don't know that they don't know

(ii) Those who know that they don't know

(iii) Those who don't know that they know

(iv) Those who know that they know

இதனை பின்வருமாறு தமிழாக்கம் செய்தார்.

(i) அறியாமையை அறியாதிருப்பவர்கள்

(ii) அறியாமையை அறிந்தவர்கள்

(iii) அறிந்திருப்பதை அறியாதவர்கள்

(iv) அறிந்திருப்பதை அறிந்தவர்கள்

இவர்களைக் குறித்து அவர் தந்த விளக்கங்கள் அற்புதமானவை. அறியாமையை அறியாதிருப்பவர்கள் பேதைகள் ஆபத்தானவர்கள் அவர்களால் அவர்களுக்கும் ஆபத்து மற்றவர்களுக்கும் ஆபத்து அறியாமையை அறிந்தவர்கள் அறிவைத்தேடிக்கொள்வார்கள் மூன்றாவது வகை மனிதர்களைக் குறித்து என்ன விளக்கம் தரப்போகிறார் என்று ஆவலாய் இருந்தோம். நீலகண்டன் Sir என்னைப் பார்த்துக் கேட்டார் "தேவராசா உனக்கு சோடியம் குளோரைட் தெரியுமா?" நான் "தெரியாது Sir" என்றேன். "உப்பில்லாப் பண்டம் குப்பையிலே என்று சொல்கிறார்களே அந்த உப்பு உனக்கு தெரியுமா?" என்று கேட்டார். "தெரியும் Sir" என்றேன் "அந்த உப்புத்தான் சோடியம் குளோரைட். சோடியம் குளோரைட்டை நீ அறிந்திருக்கிறாய் என்பதை நீ அறிந்திருக்கவில்லை" என்றார். வகுப்பில் எழுந்த சிரிப்பொலி அடங்க நீண்ட நேரம் எடுத்தது. அறிவை அறிந்த நாலாவது வகை மக்கள்தான் சாதனை படைக்கும் மேதைகள் என்று விளக்கம் தந்தார். நிகழ்தகவு என்ற அலகிலே மாதிரிவெளி (Sample space) மரவரிப்படம் (Tree

diagram) என்பவற்றைக் கற்பிக்கும் போது இந்த நால்வகை மனிதரும் நினைவுக்கு வருவர். கூடவே நீலகண்டன் Sir உம் வருவார். நீலகண்டன் Sir தமிழ், ஆங்கிலம், சமஸ்கிரும் ஆகிய மூன்று மொழிகளையும் திறம்படக் கற்பிக்க வல்லவரா யிருந்தார். தமிழ் மொழியாயினும் ஆங்கில மாயினும் அவரது கையெழுத்து மிக நேர்த்தியாக அழகாக இருக்கும். அவரது கையெழுத்தை எங்கு கண்டாலும் அவை அவரது எழுத்துக்கள் என்பதை அவரது மாணவர்கள் மிக இலகுவாக இனங்கண்டு கொள்வர்.

முன்பு இலங்கை வானொலியில் "வானொலி மஞ்சரி" என்றொரு நிகழ்ச்சி வாரந்தோறும் ஒலிபரப்பாகி வந்தது. அமரர்களாகிவிட்ட அறிவிப்பாளர்கள் ராஜகுருசேனாதிபதி கனகரத்தினம் S.K.பரராஜசிங்கம் ஆகியோர் அந்நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கிவந்தனர். அந்நிகழ்ச்சியில் சில நிமிடங்கள் "நல்ல தமிழ் கேட்போம்" என்ற தலைப்பில் திரைப்படங்களில் இடம் பெற்ற செந்தமிழ் வசனங்கள் கொண்ட பகுதிகளை ஒலிபரப்புவார்கள். இந்த "நல்ல தமிழ் கேட்போம்" என்ற பகுதிக்காகவே வானொலி மஞ்சரியைக் காத்திருந்து கேட்கின்ற பல நேயர்கள் இருந்தார்கள். நீலகண்டன் Sir உடன் உரையாடும் போதெல்லாம் நல்ல தமிழ் கேட்கலாம். அழுத்தம் திருத்தமான அவரது உச்சரிப்பு அவருக்கே உரியது. நான் எனது பெயரை தேவராஜா என்றே எழுதுவேன் ஆனால் நீலகண்டன் Sir என்னை "தேவராசா" என்றே விழிப்பார். அவர் அப்படி அழைக்கும போது மீண்டும் ஒரு தடவை அழைக்கமாட்டாரா என்று ஆவல் உண்டாகும். அத்தனை

இனிமையானது அந்த அனுபவம். அதிலும் "அடேய் தேவராசா" என்று அழைத்து விட்டால் என் மகிழ்ச்சி இரட்டிப்பாகும். பல ஆண்டுகட்கு முன் நீலகண்டன் Sir இற்கும் எனக்கும் இடையில் பின்வரும் உரையாடல் இடம் பெற்றது.

"தேவராசா நீ என்ன சமயம்?"

"கிறிஸ்தவம் Sir"

"உன் அம்மா என்ன சமயம்?"

"கிறஸ்தவம் Sir"

"உன் அம்மா பிறப்பால் என்ன சமயம்?"

"சைவம் Sir"

"அப்படியென்றால் உன் அம்மா பாதிக் கிறிஸ்தவர். நீ ஒரு காலத்தில் சைவ சமயி ஆவாய்"

"அதற்கு அவசியமேயில்லை நான் அம்மா மாதிரியில்லை நான் பிறப்பால் கிறிஸ்தவன் Sir"

"நீ தீவிர கிறிஸ்தவனா?"

"மதத்தில் எனக்கு மதம் கிடையாது Sir"

"உனக்கு நாக்கு மிக நீளம்"

"உங்களை விடவா Sir" என்று சொல்ல நினைத்தேன் சொல்லவில்லை. நான் நாக்கைக் கடித்துக் கொண்டு பேச்சை நிறுத்தினேன் அவரே உரையாடலை தொடர்ந்தார்.

"நீ சமயம் மாறாவிடினும் சைவ சமயிகள் மத்தியில் தான் வாழ்வாய்"

"இப்போதும் அப்படித்தானே Sir"

"நான் சொல்வது உனக்கு இப்போது புரியாது. சைவ சமயிகள் உன்னை இன்னும் நெருங்கி வருவார்கள் அப்போது நான் சொன்னது உன் நினைவுக்கு வரும்"

அன்று அவர் சொன்ன அந்த வார்த்தைகள் பின்னாளில் என் வாழ்வில் நிறைவேறப்போகும் தீர்க்கதரிசனங்கள் என்பதை இப்போது எண்ணி

வியக்கின்றேன். புனிதர்கள் அவ்வப்போது உதிர்க்கும் வார்த்தைகள் அப்படியே நிறைவேறி விடும் என எங்கோ வாசித்த ஞாபகம். புனிதர் நீலகண்டன் Sir உரைத்தது அப்படியே நிறைவேறியது. சென்ற ஆண்டு (2014) டிசெம்பர் மாதத்தில் ஒரு வெள்ளிக்கிழமை வெளிநாட்டி லிருந்து வந்து எம்மோடு தங்கியிருந்த எமது மூத்த மருமகன் செல்வச்சந்நிதி கோவிலுக்குச் செல்ல வேண்டும் என்ற தனது ஆசையை வெளியிட்டார். நேரம் மாலை வேளையாக இருந்தது அடுத்தநாள் அதிகாலை அவர் கொழும்பு நோக்கிப் பயணிக்க திட்டமிட்டிருந்தார் என்பதோடு வடமராட்சிக்கு அவர் புதியவராவார்.

அவரை செல்வச்சந்நிதிக்கு அழைத்துச் செல்லயாரையும உடனடியாக நாடமுடியாத நிலையில் நானே அவரை செல்வச்சந்நிதிக்கு அழைத்துச் சென்றேன். ஆலயத்தின் கடைவீதியில் நான் காத்திருக்க எனது மருமகன் பிரார்த்தனையில் பங்குபற்றுவதற்காக ஆலயத்தின் உள்ளே சென்றுவிட்டார். கடைவீதியில் மருமகனுக்காக காத்திருந்த வேளையில் தூரத்தில் ஆலயமுன்றலில் தெரிந்த ஒரு காட்சி என்னைக் கவர்ந்தது. ஆண்டவனைத் தொழ ஆலயந்தேடி வந்த பலர் யாரோ ஒரு மனிதரைச் சூழநின்று பணிந்து தொழுது கொண்டிருந்தார்கள். அப்போது தற்செயலாக என்னருகே வந்த நண்பர் முத்துலிங்கத்திடம் பலரும் பணிந்து ஆசிபெறும் அந்நபர் யாரென்று விசாரித்தேன். அவர் சிரித்துக்கொண்டே “தெரியேல்லையா எங்கடை நீலகண்டன் மாஸ்ரர்தான்” என்றார். வியப்பை விழுங்கிக்கொண்டு Sir இற்கு அருகே சென்று “Sir என்னைத் தெரிகிறதா?” என்றேன். “அடேய்

தேவராசா முருகன் சந்நிதியில் உனக்கென்ன வேலை?" என்றார். பழையவற்றை நினைவில் வைத்து என்னைக் கலாய்க்கிறாரா அல்லது சாதாரணமாக கேட்கிறாரா என்பதை அவரது குறும்புப் புன்னகையில் வாசிக்க முயன்று தோற்றுப் போனேன். ஆலயத்துக்குள்ளே சென்றிருக்கும் மருமகனுக்காக காத்திருப்பதைக் கூறினேன். பாவி மனிதர் என்னைப் பார்த்து பெரிதாகச் சிரித்தார். அந்தச் சிரிப்பின் அர்த்தத்தை அருகே நின்ற நண்பர் முத்துலிங்கமோ மற்றவர்களோ புரிந்து கொண்டிருக்க முடியாது. "என்னை Bless பண்ணுங்கோ Sir" என்று பணிந்தேன் என் தலைமீது தனது கரங்களை வைத்து நல்லாசிகள் வழங்கினார். அதுவே நீலகண்டன் Sir உடனான எனது கடைசிச் சந்திப்பு என்பதை நான் அப்போது அறிந்திருக்கவில்லை என்பதோடு இந்தச் சந்திப்பு ஏதோ தற்செயல் என்பதை என்மனம் ஏற்றுக் கொள்ள மறுக்கின்றது.

எனது பிள்ளைகளின் திருமண வைபவங்களிற்கு திருமண மண்டபத்திற்கு வருகை தரமுடியாவிடினும் தன் இயலாமையை புறந்தள்ளி வீட்டுக்கு வந்து பிள்ளைகளை வாழ்த்தியமையை பெரும் பேறாகவே கருதுகின்றேன். எனது பிள்ளைகள் அவரை "அப்பாவின்ரை Sir மட்டுமல்ல எங்கடையும் Sir" என்று தங்கள் துணைவர்களுக்கு அறிமுகப்படுத்தியது குறிப்பிடத்தக்கது. எனது பிள்ளைகள் தமிழ் ஆங்கில பேச்சுப் போட்டிகளில் கலந்த கொள்ளும் போது நீலகண்டன் Sir இடம் சென்று பயின்று கொள்வர். இதை எழுதும் போது அம்பி ரீச்சரின் நினைவு வருவதைத் தவிர்க்க முடியவில்லை. உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியின் சாரண ஆசிரியராகவும் திகழ்ந்த

நீலகண்டன் Sir கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்திலும் பதவிகள் வகித்து தனது பங்களிப்புகளை வழங்கியுள்ளார். எமது கல்லூரி கீதத்தை ஆக்கியோனும் அவரே. எமது கல்லூரி கீதத்தைப் பாடும் போது உற்சாகமும் தன்னம்பிக்கையும் ஊற்றெடுக்கும். நீலகண்டன் Sir இங்கே உரிய "மிடுக்கு" பாடல் முழுதும் இழையோடி நிற்கும் கல்லூரி கீதம் காலம் எல்லாம் அவரை எம்மோடு வாழவைக்கும்.

முகப்புத்தகத்தில் அவரது மாணவி ஒருவர் அவரைக் குறித்து 5S மூலம் இரத்தினச் சுருக்கமாக கூறியுள்ளார். "Our Neelakandan Sir is Simple, Sweet, Steady, Strict and Stern." மாணவர்கள் தங்கள் ஆசான்களை எவ்வாறெல்லாம் கவனிக்கிறார்கள், கணிக்கிறார்கள் என்பதற்கு இது ஒரு எடுத்துக் காட்டு ஆகும். நல்ல ஆசான்கள் மரணிப்ப தேயில்லை. நீலகண்டன் Sir உம் அவரது மாணவர்கள் மனங்களில் ஊழிதோறூழி ஊழி தோறூழி வாழ்ந்து கொண்டேயிருப்பார்.



## *OUR BELOVED TEACHER, MR K.NEELAKANDAN*

**Dr T. Vasanthakumar**
*Canada*

It was with deep sadness that we received the message of the irreparable loss of our beloved teacher, fondly referred to as ' Neelakandan master' He was a good friend, disciplined scout master, respected teacher, a learned poet, helpful to any and everyone, and above all a devout Hindu. He was a model to the younger generation and upon whose kindness we could all depend.

Thiruvalluvar, says so poignantly in his seminal work 'Thirukkural': "Whether a person, on his death, is worthy of our remembrance is determined only by the image he leaves behind and not by the wealth he has amassed in his lifetime)." Chapter 12, Verse 114. This is a sagely insight indeed into human aspirations. All of us will agree that our Neelakandan master stands out like a giant amongst ordinary mortals. As a teacher he was loved by one and all. Such was his skill at imparting knowledge to the next generation and moulding the minds of young children, that even the Herculean task of teaching the English language to children who hardly spoke the language outside the classroom, could not deter him from

shining as an excellent teacher. He carried out his duties with such pleasure and deceptive ease that many of us were moved to love the English language. He was a strict scout master. I guess that no scout escaped his correctional methods, though painful, yet loved him for his true love and concern for the wellbeing of his students.

We, his students, are immensely proud to have had him as our teacher. The inordinately high numbers of us who occupy high positions in various fields now, owe our achievement greatly to the firm foundation he laid during our school days.

It is true that he is no longer with us; but fond memories and the invaluable knowledge he imparted to us will continue to be with us. Words may fail to describe adequately this gem of a person, but suffice to say that he would be missed very dearly not only by members of his immediate family but also by countless students like me.



# தன்னையாண்டவர் தமிழையாண்டவர் என்னையாண்டவர்

"நான்" இறந்துவிட்டாரா?

சட்டத்தரணி கந்தையா நீலகண்டன்

தலைவர்

அகில இலங்கை இந்து மாமன்றம்

என் வாழ்வை வளம்படுத்திய செம்மல்கள் வெகுசிலரில் ஒருவர் இறைவனடி சேர்ந்துவிட்டார் என்ற மீளாத்துயருடன் இச் செய்தியை வரைகின்றேன்.

என் மனத்திரையில் இருந்து என்றும் அழிக்கமுடியாத ஆசான் நீலகண்டன் மாஸ்டர் மறைந்த செய்தி கேட்டு அதிர்ந்தேன். உடனே நண்பன் உடுவை தில்லைநடராஜாவை தொலைபேசியில் அழைத்து "நான்" மறைந்து விட்டாராமே எப்போது இறுதிச்சடங்கு? என விசாரித்தேன். "இறுதிக் கிரியைகள் முடிந்து விட்டன", என அறிந்ததும் இன்னும் கவலையடைந்தேன். நீலகண்டன் மாஸ்டரின் மரணச்சடங்கில் கலந்து கொண்டு துயரம் ஆற்றியிருக்கும் வாய்ப்பும் கிடைக்கவில்லை என்ற ஆதங்கத்துடன், "நேரத்துடன் அறிந்திருந்தால் அவரின் இறுதிச் சடங்கில் கலந்துகொண்டிருப்பேன்" என்பதனையும் தில்லைக்குக் கூறிவைத்தேன். நல்லதோர் அஞ்சலிச் செய்தி எழுதி அனுப்புமாறு நண்பர் சுதர்சன் தில்லையூடாகச் செய்த விதந்துரைப்பே என் குருவுக்கு அஞ்சலி செலுத்த எனக்குக்கிடைத்த ஒரு வாய்ப்பாக அமைந்தது.

1958 ஆம் ஆண்டில் பத்து வயது மாணவனாக ஆறாம் வகுப்பில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் சேர்ந்தேன். தமிழ்ப் புலமைமிகு நீலகண்டன் மாஸ்டர் தமிழ் கற்பிக்கவந்தார். தன்பெயரே என்பெயராக இருந்தபடியால் தமிழ் வகுப்பில் தமிழாசிரியர் "நான்" என்றே என்னைச் செல்லமாக அழைத்தார். இளம் வயதில் அது ஒரு திகில் தரும் இன்ப அனுபவம். "நானும் பேசவேண்டும்" என என்னைத் தமிழ்ப் பேச்சுப் போட்டியில் பேசவைத்தார். "கொலை" என்ற சொல்லை, "கொளை" என்று சொல்லித் தமிழைக் கொலை செய்த எனக்குக் கால் நடுங்கியது. விட்டுவைக்காத விடாக் கண்டனாகத் தமிழாசிரியர் உருவெடுத்தார். பேச்சுப் போட்டியில் பேசிமுடித்துவிட்டேன். இரண்டாம் இடம் மட்டும் கிடைத்தது. அதுவே எனக்குப் பெரும் வெற்றியாகப்பட்டது. நீலகண்டன் மாஸ்டர் விடவில்லை. அதிபரிடம் சென்று மத்தியம் வகித்தவர்கள் பாரபட்சமான தீர்வுகொடுத்து விட்டனர் என முறையிட்டார். என்றும் வெள்ளைநிற உடையில் உலாவிவந்த கரும் மனிதரான அதிபர் செல்லத்துரை மாஸ்டர் ஒரு கடுமையான மனிதர். "அநீதி நடந்தால் மீண்டும் போட்டியை நடத்த வேண்டும்" என உத்தரவு போட்டார். மீண்டும் நடந்த போட்டியில் எனக்கு முதலிடம். நான் அல்ல நீலகண்டன் மாஸ்டர், வென்றுவிட்டார். நீலகண்டன் மாஸ்டரின் இந்த முயற்சியை எண்ணும்போது திருவள்ளுவர் பெருமான் தந்த குறளை மறக்க முடியாது:-

"செய்வானை நாடி வினைநாடிக் காலத்தோடு
எய்த உணர்ந்து செயல்"

நான் 45 ஆண்டுகளுக்கு மேல் இந் நாட்டில் சட்டத்தரணியாகத் தொழில் பார்க்கின்றேன். பல மேடைகளில் மட்டுமல்ல, மகா நாடுகளிலும் கூட - இலங்கையில் மட்டுமல்ல வெளிநாடுகளிலும் கூட - பங்குபற்றித் துணிவுடன் உரையாற்றி வருகிறேன். அதற்கெல்லாம் வழி வகுத்தவர் என் குரு நீலகண்டன் மாஸ்டர். இன்று "கந்தையா நீலகண்டன்" என்ற இச் சிறியேனை ஒரு பேச்சாளராக உருவாக்கிய பெருமை அந்த காங்கேசு நீலகண்டன் மாஸ்டருக்கு மட்டும் உரித்தானது.

"செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்றல் அரிது"

என்ற வள்ளுவரின் வாக்குத்தான் இக்கட்டத்தில் என் நினைவுக்கு வருகின்றது.

எதிர்காலத்தில் மேடையேறி உரையாற்று கின்ற திறமையை எனக்கு ஏற்படுத்தித்தந்த பெருமைக்கு மேலாக இன்னும் ஓர் அம்சத்தையும் குறிப்பிடுவது என் கடமை. நீலகண்டன் மாஸ்டர் தந்த ஊக்கமும் பயிற்சியும் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியின் ஏழாண்டு மாணவ வாழ்வும் சிறியேனுக்குத் தந்த துணிவுதான் அது. அத்துடன் மலேசியாவில் பிறந்தாலும் கரணவாய் தெற்கு எனும் கிராமத்தில் மூன்று வயது முதல் வளர்ந்த எனக்கு என்னைப் பெற்றெடுத்த அன்னை தந்த ஆன்மீக உணர்வும் எதற்கும் பயப்படத் தேவை யில்லை என்று என் தந்தை தந்த மனப்பலமும் கடந்த தசாப்தங்களில் என் வாழ்க்கைப்படிகளில் ஏறிவர உதவின. ஆட்சியாளருடன் கூடத் தமிழ்ப் பேசும் மக்களின் சார்பில் - குறிப்பாக இந் நாட்டு இந்து மக்கள் சார்பில் - குரல் கொடுக்க அந்தத்துணிவு தான் உதவிவருகின்றது.

சட்டத்துறையிலும் ஒரு துணிவுமிக்க சட்டத்தரணியாக எல்லோரின் மதிப்பிலும் உயர நீலகண்டன் மாஸ்டர் இந்த கந்தையா நீலகண்டனுக்குப் போட்ட அத்திவாரத்தை நினைத்து நினைத்து அவரை என்றும் மனதாரப் போற்றுகின்றேன். சமீபகாலத்தில் நாட்டின் 43 ஆவது பிரதம நீதியரசருக்காக ஆஜராகும் துணிவுக்குக்கூட அதுதான் காரணம். மற்றவர்கள் தயங்கிய தருணத்தில் ஒரு தமிழனாக இருந்தும் அன்றைய ஆட்சியாளரையே விரோதிக்கும் நிலையில் நீதிகேட்டு நின்ற அந்தப் பிரதம நீதியரசருடன் நாடாளுமன்றக் குழு விசாரணைக்குக் கூடத் துணிந்து சென்றபோது உலகமெல்லாம் வாழும் தமிழ் மக்கள் தொலைக்காட்சிகளில் ஒரு தமிழ்ச் சட்டத்தரணியின் துணிவைக்கண்டு பாராட்டினார்கள். அந்த நிலையைக்கூட எனக்குத் தந்ததில் நீலகண்டன் மாஸ்டரின் பங்கு முக்கியமானது என்பதனை நான் என்றும் மறக்கமுடியாது.

இளைப்பாறியதும் பல ஆண்டுகளின் பின் கொழும்புக்கு வந்திருந்தார் நீலகண்டன் மாஸ்டர். கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் அன்று நான் தலைவர். மேடையில் ஒலி வாங்கியின் முன் தலைமையுரை நிகழ்த்த எழும்பி நிற்கிறேன். எனக்கு ஒரே ஆனந்தம் எனக்குத் தமிழ் பேசக்கற்றுத்தந்த என் குருநாதர் சபையில் இருக்கிறார். கடமை தவறாது நீலகண்டன் மாஸ்டர்தான் என்னை ஒரு பேச்சாளராக உருவாக்கிய கதையையும் நான் தலைமை தாங்கும் சபையில் அவர் இருப்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்து அவரைப் போற்றினேன்.

நிகழ்வு முடிந்ததும் அவருடன் கதைக்கும் ஆவலுடன் மேடையில் இருந்து இறங்கி சந்தோசமாக அவரிடம் ஓடிப்போனேன், ஆனால் அவர் கண்களில் நெருப்புப்பொறி பறந்தது. "நான் என் கடமையை மட்டும் செய்தேன். இப்படிப் பகிரங்கமாகப் புகழத் தேவையில்லை. இப்படி இனிமேலும் செய்வீர் என்றால் நான் நீ பேசும் அல்லது தலைமை தாங்கும் கூட்டத்திற்கு வரமாட்டேன்" எனக் கொதித்தார். அதுதான் நீலகண்டன் மாஸ்டர். தானும் தன் கடமையும் என என்றும் தற்புகழ் பாடாது வெறும் பெயர் புகழ்ச்சிதேடாது வாழ்ந்த ஓர் உத்தமசீலர். மற்றவர்களை என்றும் நோகும் வண்ணம் நடக்காத ஒரு புனித உள்ளம் எங்களின் ஆசிரியர். தன்னடக்கத்துடன் என்றும் வாழ்ந்த செம்மல் அவர். "தன்னையாள்பவர் தரணியாள்வார்" என்ற முதுமொழிக்கு அவர் ஒரு நல்ல எடுத்துக்காட்டு.

அவரின் அன்பு மனைவியாரை இழந்து அவரின் பூதவுடலைக் கொழும்பில் இருந்து எடுத்து செல்லும் தருணத்தில் தான் அவரை இறுதியில் நேருக்கு நேர் கண்டேன். அன்பு இல்லத்தரசியை இழந்த துயரில் மனமுடைந்து போய் இருந்தார்.

பிரபல தமிழ் அறிஞர் உடுப்பிட்டிச் சிவசம்புப்புலவர் பரம்பரையில் வந்த நீலகண்டன் மாஸ்டர் தமிழே உயிராக வாழ்ந்தவர். அவர் தமிழைக் கொட்டை எழுத்துக்களில் அழகாக எழுதுவார். செம்மையாக அழகு தமிழில் உரையாற்றுவார். சுவைமிகு தமிழ் வார்த்தைகளில் கவிதைகள் எழுதுவதிலும் அவர் ஒரு வல்லுநர். தமிழாகவே வாழ்ந்து எங்களைத் தமிழ்ப் பட்டறையில் வளர்த்துவிட்டு அந்த ஆசான் இன்று

மறைந்துவிட்டாரா? இல்லை. பூதவுடல் துறந்தாலும் என்றும் எங்கள் உள்ளங்களில் வாழ்வார்.

"தங்களிடம் பெற்றோர்களால் ஒப்படைக்கப்பட்டுள்ள மாணவர்களின் உள்ளத்தை வளர்த்தெடுப்பதுவும் மாணவர்களின் உள்ளத்தை அறிவுத்துறையில் பண்படுத்துவதும் ஆசிரியர்களுக்குரிய தனித்துவமான செயல்களாகின்றன. பாடசாலை ஆசிரியர்கள் சிலவேளைகளில் பெற்றோர்களால் குழந்தைகளுக்குச் செய்ய இயலாதவற்றையும் கூட செய்வார்கள். ஆசிரியர்களின் இவ்வாறான செய்கைகளால் தான் சமூகத்தின் மத்தியில் அளப்பரிய மதிப்பினையும் பெறுகின்றனர்" என ஒரு கல்விமான் கூறியிருப்பது என் நினைவிற்கு வருகின்றது.

"தந்தை தாய் ஆவானும் கார்கதி இங்கு ஆவானும்
அந்தம் இலா இன்பம் நமக்கு ஆவானும்
எந்தம் உயிர் தான் ஆகுவானும்
சரண் ஆகுவானும் அருட்கோன் ஆகுவானும் குரு."

என்ற பாடல் குருவின் மகத்துவத்தை எடுத்துரைக்கின்றது. அத்தகைய உன்னத பணி புரிந்த ஆசிரியர் வரிசையில் முதன்மை நிலையில் நிறுத்தப்பட வேண்டியவர் இந்தக்குரு நீலகண்டன் மாஸ்டர்.

நல்லவர்கள் நல்லவற்றிலிருந்து ஒரு போதும் வழுவமாட்டார்கள். எவ்வளவு இன்னல் துன்பம் வந்தாலும் தங்களது தகுதியிலிருந்து குறைய மாட்டார்கள். சந்தனம் அரைத்தாலும் மணக்கும் அகில் புகைந்தாலும் கமழும் சங்கு சுட்டாலும் வெண்மையாகவே இருக்கும்.

"கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே சங்கு
சுட்டாலும் வெண்மை தரும்"
என்றார் யார்.

அவர் என்றும் அவரால் உருவாக்கப்பட்ட என்னைப் போன்ற மாணவர்களின் உள்ளங்களில் வாழ்ந்து கொண்டிருப்பார். அந்தப் புனித ஆத்மா என்றும் மறைந்துவிடாத ஒளிப்பிழம்பாக எங்கள் இதயங்களில் பிரகாசித்துக் கொண்டிருக்கும்.

நீல மயிலூர் கந்தவன
நிமலா விரிந்து பரந்தவிந்த
ஞால வுயிர்கட் குயிரான
நாதா சுவையின் செழுந்தமிழால்
கால மெல்லா முன்றனருட்
கமலத் தாட்சீர் தனைப்பாடிச்
சால மகிழ்ச்சி கொள்ளவரந்
தருவாய் தருவாய் தருவாயே.

(கந்தவன மணிமாலை : 5-
புலவர்மணி கா.நீலகண்டன்)



# சாரண ஆசிரியராகிய தமிழ்ச்சான்றோன் புலவர்மணி

திருமிகு சி.கனகசபை
செயலாளர் - பழையமாணவர் சங்கம்
உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரி

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"

புலவர்மணி காங்கேயன் நீலகண்டன் ஆசிரியர் அவர்கள் உடுப்பிட்டி அமெரிக்க மிசன் கல்லூரியில் சாரண ஆசிரியராக இருந்த காலத்தில் சாரணியம் சிறப்பாக வளர்ந்தது. இக்காலப்பகுதியிலேயே நானும் குருளைச் சாரணராக இணைந்து கொண்டேன். நீலகண்ட ஆசிரியர் அவர்களின் ஆற்றல், ஆழ்ந்த அறிவு, சிறந்த பண்பு என்பன என்னை அவர்பால் பெரிதும் ஈடுபாடு கொள்ள வைத்தன. அவர் காலத்தில் எமது சாரணர் குழு வெளிமாவட்டங்களுக்குச் சென்று பாசறை அமைத்துப் பயிற்சி பெற்றது குறிப்பிடத் தக்கது. இவர் தமது காலத்தில் சாரணர்கள் ஒழுக்கமாகவும் சாரண விதிகளுக்கு அமைய நடக்க வேண்டும் என்பதிலும் மிகக் கடுமையாக இருந்து செயற்பட்டார். இவரால் சிறந்த ஒழுக்கக்கட்டு ப்பாட்டில் வளர்க்கப்பட்ட சாரணர்களாகிய நாம் பிற்காலத்தில் இராணிச் சாரணர்களாகி **1966** ஆம் ஆண்டு அகில இலங்கைச் சாரணியர் கொடியினை மூன்று தடவை அணித்தலைவன் என்ற முறையில் மேன்மை தங்கிய மகாதேசாதிபதி திரு வில்லியம் கோப்பல்லாவ அவர்களிடம் இருந்து

பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்தது. இப்பெருமைக்கு மூலகாரண கர்த்தாவாக இருந்தவர் திரு கே. நீலகண்டன் ஆசிரியர் என்றால் அது மிகையாகாது.

மிக நீண்ட இடைவெளிக்குப் பின் **1989.02.16** ஆம் நாள் எமது கல்லூரி வளவில் திரு. கே. நீலகண்டன் அவர்களைச் சந்தித்தேன். எமது கல்லூரி முற்றாக அழிக்கப்பட்டிருந்த காட்சியை காட்டிப் பாரடா கனகசபை கல்லூரியின் கோலத்தை, கல்லூரி மட்டும் எரிக்கப்படவில்லை அதனுடன் சேர்ந்து எனது ஆக்கங்கள், ஆய்வுக் கட்டுரைகள், தொகுப்புக்கள் எல்லாமே அழிந்து விட்டது என மிக வேதனையுடன் முறையிட்டார். அக்கால கட்டத்தில் வீட்டைப் பார்க்கிலும் பாடசாலை பாதுகாப்பென அவர் கருதித் தனது முக்கிய ஆவணங்களை பாதுகாக்கும் பொருட்டு அங்கே வைத்திருந்தார்.

கல்லூரியின் அழிவுக்குப் பின் அன்றுதான் அ.மி.கல்லூரி பழைய மாணவர் சங்கம் புனரமைக்கப்பட்டு முதற் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அன்றைய நிகழ்வு நீலகண்டன் ஆசிரியர் அவர்களின் இறை வணக்கத்துடனேயே ஆரம்பமானது. அதில் பேராசிரியர் அழகையா துரைராசா அதிபர் திரு S.S.செல்லத்துரை அவர்கள் தலைவராக முன்மொழிய இவர் வழிமொழிந்து ஓர் உன்னத பழைய மாணவர் சங்கத்திற்கு உன்னத தலைவனை தீர்க்கதரிசனத்துடன் தேர்ந்தெடுத் தார்கள். அவரது செயற்குழுவில் நானும் ஓர் உறுப்பினராக இணைந்து பல வருடங்கள் கல்லூரித் தாய்க்குச் சேவையாற்றினேன். அக்கால கட்டத்தில் **16.07.1989**ம் திகதி நடைபெற்ற செயற்குழு

கூட்டத்தில் A.M College Past Pupils Association என மாற்றி அமைக்க வேண்டும் என்ற பிரேரணையை முன் வைத்தார். ஆரம்ப காலங்களில் இக்கல்லூரியில் பெண் பிள்ளைகளும் கல்வி கற்றார்கள் என்பதே அதற்குக் காரணம். என அன்றிலிருந்து UAMC Past Pupils Association என அமைக்கலானோம். மேலும் பங்குனி 1991ம் காலப்பகுதியில் கல்லூரியில் ஆங்கிலம் கற்பிக்க ஆசிரியர் இல்லாத நிலையில் நீலகண்டன் ஆசிரியர் அவர்கள் தானாகவே முன்வந்து காலை 10 மணிமுதல் 12 மணிவரை சிறிது காலம் ஆங்கிலம் கற்பித்தார்.

அவருடைய சகபாடி பேராசிரியர் துரைராசா அமரத்துவம் அடைந்த பின்பு 1994.08.28ம் திகதி நடைபெற்ற மாணவர் சங்கப் பொதுக்கூட்டத்தில் சமர்ப்பித்த ஆண்டறிக்கையில் அன்னாரின் நினைவுக் கட்டுரையை பிரசுரிக்கும் பொருட்டுத் திரு. நீலகண்டன் ஆசிரியர் அவர்களை ஆக்கித்தருமாறு கேட்டிருந்தேன். அவருமோ நண்பனின் நினைவு அஞ்சலியாக கட்டுரையை ஆக்கித் தந்துதவினார். அக் கட்டுரையில் என் நெஞ்சை தொட்ட மிக வேதனையான பகுதி,

"அவர் பிறந்த மண் உடுப்பிட்டி மண், தவழ்ந்தமண், தார் நடைபோட்ட மண், தள்ளாடி விழுந்தமண், எல்லாம் உடுப்பிட்டி மண்தான். தள்ளாப்பராயம் வந்து தள்ளாடி விழாத மண்ணாய் விட்டது, அந்த உடுப்பிட்டி மண். அவர் வெந்த மண்ணாகியும் விடவில்லை இந்தமண் அவர் சொந்தமண் இதை விரும்பவில்லைப் போலும்."

என்னே அவரது திறமை அன்னாரது உருவம் மறைந்தாலும் என்றும் இதயம் நிறைந்த நினைவுகளாய் எம்மோடு வாழ்ந்து கொண்டிருக்கும். திரு நீலகண்டன் அவர்களை எமக்குக் குருவாகத்தந்த எல்லாம் வல்ல அந்த இறைவனை வணங்கி நன்றி கூறுகின்றோம்.

*உங்கள் ஆத்மா சாந்திபெற,*
*உயருலகில் அமைதி பெற,*
*இறைவனுடன் கலந்துய்ய,*
*எமது சாரணர் சார்பாக,*
*பழைய மாணவர் சார்பாக*
*இறைவனை வேண்டுகின்றேன்*
*சாந்தி! சாந்தி! சாந்தி!*

மாவின் குயில்க ளிசைபாடும்
மருதங் கிளிகள் அணிசெய்யும்
பூவின் வண்டர் சுதிகூட்டும்
பூவைக் கணங்கள் லயமூட்டும்
ஆவின் நிரைகள் ரசித்து நிற்கும்
அழகு மயில்க ளாடிநிற்கப்
பாவி னின்பச் சுவையமிழ்தம்
பரவுங் கந்த வனத்தலத்தே.

*(கந்தவன மணிமாலை : 16-*
*புலவர்மணி கா.நீலகண்டன்)*



# அற இலக்கண வழிநின்று ஆங்கில இலக்கண ஒளிதந்த அரும்பெரும் அறிஞர்

திருமிகு வே.தி.செல்வரத்தினம்
ஓய்வுநிலைப் பிரதிச் செயலாளர்
வடமாகாணக் கல்வியமைச்சு

நான் திரு நீலகண்டன் அவர்களை இரண்டு மாதங்களுக்கு முன்பு சந்தித்த போது சிறந்த கட்புலன், செவிப்புலன் ஆகியவற்றடன் நடந்து சென்றார். திடீரென சுகவீனமுற்றது கவலைக் குரியது. அதேபோல் எவ்வித சலனமுமின்றி இறைவனடி சேர்ந்து விட்டார்.

திரு நீலகண்டன் ஆசிரியர் எனக்கு 7ம் தரம் வரை ஆங்கிலம் கற்பித்தவர். அவரின் ஆங்கில உச்சரிப்பு போற்றுதற்குரியது அதேபோல் எம்மையும் உச்சரிக்க வைப்பார்.

ஆங்கில எழுத்து உறுப்பமைய எழுதுவதற்கு எம்மை மையில் தொட்டெழுதும் தடிப்பேனை யைப் பயன்படுத்த அறிவுறுத்துவார். வேறு எழுது கருவிகள் பயன்படுத்த முடியாது. ஆங்கில இலக்கணம் கற்பிப்பதில் திரு கா.நீலகண்டன் ஆசிரியர் சிறப்பு மிக்கவர்.

கம்பன் வீட்டுக் கைத்தடியும் கவிபாடும் என்பது போல் சிவசம்புப்புலவர் பரம்பரையில் வந்த திரு கா.நீலகண்டன் ஆசிரியரும் தமிழில் புலமைமிக்கவர். இன்றும் எனக்குப் பசுமையான நினைவில் நிற்கும் ஒரு நிகழ்வு அவரை ஒரு சக

ஆசிரியர் adjective என்பதற்குத் தமிழ் யாது எனக் கேட்டபோது என்னை அவர் அழைத்து what is adjective என்று அவ்வாசிரியர் முன்பு கேட்டார். நானும் அதற்கு which describes the noun என்று கூறினேன். மீண்டும் தமிழில் அவரே கூறினார். பெயர்ச்சொல்லை வர்ணிப்பது. இதனை எழுவாய் அடைமொழி என்று அழைப்பார்கள் எனக் கூறினார். ஆங்கிலத்தில் எத்தகைய புலமை உள்ளதோ அத்தகைய புலமை தமிழிலும் அவரிடம் இருந்தது.

எங்களுக்கு மார்க்கண்டேயர் நாடகம் பழக்கியது ஒரு சுவையான அனுபவம். இயமனாக வருபவர் எவ்விதம் மார்க்கண்டேயன் தன்னுடன் வரும்படி அழைப்பதைச் சைகை மூலம் செய்து காட்டினார். வார்த்தையால்கூட அவ்விதம் இவர் ஒரு அசைக்க முடியாத நாடக இயக்குனராகவும் இதனைவிட இவர் ஒரு சாரண ஆசிரியராகவும் செயற்பட்டார். இன்றும் அவர் கம்புகளாற் கட்டிய கோபுரத்தில் ஏறி நின்று salute அடிப்பது எனது கண்முன்னால் நிற்கின்றது.

திரு கா.நீலகண்டன் ஆசிரியர் தேவாரத்தை அதற்குரிய பண்ணுடன் பாடுவார். முதன் முதலில் 1960இல் இப்பாடசாலையிற் பூஜை நடாத்த முன்னோடியாக இருந்தவர். சகலகலாவல்லி மாலையைப் பாடுவதற்கு முன்னோடியாக இருந்தவர்.

ஆங்கிலப் புலமை தமிழ்ப்புலமை சாரணியம், நாடக இயக்குனர் பாடகர் ஆகிய பல்திறன் (multi talents) உள்ளவர்தான் சிறந்த ஆசிரியர் என்பதற்கு எமது ஆசான் திரு கா.நீலகண்டன் ஓர் எடுத்துக்காட்டு.

நாம் ஆங்கிலம் சிறப்பாகப் பேசுகின்றோம் என்று யாராவது கூறினால் அதற்கு உரிமையாளர் திரு கா.நீலகண்டன் ஆசிரியர். ஒழுங்குடன் ஒழுக்கமும் பேணி நல்ல சிந்தனையாற்றலை வளர்த்த எமது ஆசான் திரு கா.நீலகண்டனின் ஆத்மா இறைவனிடையில் சேர்ந்து சாந்தியடைய எனது பிரார்த்தனைகள்.

கடையேன் முன்னாட் செய்வினையே
கடுத்துச் சால வருத்தவெனை
யுடையாய் நினையே நொந்தழிவேன்
உழுதேன் விதைத்தே னறுப்பவன்யான்
யடையே னுள்ளத் தெளிவீதுற்
றனுப வித்தே தீர்ப்பதொன்று
கொடையின் பொற்பார் கந்தவனக்
குமரா வுற்ற துணைநீயே.

*(கந்தவன மணிமாலை : 9-
புலவர்மணி கா.நீலகண்டன்)*



# வானுறையும் தெய்வத்துள் வைக்கப்பட்டவர்

திருமிகு பொ.இராமலிங்கமூர்த்தி
இளைப்பாறிய மின் அத்தியஸ்தகர்

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்தில் வைக்கப்படும்" என்னும் வள்ளுவர் வாக்கிற்கு அமைய அன்பும் பண்பும் கொண்ட அமரர் திரு.காங்கேயன் நீலகண்டன் அவர்கள் வாழ்ந்தார்.

அன்னார் கற்பித்த பாடசாலையாகிய உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் எங்களுக்கு சாரணிய ஆசிரியராக பயிற்சியளித்து வந்தார்.

அவருடன் திரு கோ.செல்வநாயகம் (சாரணிய ஆணையாளர்) அவர்களுக்கும் அன்னாரின் உதவி ஆசிரியர்களாக திரு க.சண்முகசுந்தரம், திரு எம்பெருமான் அவர்களும் இப் பாடசாலையில் சாரணியத்தையும் ஒரு கற்கைநெறியாகக் கற்பித்தார்கள். இவர்களின் சாரணியத்தில் நான் 1965ஆம் ஆண்டு சேர்ந்தேன். என்னுடன் சாரணியர்களாக இருந்த நண்பர்களையும் நினைவுகூற விரும்புகிறேன்.

நண்பர்கள் திரு தர்மசோதி, திரு கனகசபாபதி, திரு முத்துரட்ணானந்தன், திரு தவேஸ்வரன், திரு அனந்தராசா, திரு வசந்தகுமார்,

திரு மகாலிங்கம், திரு கோணலிங்கம், திரு முருகேசு, திரு செல்வேந்திரன், திரு இரவீந்திரன், திரு இரட்ணசபாபதி ஆகிய நாம் பன்னிருவரும் இராணிச் சாரணராகி **1967**ஆம் ஆண்டு முதல் **1969**ஆம் ஆண்டுவரை "அயிலன் மெறிற் பிலாக்" (ILAN MERIT FLACK) எனும் கொடியை இலங்கையை ஆண்ட மகாதேசாதிபதியிடம் மூன்று முறைபெற்று அ.மி.கல்லூரிக்குப் பெருமையை ஈட்டிவைத்தோம்.

இதற்கெல்லாம் காரணம் ஆசானின் முழுமுயற்சியே இது என்றென்றும் எங்கள் மனதிலிருந்து நீங்காது. இவர்களின் வழிகாட்டலினால் நாம் யாபேரும் அரச திணைக்களங்களில் பெரும் பதவி வகித்தோம் வழிகாட்டிய ஆசான்களில் எங்களைவிட்டுப் பிரிந்த எங்கள் ஆசான் அமரர் திரு கா.நீலகண்டன் அவர்களின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்.

ஓம் சாந்தி



# புலமையும் கேண்மையும் நிறைந்த புலவர்மணி

திருமிகு கே.சண்முகசுந்தரம்
முன்னாள் தலைவர் - பழையமாணவர் சங்கம்
அமெரிக்க மிஷன் கல்லூரி

புலமையும் கேண்மையும் மிகுந்த நீலகண்டன் அவர்களோடு நெருக்கம் ஏற்பட்ட காலத்தை மீள நினைக்கும்போது அற்புதமான தருணங்கள் அகத்திலே விரிகின்றன. 1948இல் கரணவாய் தெற்கு, சோளங்கன் பிரதேசத்திலிருந்து; கரவெட்டி விக்னேஸ்வரக் கல்லூரிக்குக் கல்வி பயிலச் சென்றோரில் அனேகமானோர், சிறு பிரச்சினை காரணமாக உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் கல்வியினைத் தொடர்ந்தோம். அப்போது தான் நீலகண்டன் அவர்களுக்கும் சிதம்பரப்பிள்ளை அவர்களுக்கும் (முன்னாள் அதிபர் - உடுப்பிட்டி அ.மி.க) சிநேகிதம் ஏற்பட்டது.

நட்பின் நெருக்கம் வலுப்பெற மாலை நேரங்களில் நீலகண்டன் அவர்கள் நடந்து சிதம்பரப் பிள்ளையின் வீட்டுக்கு வருவதையும், நீண்டநேரம் கருத்தாடல் நிகழ்த்துவதையும் வழக்கமாக்கிக் கொண்டார். அத்தகைய பொற்காலப் பொழுதொன்றிலேதான் நீலகண்டன் அவர்கள் எனக்கும் அறிமுகமானார். எனினும் தீவிரத் தன்மை மிக்க நெருக்கமாக அமைந்துவிடவில்லை. ஆனால் சிதம்பரப்பிள்ளையோடு நீலகண்டன் அவர்கள்

கொண்டிருந்த நெருக்கம் ஆச்சரியங்களின் தொகுப்பாகவே அமைந்திருந்தது. சிதம்பரப் பிள்ளை தனது பெண்பிள்ளைகளுக்கு நீலவாணி, நீலரஞ்சி, நீலகாந்தி எனப் பெயரிடு மளவிற்கு நீட்சிபெற்றது. எங்கள் கல்லூரிக்குச் சிதம்பரப் பிள்ளை அவர்கள் அதிபராகப் பொறுப்பேற்ற பின்பும் இருவருக்குமான நட்பு மேலும் இறுக்க மடைந்தமை குறிப்பிடத்தக்கது.

நீலகண்டன் அவர்களின் வாழ்வோடு எங்கள் கல்லூரி இரண்டறக் கலந்திருக்கிறது. கீழ் வகுப்பிலிருந்து SSC வரை எங்கள் கல்லூரியி லேதான் படித்தார். பேராசிரியர் துரைராஜாவும் இவரோடு ஒன்றாகக் கல்வி கற்றார். JSC வரும்வரை நீலகண்டன் அவர்கள் முதல் மாணவனாகத் திகழ்ந்தார். பேராசிரியர் துரைராஜா பின்னுக்குத்தான். Prep SSC வந்தபின் நீலகண்டன் கலைப்பிரிவையும், துரைராஜா விஞ்ஞானப் பிரிவையும் தேர்வு செய்தனர். Hartely College, Jaffna Hindu College என்னும் முன்னணிக் கல்லூரிகளில் ஒன்றிலாவது HSC படிக்கும் ஆர்வத்தோடு தீவிர முயற்சி செய்தார். எனினும் சரிவர அமையவில்லை.

நீலகண்டன் அவர்களுக்கு மேல்வகுப்பு (HSC, பல்கலைக்கழகம்) படிக்கும் வாய்ப்பு பொருந்தி அமையாத நிலையில் SSC சித்தியுடன் எங்கள் கல்லூரியில் பயிற்றப்பட்ட ஆசிரியராக K.T.John காலத்திலும் தொடர்ந்து S.S.செல்லத்துரை காலத்திலும் பணிபுரிந்தார். கல்லூரியின் சாரணர் குழுப் பொறுப்பினை ஏற்றுத் திறம்பட வழிநடத்தினார். அக் காலத்தில் எங்கள் கல்லூரியில் ஓர் உதவி ஆசிரியராக நானும் இணைந்து கொண்டேன். நான் துடிதுடிப்பான இளைஞனாக

இருந்தமையால் என்னைச் சாரணர் குழு ஆசிரியனாக இணைத்துப் பயிற்சிப் பாசறைகள் பலவற்றுக்கு அனுப்பிவைத்தார். பின்பு என்னைச் சாரணியத்தில் பொறுப்புடைய ஆசிரியராக்கி தான் விலகிக்கொண்டார். தொடர்ந்து ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்குச் சென்று பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியராக வெளியேறினார். சொற்ப காலம் பிறிதொரு கல்லூரியில் சேவையாற்றிவிட்டு மீண்டும் எங்கள் கல்லூரியில் ஓய்வுபெறும்வரை ஆங்கில ஆசிரியராகக் கனதியான சேவையினை வழங்கினார்.

பொறுப்புணர்வும், செம்மையான கண்டிப்பும் ஒருங்கே வாய்க்கப்பெற்ற ஆளுமை யாளர்களுள் நீலகண்டன் அவர்களையும் அடக்கி வியக்கலாம். சாரணர் பயிற்சிக்காக வருடத்தில் ஓரிரு தடவை வெவ்வேறு இடங்களில் பாசறை அமைப்பதுண்டு. சந்நிதி கோவில் திருவிழாக் காலத்தில் அடியவர்களை ஒழுங்குபடுத்த சாரணர்களைப் பயன்படுத்துவோம். இவற்றுக்குத் தேவையான உணவுப் பொருட்களைத் தத்தமது வீடுகளிலிருந்து சாரணர்களே கொண்டு வருவர். எல்லாப் பொருள்களையும் திரட்டி லொறியில் ஏற்றிச் சென்று மீதியைக் கொண்டு வருவோம். ஒரு தடவை ஏறக்குறைய 10 இறாத்தல் சீனியுள் சிறிதளவு மண்ணெண்ணெய் கலந்துவிட்டது. மண்ணெய் கலந்த சீனியைத் தூய்மைப்படுத்த முயலாமல் அப்படியே மண்ணுக்குள் வெட்டித் தாழ்க்கச் சொல்லிவிட்டார். சமையற் பாத்திரங்களை அயல் வீடுகளிலிருந்து இரவல் பெற்றுக்கொண்டு போவோம். சோறு சமைக்கும் பெரிய கிடாரம் ஒன்று இரவல் பெறும்போதே கரிபிடித்துக் கறுப்பாக இருந்தது. எனினும் கடைசி நாள்

திருப்பிக் கொடுக்கும்போது சிறிதளவு கரியுமின்றிச் சுத்தமாக்கித் தூய கிடாரம் போலத் திருப்பிக் கொடுக்கப்பட்டது. அனைத்திலும் பூரணத்து வத்தைக் கடைப்பிடித்ததால் மாணர்வகளுடன் எப்போதும் கண்டிப்பாகவே காணப்படுவார்.

ஆங்கில ஆசிரியராகச் சேவையாற்றினாலும் உடுப்பிட்டி சிவசம்புப்புலவரின் குடும்பத்தைச் சேர்ந்தமையினால் தமிழிலே அளவுகடந்த நாட்டம் காணப்பட்டது. கவிதை எழுதுவதில் "குலவித்தை கல்லாமல் பாகம்படும்" என்பதை உறுதிசெய்தார். எங்கள் கல்லூரிக் கீத்தின் இனிமையும், எளிமையும், ஆழமான கவித்துவமும், இசைக்கோர்ப்புக்கு ஏற்ற நடையும் அவரது உன்னத புலமைக்குத் தக்க சான்றாகவே அமைகின்றன.

"நாத இசையொடு நாங்கள் சமூகமும்
நாடும் வளம்பெறப் பீடும் பெருக்கி"

என்ற வகையிலே தேசிய உள்ளீரோட்டம் சலசலக்க வசீகரமான வரிகளால் நகரும் கல்லூரிக்கீதம் "ஊழிதொறூழி ஊழிதொறூழி" தனது மேன்மை யை வெளிப்படுத்திக் கொண்டே யிருக்கும். பல கல்லூரிக்கீதங்களோடு ஒப்பிடும்போது எங்கள் கல்லூரிக் கீதத்தின் தனித்துவம் ஆச்சரியம் தருகிறது. போற்றுதற்குரிய தென்ற உண்மை புலனாகின்றது. கல்லூரியில் நிகழும் சைவசமய நிகழ்ச்சிகளில் நீலகண்டன் அவர்கள் முக்கிய பங்கு வகிப்பார். இவரது வாழ்வு சைவத்தோடும் தமிழோடும் கலக்க சைவங்கலந்த தமிழனாகவே வாழ்ந்தார்.



## OUR TEACHER NEELAKANDAN MASTER

R.Jayarajah, A.Thavakumar, T.Uthayakumar

*AMC - PP- UK*

**Mr K Neelakandan** was known to us as our teacher Neelakandan master. We are saddened to hear that Neelakandan master has passed away and we would like to express our condolences to his family and friends.

We would like to take this moment to reflect and commemorate Neelakandan master on his involvement with our School and community activities. He was not only a teacher with AMC but also was one of the past pupils of our School. He took extra interest and played an active role in the development of the School in all areas. When our school was bombed and reduced to rubble, he was one of the team members who supported the principle to maintain and rebuild the school. Alongside his class mate, late Professor Thurairajah of AMC PPA, Neelakandan master worked hard to put up a temporary shed in "Sanmuka Veddai" (our football and athletic ground) and helped the students to continue with their studies. He was in the Scouts squad with Selvanajagam master and Sanmugasundram master; leading our School Scouts cadets to win

competitions in the regional and national levels. Also, his participation in guiding our School Scouts group on crowd control in "Sanathi Kovil Thiruvilla" was an example of his exemplary community involvement. Another contribution was towards the annual "Sarasvathi Poosai". We could remember him running around to meet participants to organise debates and other events.

Finally, we will not forget Neelakandan master's English class. He would ask each and every student to stand up and recite the spelling for random words. We can still remember when some of us were not able to spell words like "Vegetable"(Vg...tabl....) correctly and would be punished for it with his strong needle "pinch". We would scream like anything. The punishment was even more severe - with cane - if we did not get it correct in the next class. It makes us laugh now, after we realized how beneficial it had been when we were doing our professional studies in the UK. We still tell our own children of the amazing experiences we had with him.

His departure is certainly a loss to our School and to our community.

We pray that his soul rest in peace.



# எனது ஞானகுரு

"ஞாளத்தைச் சங்கிலியால் அளக்கலாமோ
ஞானகுரு புகழினை நாம் வகுக்கலாமோ"
- பாரதியார்

**திருமிகு செல்லத்துரை சுதர்சன்**

விரிவுரையாளர் - தமிழ்த்துறை
பேராதனைப் பல்கலைக்கழகம்

வாயினால் சொல்லிடவும் முடியாத, வரிசையுடன் எழுதிவைக்க முடியாத, ஆயிரநூல் எழுதிடினும் முடிவுறாத பெருமை பெற்றவர் எனது ஞானகுரு நீலகண்டன் ஆசிரியர் அவர்கள். வேறுவேறு உருவும் வேறுவேறு இயற்கையுமாய் விரிந்து பரந்த இவ் உலகையே தமது பெருமையால் சிறியதாகக் காணச்செய்தவர் அவர். அவரைப் பற்றி எழுதுவதென்பதும் பேசுவதென்பதும் மிகவும் மகத்தான காரியந்தான்.

ஆனால் யோகர் சுவாமிகள் ஞானகுருமார்களைப் பற்றிக் கூறும்போது "எங்களைப் பற்றி முழுமையாய் எவராலும் எழுதமுடியாது" என்று ஒரு தடவை கூறியது நினைவிற்கு வருகிறது.

பாவத்தை அறுத்து, பயத்தைச் சுட்டு, பாவனையால் பரவெளிக்கு மேலே தொட்டவரை எழுதுவதற்கு அவரது அடியொற்றி அவர் பின்னால் திரிந்தவன் என்ற தகுதியன்றி வேறெதுவும் மேலான தகைமை என்னிடம் இல்லை. இனியும் இருக்கப் போவதில்லை.

எனினும் "எப்போதும் குரு சரணம் நினைவாய் நெஞ்சே!" என்று நெஞ்சுக்குரைத்து

எழுத எழுத விரியும் மகத்தான என் ஆசிரியரின் வாழ்வின் சில பக்கங்களை வரையலாம்...

அவரது வாழ்வின் ஒவ்வொரு தினமும் வாடாமலராய் மானுடம் சூடிமகிழும் தன்மை பெற்றது. அவரின் உயர்ந்த நிலை பற்றிய மனப்பதிவைப் பதிவுசெய்யலாம்.

"முதன்முதலாகச் சிலரைப் பார்க்கும்போது இறைவனுடைய ஞாபகம் ஏற்படும். இறைவனுடைய அடியவர்களில் சிறந்தவர்கள் அவர்களே என்றும் அவர்களே இறைவன் என்றும் புரிந்துகொள்"

என்று சூஃபி ஞானமரபில் கூறுவர்.

என் முந்தைத் தவப் பயனும் எந்தை தாய் செய்த தவப் பயனும் கைகூடி மனிதவுருவில் ஒரு கடவுளைக் காட்டியது, 1990ஆம் ஆண்டு. அந்த ஆண்டுதான் அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் சேர்ந்திருந்தேன். கோட்டமட்டத் தமிழ்த் தினப் பேச்சுப்போட்டியில் என்னைப் பங்குபெற வைப்பதற்கு ஆசிரியர் தீர்மானித்தனர். நான்கு தலைப்புக்கள் தந்தனர். யாரிடமாவது எழுதிப் பாடமாக்க வேண்டும் என்பது கட்டளை. யாரிடம் செல்வது?

நாங்கள் இருந்த வீட்டில் சொலமன் மாஸ்ரர் சொன்னார் "நீலகண்டன் மாஸ்ரரிட்டக் கேளும்" என்று. நானும் போனேன். நாற்பாதங்களில் ஒன்றில் நின்றால் நற்கதி அடையலாம் என்பர். ஆனால் எனக்கு "பேச்சுப் போட்டி" ஒரு பாதமாய் வந்து, அதன் வழிநின்று, செல்ல விதி தூண்டியது.

மாலை நேரம். ஒரு துண்டு ஆடை கட்டியபடி அவர் தனது வீட்டை விட்டுப் புறப்படுகிறார். தனது பசுமாடுகளை மீண்டும் மனைக்கு அழைத்துவர. தாய்ப் பசுவை விடவும் மேலான வாஞ்சையுடன்.... அவரது நெற்றியில் விபூதிப் பூச்சு. பூசிய நீறுபோல் அவரது உள்ளமும் புனிதமானது என்பதை அவரது முகம் மலர்ந்து காட்டியது. வாசலில் நான்.

"சேர்...", "நீ சொலமன் மாஸ்ரர் வீட்ட இருக்கிற பெடியனல்லோ?", "ஓம் சேர்", "என்ன விசயம்?", "தமிழ்த் தினப் பேச்சுப் போட்டிக்கு பேச்சு எழுத வேணும்... அதுதான் சேர்", "சொலமன் மாஸ்ரர் இஞ்சாலை சாச்சுவிட்டிட்டார் போல" என்று சொல்லி உதட்டுக்குள் ஒரு சிரிப்பு விட்டார். உள்ளத்தின் தூய்மை உதட்டில் மின்னி மறைந்தது. சொலமன் மாஸ்ரரின் சிபார்சில் பேச்சு எழுதித் தரப்போகிறார் என்பது நிச்சயம் என்ற நினைப்பு என்னுள் தலைதூக்கச் சேர் சொன்னார்

"பேச்சுப் போட்டியெண்டால் பேச வெல்லோ வேணும்? ஏன் எழுத வேணும்? பேச்சை எழுதுறதோ,? பேசுறதோ?"

எனக்குச் சுதந்திரம் கிடைத்த ஓர் உணர்வு. "உங்க முத்துவேல் மாஸ்ரரிட்ட (பண்டிதர் முத்துவேல்) போய்க் கேள்" என்று அவர் சொன்னதும் நான் தயங்கி நிற்க, "வா ஒருக்கா வயலுக்குப் போவம்" என்று அழைத்துச் சென்றார். இனி வாழ்நாள் முழுதும் இவர்தான் என்னை அழைத்துச் செல்லப் போகிறார் என்பதை அப்போது நான் நினைக்கவில்லை.

அழைத்துச் சென்றவர் துவாளிப் பிள்ளையார் வாசல் மணலில் "இரு" என்று சொல்லி, தானும் இருந்தார். எனக்குச் சற்றுத் தூரத்தில் ஏகாம்பர ஐயா சிறுவர்களுக்கு ஏதோ பாடம் சொல்லிக்கொண்டு அமர்ந்திருந்தார். நீலகண்டன் சேர் "தலைப்பு என்னவாம்?" என்று கேட்டார். நான் நான்காக மடித்த ஒற்றையை விரித்து, தலைப்பு நான்கையும் வாசித்து முடித்தேன். ஒரு தலைப்பில் சிந்தித்து எப்படிப் பேசலாம், என்னென்ன விடயங்களை எப்படி எப்படிச் சேர்க்கலாம், மந்திரம் போல் சொல்லின்பம் எப்படிக் கூட்டலாம் என்று "நான் விரும்பும் இலக்கியக் கதாபாத்திரம்" என்ற ஒரு தலைப்பை மட்டும் வைத்துக்கொண்டு கூறிவிட்டு "சரி ஒருக்காப் பேசு பாப்பம்" என்றார்.

எழுந்து நின்றேன். பதற்றத்தில் கால்கள் நடுங்கின. அவர் சொன்னவற்றை உள்வாங்கிக் கொண்டு வழமைபோல இருமிச் செருமிவிட்டு, பேச்சைத் தொடங்கினேன். ஏதோ எனக்குத் தெரிந்த சில வசனங்கள், சில பாடல் வரிகள், நானே சிலவற்றைச் சொல்லிவிட்டு. ஓர் அறிஞர் சொன்னார் - ஒரு புலவர் சொன்னார் - எங்கேயோ வாசித்த ஞாபகம் என்றெல்லாம் "வானம்" விட்டுப் பேசிமுடித்தேன்.

பேச்சைக் கேட்டுவிட்டு சேர் சொன்னார் "விசயகாரனாகவும் இருக்கவேண்டும். புத்தகம் படிக்கவேண்டும் விளங்குதோ" என்று. பேச்சின் உள்ளடக்கம் போதாது என்று அவர் கூறுவதைப் புரிந்துகொண்டேன். "சரி... சரி... போ பிறகு பாப்பம்" என்றார். நான் மண்ணைத் தட்டி எழும்பினேன். "நில் கொஞ்சம்" என்றுவிட்டு கோயிலின் வாசற் கதவிற் கட்டித் தொங்கிய

தேங்காய்ச் சிரட்டைக் கூட்டிற்குள் இருந்த விபூதியை எடுத்து என் நெற்றியில் பூசிவிட்டு "போ... போ..." என்றார். வணங்கி நிமிர்ந்த என்னைப் பார்த்துச் "சரி...சரி... எல்லாம் வரும்" என்றார். "உண்மையாவோ சேர்?" என்றேன். "ஓமடா கட்டாயம் வரும்... போடா" என்றார். மேனி புல்லரித்துக் கண்கள் கலங்கின. இப்படிக் கூறும் வார்த்தைகளில் காந்த சக்தியைக் கடவுள் எப்படிக் கரைத்திருக்கிறார்? என்பதற்கு அப்பால், கடவுள் பேசிய ஒலியும் செப்பிய மந்திரமுமாய் அவை எப்படி எனது உலகில் கலந்தன? என்னைக் கரைத்தன? "ஓமடா கட்டாயம் எல்லாம் வரும் போடா" அற்புதம்! என்னைப் பொறுத்தவரை முழுதும் உண்மையே! யார் அறிவார்?

புறப்பட்ட என்னை "சொலமன் மாஸ்ரரிட்டைச் சொல்லு என்னைக் கேட்டதெண்டு" என்று கூறிவிட்டுச் சென்றார். இந்த முதல் நிகழ்வு என்னுள் அவர் பற்றிய அழியாச் சித்திரத்தை ஆழமாகத் தீட்டியிருந்தது. இறையின் பரிவுடன் இருக்கும் இவரை மறுபடியும் சந்திக்க வேண்டும் என்று மனம் தூண்ட ஆசை என்னும் பெரும் தீ சுவாலை விட்டெரிய அன்றிலிருந்து அவரின் தொண்டனாகும் வாய்ப்புத் தெய்வத்தால் எனக்குக் கைகூடித் தொடர்ந்தது.

சன்னாவெட்டையில் எமது பாடசாலை நடந்த காலம். அக்காலத்தில், நான் வீதியில் செல்லும்போது அவர் வீதியில் எதிர்நோக்கி வந்தால் எனது கால்கள் நடக்கும் தொழில் மறந்து ஒய்ந்து நிற்கும். கரணங்கள் அடங்கும். நடந்துவந்த கால்கள் ஒய்ந்ததை அவதானித்தோ என்னவோ

"வீட்டை ஒருக்கா வா" என்று சொல்லிவிட்டுப் போய்விடுவது அவர் வழக்கம். நான் A/L படிக்கும் காலத்தில் என்மீது அதிக கவனம் செலுத்திய வர்களில் அவரும் ஒருவர். (மற்றையவர் தில்லையம்பலம் ரீச்சரும், நடராசா சேரும்)

தமிழ்ப்பாடம் தொடர்பான எனது குறிப்புக் கொப்பிகளை அடிக்கடி வாங்கிப் பார்க்கும் பழக்கம் நீலகண்டன் சேரிடம் இருந்தது. நீலகண்டன் சேரிடம் செல்வேன். அப்போது அவர் ஒரு புலவரின் பாடலை எனது அனுபவமாகவே மாற்றிவிடும் திறனைக் கண்டு வியந்துபோயுள்ளேன். A/L பரீட்சை முடித்துவிட்டுப் பரீட்சைப் பெறுபேறு வந்தவுடன் வல்வெட்டித்துறை மக்கள் வங்கியில் வேலை செய்த காலத்தில், ஒவ்வொரு நாளும் இரவு ஆங்கிலம் படிக்கச் செல்வேன். அப்போது என்னுடன் நீலகண்டன் சேரின் அயலவரான பெரியாம்பி என்று அழைக்கப்படும் விக்னராஜாக் குருக்களும் வருவார். மாலை ஏழு மணிக்குக் குருக்கள் ஐயாவும் நானும் ஆங்கிலம் படிக்க நீலகண்டன் சேர் வீட்டு விறாந்தையில் உட்காரு வோம். அவரிடம் ஆங்கிலம் படிப்பதைவிட நாம் ஆன்மீகம் கதைப்பதுதான்கூட. குருக்கள் ஐயா எப்படியாது சமயத்தைப் பற்றிக் கதைப்பார். நான் தமிழைப்பற்றிக் கதைப்பேன். சேர் இரண்டிற்கும் பதில் சொல்லுவார். இரவு பதினொரு மணிவரை ஆங்கில வகுப்புக்கு இடையிடையே ஆன்மீகமும் தமிழுந்தான் சேர்ந்திருக்கும்.

தமிழ் கற்பதற்கு நான் அவருக்குக் கொடுத்த தொந்தரவும் அவரை என்பால் அதிக அன்புகொள்ள வைத்தன. இன்னும் அவரிடம் ஒரு தந்தை, தாய், குரு என்ற மூன்றுமாகிய தெய்வநிலை இருப்பதை

உணர்ந்த எனக்கு அவர்மீதான ஈடுபாடு பெருகத்தொடங்கியது. "மூவரும் ஒருருவாகிய பேருரு எனது நீலகண்டன் சேர்."

அவரைப் பொறுத்தவரையில் அனைத்து நூல்களையும் மனனம் செய்து வைத்திருந்த ஒருவர். மனனத்திற்கு அப்பால் அது பற்றி ஆழமாகவும் அறிந்து வைத்திருந்தவர். மரபு சார்ந்த தனது பார்வையில் அதனை ஆழமாகவும் சுவைபடவும் கூறுந்திறன் வியக்கத்தக்கதாய் அமையும்.

அவர் சேகரித்த நூல் பொக்கி சங்களை என்னைத் தவிர வேறு எவரையும் அனுமதியின்றிப் பார்வையிட அவர் விரும்பு வதில்லை. சிலவற்றை எனக்கு மட்டுமே வாசிக்கத் தரும் பழக்கம் அவரிடம் இருந்தது. என்மீது அவர்கொண்ட நம்பிக்கை ஒரு மகன்மீது தந்தை வைக்கும் நம்பிக்கைக்கு ஒப்பானது.

பலர் நீலகண்டன் சேரைக் கனிவும் கண்டிப்பும் மிகுந்த ஆசிரியர் என்று கூறுவார்கள். எனக்கு அப்படித் தெரியவில்லை. என்னிடம் அவர் கனிவு மட்டுமே காட்டியிருந்தார். சில மாணவர் அவரைக் கண்டு பயந்து நடுங்குவர். ஆனால் அவரின் அன்பின் அரவணைப்பின் பேரின்பம் யாருக்கும் தெரிவதில்லை. இராமகிருஷ்ணர் காளியைப் பற்றிக் கூறும்போது "பார்வைக்குப் பயமூட்டுவதாக இருந்தாலும் மிக அருகிலே செல்லும்போது அதனை விடவும் அன்பான அரவணைப்பு மிக்க தெய்வம் பிரபஞ்சத்தில் இல்லையென்பதைப் புரிந்துகொள்வீர்கள்" என்று கூறுகிறார். என்னைப் பொறுத்தவரையில் நீலகண்டன் சேரின் கண்டிப்பு எனக்குத்

தெரிவதேயில்லை. ஏனென்றால் அதற்கு அப்பால் அவரிடம் இருந்த பெருங் கனிவில் நான் மூழ்கியிருந்தேன். என்னை எப்போதும் தன் அன்புச்சிறகால் அணைத்துக் காத்தவர். அவரின் கடைசி மாணாக்கனாகத் தொண்ணூறின் முற்பகுதியில் என்னை ஏற்றுக்கொண்ட அவர், இவ்வுலகை விட்டுப் பிரியும்வரை என்னைத் தன்னுடைய மைந்தரைப் போல வைத்து உயர்த்திய நிலையை நினைக்கும்போது எழு பிறப்பிற்கும் அவர் கழல் தொழுது வாழும் கடமை எனக்குரிய பெரும் பேறன்றி வேறு என்ன இருக்கிறது?

பேராதனைப் பல்கலைக்கழகத்திற்கு நான் படிக்கச் சென்ற பின்னர் என்னுடனான தொடர்பினைக் கடிதம் மூலம் வைத்திருந்தார். அவரது கடிதங்கள் கவிதையாகவே அமையும். பெரும்பாலும் கட்டளைக் கலித்துறைப் பாக்களில் அவை அமைந்திருக்கும். கையொப்பம்கூட. முடிக்கும்போது "நீலகண்ட னாமெனும் நீள்பெய ரோனே" என்று கடிதத்தைக் கையெழுத்திட்டு நிறைவுசெய்வார். கொழும்பில் வெள்ளவத்தையில் கொமர்ஷல் வங்கிக்கு அண்மையில் அவர் தேவகியம்மையாருடன் இருந்த காலத்தில் பேராதனையில் இருந்த எனக்குக் கடிதம் ஒன்றை எழுதியிருந்தார். அக் கடிதத்தில் "என்னைப் பார்க்க வேண்டும்" என்ற அவரின் ஆர்வம் வெளிப்பட்டது. அவரின் அன்புத்துடிப்பை அறிந்து கொண்டேன். நான் கொழும்புசென்று அவரைச் சந்தித்தேன். அப்போது மிகப்பெரும் மகிழ்ச்சியில் வீதிவரை வந்து என்னை அழைத்துச்சென்றார். கந்தவனத்திற்குப் போகமுடியாத கவலை அவரிடம் ஆழமாக இருந்ததை அன்றைய அவரது பேச்சு எனக்கு உணர்த்தியது. சில தினங்களுக்கு முன்னர்,

தான் எழுதிய கந்தவன மணிமாலைப் பாடல்களை எனக்குக் காட்டினார். விருந்து தந்து, ஒருசில நூல்களையும் வாசிக்குமாறு கொடுத்து வழியனுப்பி வைத்தார்.

நீலகண்டன் சேர் தனது ஆன்மீகப் பலத்தினை எப்போதும் மறைமுகமாகவே வைத்திருந்தார். நிறைவாகும்வரை மறைவாக இருந்தவர் அவர். அதனைச் சில பெரியவர்கள் அறிந்து வைத்திருந்தார்கள் என்பதைப் பின்னாளில் அறிந்தேன். ஒருமுறை அவரது வீட்டில் அவரிடம் உரையாடிக்கொண்டிருந்தபோது “கடவுள் எங்கும் இருக்கிறார் என்பது எப்படிப் பொருந்தும் சேர்? அவரைக் காணமுடியவில்லையே?” என்று நானும் பெரியாம்பிக் குருக்கள் ஐயாவும் கேட்ட கேள்விக்கு “நீ சாய்ஞ்சு கொண்டு இருக்கிறது கதிரை எண்டு நினைக்காதை. அது கடவுளின்ர முதுகு என்று உனக்குத் தெரியேலையோ” என்று கூறியது நினைவிருக்கிறது. மண்மீது உள்ள மக்கள், பறவைகள், புல், பூண்டு, மரங்கள் யாவற்றிலும் இறைவனை அனுபவித்து வாழ்ந்தவர் அவர் என்பதை அவருடன் நெருங்கி இருந்து அறிந்துகொண்டவன் அடியேன்.

யோகர் சுவாமிகள் தனக்கு ஆசி பொழிந்த அனுபவத்தை எனக்கு அடிக்கடி கூறுவார். யாழ்ப்பாணம் ஸ்ரீலங்கா புத்தகசாலைக்குப் புத்தகம் வாங்கப் போனபோது புத்தகக் கடையில் ஒரு பரபரப்பு ஏற்பட்டது. எல்லோரும் அங்கும் இங்கும் ஓடுகிறார்கள். ஒருவர் கதிரையைக் கொண்டுவந்து வைக்கின்றார். இன்னொருவர் அந்தக் கதிரைமேல் வெள்ளைத் துணி ஒன்றை விரிக்கின்றார். ஒருவர் வந்து அக் கதிரையில் அமர்ந்திருக்கின்றார். தனது

கையால் தாடியைத் தடவிய வண்ணம் அவர் அமர்ந்திருக்கின்றார். அப்போது புத்தகம் வாங்கக் கடைக்குச் சென்றிருந்த நீலகண்டன் சேர் கதிரையில் இருந்தவரைப் பார்த்து, மனதிற்குள் "இவர் யோகர் சுவாமியாக இருக்கலாமோ?" என்று நினைத்தாராம். யோகர் சுவாமிகளும் நீலகண்டன் சேரைப் பார்த்து "நீங்கள் நினைத்தது சரி. நான்தான்" எனும் பாவனையில் தலையை ஆட்டினார். இதனைச் சேர் என்னிடம் அடிக்கடி கூறுவார்.

அன்றைய தினத்திற்குப் பின்பு தனக்குள் ஒரு இரசாயன மாற்றம் நிகழ்ந்ததாகவும், தான் அதன் பின்னர் யோகர் சுவாமிகளைச் சந்திக்கவில்லை என்றும் கூறுவார். அதன்பின்புதான், தான் புத்தகக் கல்வியை விடுத்து வாழ்நாளின் முழுப் பசியையும் எந்தக் கல்வி தீர்க்கிறதோ அந்தக் கல்வியே தனக்கு வேண்டும் என்று நகரத் தொடங்கினேன் என்றும் கூறுவார். தேகத்தைத் தீர்த்தத்தாலும் மனதைச் சத்தியத்தாலும் ஆத்மாவைத் தவத்தாலும் புத்தியை ஞானத்தாலும் சுத்திசெய்து கொண்டு குருவின் அன்பினையும் உபதேசத்தையும் பெற்று வாழவேண்டும் என்று அடிக்கடி கூறுவார். அவ்வாறு வாழ்ந்தும் காட்டியுள்ளார்.

அவர் தனது குருவாக ஆறுமுக உபாத்தியாயரையே எந்நேரமும் போற்றுவார். நீலகண்டன் ஆசிரியருக்குச் சிவசம்புப் புலவரின் மாணவரும் மருமகனுமாகிய ஆறுமுக உபாத்தி யாயர் பாட்டனார் உறவுமுறை. ஆறுமுக உபாத்தி யாயர் கந்தவனத் தலத்தில் தனக்கு ஏடு தொடக்கி வைத்த நிகழ்வை அடிக்கடி கூறுவார். அதனைப் பல பாடல்களாகவும் எழுதியுள்ளார்.

"ஏடு தொடக்கி எழுத்தாணி
ஏந்த வைத்தா னின்றலத்தில்
பீடு மிகுந்த வாறுமுகப்
பேராசா னென்பாட்டன்
நீடு மென்ற னுளத்திளது
நிகரிலின்ப நிகழ்ச்சியதே..."

என்று பாடியது நினைவில் உள்ளது.

ஆறுமுக உபாத்தியாயர் உலகை விட்டுப் பிரியும்போதும், தான் அருகில் இருந்து, தன் குரு கூறியது போல, கந்தரலங்காரம் படித்ததையும் அதிலும் குறிப்பாக, "நீலச் சிகண்டியில் ஏறும் பிரான் எந்தநேரத்திலும் கோலக் குறத்தியுடன் வருவான்" என்று தொடங்கும் பாடலைப் படித்தபோது அதனைத் தனது குரு திருப்பித் திருப்பிப் படிக்கச் சொன்னதாகவும், படித்துக் கொண்டிருக்க அவரின் உயிர் உடலைவிட்டுப் பிரிந்ததாகவும் கண்ணீர் மல்கக் கூறிவிட்டு அமைதியாகும் தருணங்களைப் பார்த்து, அவரின் குரு பக்தியை நினைத்து வியந்துபோயிருக்கிறேன். அந்தக் கணங்களில் அவர் மிகுந்த பரவசமா யிருப்பார்.

நீலகண்டன் சேருடன் செல்வச் சந்நிதி கோயிலுக்கும் கந்தவனக் கோயிலுக்கும் பல தடவைகள் சென்றிருக்கிறேன். தன்னுடன் வருமாறு அவர் பலவேளைகளில் அழைத்துள்ளார். பெரும்பாலும் மாலை வேளைகளில். சந்நிதிக்கு இவருடன் செல்லும்போது சந்நிதியில், நாம் பெரியவர்கள் என்று நினைக்கும் பலர், துறவுநிலை பெற்றவர்கள் சிலர் இவரிடம் வந்து விழுந்து வணங்குவதும் இவரைச் சூழ்ந்து கொள்வதும் இவருடன் ஆலயத்தைச் சுற்றி உலா வருவதும் மறக்கமுடியாதவை. ஒரு சிலர் தமக்கு ஏதாவது

கூறுமாறு சேரிடம் கேட்பார்கள். அதற்கு "எல்லாம் சரிவரும், எனக்கு என்ன தெரியும்" என்றுவிட்டு இருந்துவிடுவார். ஒருசிலருடன் மட்டும் மெதுவாகச் சிலநேரம் உரையாடுவார்.

சந்நிதியின் பூவரசைப் பற்றி மிக உயர்ந்த கருத்துக்களை எனக்கு அவ்வப்போது கூறியுள்ளார். "உலகின் முக்கிய ஆன்மீக மையங்களில் ஒன்றாகச் செல்வச் சந்நிதிப் பூவரசு உள்ளது" என்று அடிக்கடி கூறுவார். எனது வேண்டுதலின் பேரில் நீலகண்டன் சேர் எழுதிய "சந்நிதியான் அடைக்கலப்பத்து" என்ற பதிகத்தில் அந்தப் பூவரசைப் பின்வருமாறு கூறுகின்றார்.

"பக்தர் கூடும் பூவரசு
பஜனை யாளர் பூவரசு
சித்தர் உலவும் பூவரசு
தேவ ராறும் பூவரசு
சத்தர் உலவும் பூவரசு
தமியேன் வணங்கும் பூவரசு
தத்துவ மேயாம் பூவரசு
சந்நிதி யான்தன் பூவரசு
தத்தை வள்ளிக் குறமின்னாள்
சார்ந்து மகிழும் பூவரசு"

என்ற பாடலைக் குறிப்பிடலாம்.

2009 ஆம் ஆண்டு துன்னாலைப் பகுதி கலிகைச் சந்தியில் புன்னையடியப்பா என்று ஆன்மீக வட்டாரங்களில் அறியப்பட்ட சித்தர் ஒருவர் இருந்தார். அவரது இயற்பெயர் செகராசசேகரம். பெரும்பாலும் தன்னை வெளிப்படுத்தாது அமைதியாக வாழ்ந்தவர்களில் அவரும் ஒருவர். மக்களுக்குத் தெரிந்தது அவரை ஒரு வைத்தியராக மட்டுமே. அவரைச் சந்திப்பதற்காக

நானும் நீலகண்டன் மாஸ்ரருடன் சென்றிருந்தேன். அவர் தனது வீட்டினுள்ளே இருந்தார். நாம் வெளியில் இருந்தோம். அவருடைய துணைவியார் வெளியிலே வந்து “உள்ளே வரட்டாம்“ என்று கூறினார். இருவரும் உள்ளே சென்றோம்.

நீலகண்டன் சேரைக் கண்டவுடன் அவர் எழும்பி வணங்கி நின்றார். நீலகண்டன் சேரும் வணங்கினார். பின்னர் புன்னையடியப்பா தரையிலே ஒரு பாயைப் போட்டு அதிலே தான் அமர்ந்துகொண்டார். நீலகண்டன் சேரைக் “கதிரையிலை இருங்கோ“ என்று கூறினார். அதற்கு மறுத்த நீலகண்டன் சேர் தானும் அவர் அமர்ந்திருந்த பாயின் மறுபுறத்தில் அமர்ந்தார். புன்னையடியப்பா, நீலகண்டன் சேரைப் பார்த்து “பெரியவர் நீங்கள் என்னத்துக்கு என்னட்ட வந்தனியள். உங்களுக்கு ஒண்டும் தேவையில்லை த்தானே. நான் தான் உங்களைத் தேடி வந்திருக்க வேணும்.“ என்று மிக்க பயபக்தியுடன் கூறினார். நீலகண்டன் சேர் உதட்டுக்குள் சிரித்துவிட்டு அமைதியாக இருந்தார். பின்னர் தரப்பட்ட தேநீரை அருந்திவிட்டு இருவரும் புறப்படத்தயாரானோம்.

அப்போது நீலகண்டன் மாஸ்ரர் “தின்னப்பழம் கொண்டு...” என்று உச்சரித்து விட்டு நிறுத்திக்கொண்டார். புன்னையடி யப்பாவும் “ஓமோம் பெரியவர்” என்றார். எனக்கு ஒன்றும் புரியவில்லை. பின்னாளில் அதுபற்றி நான் கேட்கும்போது அவ்வார்த்தையின் பரிபாஷைபற்றி எனக்கு விளக்கியிருந்தார். அதன் பின்னர் இரண்டு மூன்று தடவைகள் இருவரும் அங்கு சென்றிருந் தோம். ஆனால் எந்தப் பேச்சும் நடப்பதில்லை.

அமைதியாக இருந்துவிட்டுத் திரும்புவது வழக்கமாக இருந்தது. புராணங்கள் தொடர்பாக ஏற்படும் சந்தேகங்களை மாத்திரம் ஓரிரு வினாக்கள் மூலம் புன்னையடியப்பா கேட்பார். அதற்கு மிகச் சுருக்கமாக நீலகண்டன் சேர் பதில் கூறுவார். அவர் தமது இறுதிச் சந்திப்பில் "இனித் தம்மைப் பார்க்க வரவேண்டாம்" என்று எமக்குக் கூறியிருந்தார். கூறி ஒரு வாரத்துள் அவர் இறையடிசேர்ந்தார்.

ஏழாலைப் பண்டிதர் மு.கந்தையா அவர்கள் நீலகண்டன் சேருக்கு அடிக்கடி கடிதம் எழுதுவார். அந்தக் கடிதங்களைப் பின் நாட்களில் சேர் என்னிடம் காட்டுவார். சைவ சித்தாந்தம் தொடர்பான விளக்கங்களைச் சேரிடம் கேட்டு எழுதிய கடிதங்களாகவே அவை இருக்கும். சைவசித்தாந்தம் தொடர்பான படங்களையும் வரைந்து அனுப்பி, சேரிடம் "சரியா" என்று கேட்டுவிட்டுப் பிரசுரிக்கும் பழக்கத்தை ஈழத்துச் சைவசித்தாந்த அறிஞர் கந்தையா ஒரு கடமையாகக் கொண்டிருந்தார். அது தொடர்பான பல கடிதங்களை நான் பார்வையிட்டிருக்கிறேன். பண்டிதர் கந்தையாவின் பெருமதிப்புக்குரிய ஒருவராக எனது ஆசிரியர் இருந்திருக்கிறார்.

நீலகண்டன் சேரிடம் இலக்கணம், இலக்கியம் ஆகியவற்றை நுணுக்கமாக மிக அருகில் இருந்து கேட்கும் வாய்ப்பு எனக்கு இருந்ததை நினைத்து இப்போது பெருமைப்படுகிறேன். யாப்பிலக்கணத்தில் பிரபந்தங்கள் ஆக்கும் நுணுக்கங்களை அவர் எனக்கு மடைமாற்றி யுள்ளார். ஆலயம் ஒன்றிற்கான ஊஞ்சல் பிரபந்தத்தை நான் A/L படித்து முடித்து இருந்தபோது என்னை ஒருவர் ஆக்கித்தருமாறு

கேட்டார். அப்போது நான் அச்சத்துடன் "சேர் நீங்கள் தான் எழுத வேணும்" என்று கோரிக்கை விடுத்தேன். "உனக்கு வருமடா. நீ எழுது" என்று ஆசீர்வதித்தார். அப்போது எனக்குப் புரியவில்லை. எழுதிமுடித்த பின்னர்தான் எனக்குப் புரிந்தது. நெஞ்சில் இருந்து நெஞ்சுக்கு அனுப்புவதுதான் ஞான மார்க்கத்தின் இரகசிய வழி என்று.

சைவசித்தாந்தம் மீதும் கச்சியப்ப சிவாச்சாரியார் மீதும் அளவுகடந்த பக்தி அவருக்கு இருந்தது. பாம்பன் சுவாமிகளைப்பற்றியும் அடிக்கடி பேசுவார்.

என்னைக் காணாவிட்டால் வீட்டுக்கு என்னைத் தேடிவரும் வழக்கத்தை அவர் வைத்திருந்தார். கடைக்கென்று புறப்பட்டால் எனது வீட்டுக்கு வந்து பின்னர் கடைக்குப் போவது அவரது வழக்கம். பேராதனையில் இருந்து சில நாட்கள் ஊருக்கு வராவிட்டால் காணவேண்டும் என்பதற்காகத் துடிக்கும் அவரது உள்ளம் என் வீடுநோக்கி விரையும். பின்னர் தொலைபேசியில் அவருக்கு அறிவித்துவிட்டு சனி, ஞாயிறில் வந்துவிடுவேன். அடிக்கடி தொலைபேசியில் சுகம் விசாரிப்பேன். தொலைபேசியில் ஆரம்பிக்கும் முதல் வாக்கியமே "எப்ப இங்க வாறாய்?" என்பதாக அமைந்திருக்கும். இறுதிக் காலங்களில் அவரது இந்த வாக்கியத்தில் பெரும் ஏக்கம் இருந்ததை நினைக்கும்போது மனதிற்பெரும் சோகம் எழுகிறது.

கடந்த இரண்டு ஆண்டுகளாக அவர் அதிகம் நேசித்த மனிதர்களைப் பற்றி என்னிடம் கூறுவார். செல்லத்துரை மாஸ்ரர், சிதம்பரப்பிள்ளை மாஸ்ரர்,

பேராசிரியர் அழகையா துரைராஜா, தில்லையம்பலம் மாஸ்ரர், அனந்தராஜ் மாஸ்ரர், சோதிநாதன் சேர், பேராசிரியர் ஸ்ரீசற்குணராஜா இவர்களைப் பற்றி அதிகம் கூறுவார். சோதிநாதன் சேரை இறுதிக்காலத்தில் அவருக்கு அதிகம் பிடித்திருந்தது. என்னுடன் பேசும்போதெல்லாம் என்னைக் காணும் போதெல்லாம் அவரைப் பற்றி நிச்சயம் விசாரிப்பார். சோதிநாதன் சேரும் பலதடவைகள் நீலகண்டன் சேரின் வீட்டிற்கு வந்து அவரோடு உரையாடிப் போயிருக்கின்றார். சோதிநாதன் சேரின் வீட்டிற்குத் தன்னை அழைத்துச் செல்லுமாறு இறுதி நாட்களில் என்னை அதிகம் வற்புறுத்தினார். அவரின் உடல்நிலையைக் கருத்திற்கொண்டு நான் அதற்கு மறுத்துவிட்டேன். ஸ்ரீசற்குணராஜா சேர் மீது அவருக்குள் ஓர் ஆழமான அன்பும் மதிப்பும் இருந்ததை அவரது வார்த்தைகள் உதிர்த்தன.

அனந்தராஜ் மாஸ்ரரையும் ஸ்ரீசற்குணராஜா சேரையும் பிரபந்தத் திரட்டு வெளியீட்டிற்குக் கட்டாயம் கூப்பிட வேண்டும். “அவை என்ர பிள்ளையள்” என்று கூறுவார். தன்னிடம் கற்றவர்களை தனது பிள்ளைகளாகவே அவர் நோக்குவார். நான் அவரிடம் செல்லும் போதெல்லாம் “சின்னக்குஞ்சு (தில்லையம்பலம் ரீச்சர்) வீட்டை போட்டுப்போ” என்று கூறுவார்.

அவர்கூறிய அனைத்து வாக்குகளும் என்வாழ்க்கையில் நிறைவேறின. இன்னும் நிறைவேறும். நிறைவேறியவற்றில் ஒன்றுதான் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறை விரிவுரையாளராக நான் பதவியேற்றமை. அதற்கு முன் அவரிடம் சென்று ஆசீர்வாதம் பெற்றேன்.

நான்கு வருடங்களுக்கு முன்பு அவர் கூறிய ஒருவிடயம் அப்போது மெய்யாகியது. கற்றகய வருடன் கவனமாக இருக்குமாறு அப்போது கூறினார். அவர்களை முருகன் நிச்சயம் தண்டிப்பான். "நடக்கும்" என்று உறுதிபடக் கூறினார்.

நீலகண்டன் சேரைச் சந்தித்த இறுதிநாள் இப்போதும் மனதில் இருந்து கனக்கிறது. 2002இல் அவர் கொழும்பில் இருந்தபோது எழுதிய 215 பாடல்கள் கொண்ட கந்தவனமணிமாலையைப் பதிப்பிக்கும் முயற்சியில் இந்த ஆண்டு தை மாதம் மிகத் தீவிரமாக ஈடுபட்டேன். அந்தப் பாடல்களில் எனக்கு இருந்த ஈர்ப்பும் புதுமையும் என் ஆசிரியர் இருக்கும்போது அது வெளிவரவேண்டும் என்ற ஆர்வமும் அவரது முகமகிழ்ச்சியைக் கண்டு மகிழவேண்டும் என்ற விருப்புமே இதற்குக் காரணங்கள்.

சுமார் நான்கு வருடங்கள் அவரோடு இணைந்து செய்த பணியின் பயனாக வெளிவந்த சிவசம்புப் புலவர் பிரபந்தப் பெருந்திரட்டுக்குப் பின்னர் "தன் காரியங்கள் எல்லாம் முடிந்துவிட்டன" என்ற மகிழ்ச்சியில் "இனி எதுவும் தேவையில்லை" என்ற அமைதியில் இருந்தவரை அவரது பிரபந்தங்களின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்துக் கந்தவன மணிமாலையைப் பதிப்பிக்கப் போகிறேன் என்றேன். "ம்." என்றார். பொலிகண்டிக் கந்தவனக் கல்யாண வேலவசுவாமி தேவஸ்தானத்தினர் சார்பில் விரிவுரையாளர் நண்பர் சஞ்சீவன் தங்கள் ஆலயத்தின் அருட்சொத்துக்களில் ஒன்றாகிய நீலகண்டன் சேர் பாடிய கந்தவன மணிமாலையைத் தங்கள் செலவில் பதிப்பிக்

கிறோம் என முன்வந்தனர். அப்போது நித்தியண்ணையிடமும் இது பற்றிக் கூறியிருந்தேன். தைப்பூசத் திருநாள் 03.02.2015 அன்று ஆலயத்தில் இது வெளியிடப்பட வேண்டும் என்று ஆலயத்தினர் என்னை இறுக்கிப் பிடித்தார்கள். எனது வேலைச்சுமை ஒரு புறம். "தைப்பூசத்திற்கு புத்தகத்தைச் செய்து முடித்துத் தாறன் என்று கோயிலுக்குச் சொன்னனியல்லோ. செய்து முடிச்சிடுவியோ? எதெண்டாலும் கோயிலுக்குச் சொன்னதைச் செய்து முடிக்கப் பார்" என்று எனக்குக் கூறினார். அவரது கூற்றின் உண்மைப்பொருள் அவரது நூல் வெளிவர வேண்டும் என்பதல்ல. அது அவரது நோக்கமும் அல்ல. தனது வெளியீடுகளைப் பற்றி அவர் எப்போதும் அலட்டிக்கொள்வதில்லை. அதனால் பெருமைப்படுவதோ புகழடைவதோ இல்லை. ஆலயத்திற்குக் கொடுத்த வாக்கை நிறைவேற்ற வேண்டும். அது கடவுள் இல்லம். மிக ஆழமான சத்தியத்தோடு ஆலயத்தோடு நடந்துகொள்ள வேண்டும் என்பதற்காகவே அவர் அவ்வாறு கூறினார் என்பதை நான் புரிந்து கொண்டேன். "நான் முடிப்பன் சேர்" என்றேன். "ம்... சரி" என்றார். அவர் சரி சொல்வதெல்லாம் எனக்கு வெற்றிதானே!

இறுதிக் காலம்வரை என் செயல்மீது அவருக்கு அசையாத நம்பிக்கை இருந்தது. இரவு, பகலாகச் சில நாட்கள் தூங்காது இருந்து உணவு மறந்து அவருடன் இணைந்து நூலாக்க முயற்சி களில் ஈடுபட்டமை அவருக்குத் தெரியும்.

தைப்பூசத்திற்கு இன்னும் 21 நாட்கள். பலவேலைகளின் மத்தியில் இதனையும் பார்க்கவேண்டும். கிடைத்த நேரத்தையெல்லாம்

ஒதுக்கி வேலைசெய்ய ஆரம்பித்தேன். 03.02.2015 அன்று தைப்பூசம். ஆனால் நீலகண்டன் மாஸ்ரர் கந்தவனமணிமாலை வெளியீட்டு விழாவில் தனக்குக் கலந்துகொள்ளக் கிடைக்காது என்று 13.01.2015 அன்றே நித்தியண்ணையிடம் கூறியிருந்தார். 21 நாட்களுக்கு முன்பே இவர் இதனைக் கூறியது பெரும் ஆச்சரியம். வெளியீட்டு விழாவிற்கு முதல் நாள் புத்தகவேலை முடிந்து விட்டது. அடுத்தநாள் காலை ஆதீனகர்த்தா வீட்டிற்கும் புத்தகம் சென்றுவிட்டது.

02.02.2015 மாலை சேரிடம் ஒரு புத்தகத்தைக் காட்டுவதற்காக எடுத்துச் சென்றேன். சுவாமி அறைக்குள் என்னை அழைத்துச் சென்றார். அந்தப் புத்தகத்திற்கு விபூதி, பொட்டு, பூவெல்லாம் வைக்கச்சொன்னார். அவர் கூறிய எல்லாவற்றையும் செய்த பின்னர் "முருகனுக்குப் பக்கத்தில அதை வை" என்றார். வைத்தேன். பின்னர் வெளியிலே வந்து அமர்ந்திருந்து "நாளைக்கு எத்தனை மணிக்குக் கந்தவனம் போறாய்" என்று கேட்டார். நான் "நீங்கள் வரல்லையோ சேர்" என்றேன். "முடிஞ்சா பாப்பம்" என்றார். "ஏன் சேர்" என்றேன். "சரி அதை விடு. புத்தகத்தைப் பூசையில வைச்சு ஆக்களுக்குக் கொடுத்தாச் சரி. வேறையொண்டும் செய்யாதை. சரியோ. எனக்கு ஒரு அர்ச்சனையும் செய். அவைக்கும் சொல்லு. கோயில்ல கடவுளைத் தவிர வேறை எதைப்பற்றியும் பேசக்கூடாது. சரியோ" என்றார். "சரி சேர்" என்று நான் விடைபெற்றேன்.

வெளியீட்டு விழா அன்று காலை அவரிடம் சென்றேன். கட்டிலில் கால்களை மடக்கியபடி வலதுகையைத் தன் தலைக்கு வைத்தவாறு

படுத்திருந்தார். மெதுவாகத் தடவி "சேர்" என்றேன். எழும்ப எத்தனித்தவரால் எழும்ப முடியவில்லை. படுத்திருந்துகொண்டே என்னைப் பார்த்தார். ஒரு பெரும் புலமைமிக்க ஆசிரியர் கட்டிலில் இருந்து எழும்ப முடியாமல் இருந்த அந்தத் தருணம் மனதைத் துயருறச் செய்தது. அவரின் நிலைமை எனக்கு விளங்கியது. "நான் போயிற்று வாறன் சேர்" என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டேன்.

நேற்று அவர் சொன்னவை எல்லாம் நினைவில் இருந்தன. கந்தவனத்திற்குச் சென்று சேர் சொன்னவற்றைக் கூறி, பூசையை நிகழ்த்தச் சொன்னேன். அவர்கள் சேர் அங்கு நிற்கின்றார் என்ற எண்ணத்திலேயே மிக மரியாதையோடு பக்திபூர்வமாகப் புத்தகங்களை முருகன் முன் படைத்து அர்ச்சனை செய்தனர். முருகனின் வீதியுலாவின் பின்னர் புத்தகத்தை அடியவர்களுக்குக் கொடுத்தனர். எளிமையான முறையில் வெளியீடு முடிந்தது. சேரிடம் கொடுக்கச்சொல்லி மாலை, பிரசாதம், புதிர் முதலியவற்றைத் தந்தனுப்பினர்.

நான் விரைந்து சேரிடம் வரும்போது மதியம் மூன்று மணி. அப்போதும் சேர் கட்டிலில் படுத்திருந்தார். "போயிற்று வந்திட்டியோ" என்றார். "ஓம் சேர்." "எழும்பிறீங்களோ சேர்" என்று கேட்ட நான் சிங்கன் அண்ணையின் உதவியுடன் அவரை எழுப்பினேன். நான் கொண்டு வந்தவற்றை பாக்கோடு(Bag) அவரிடம் நீட்டினேன். "உதென்ன" என்று கேட்டார். "கோயிலில் உங்களிட்ட குடுக்கச் சொன்னவை" என்றேன். "வா" என்று சாமியறைக்குள் என்னை அழைத்துச் சென்றார். உள்ளே சுவரை ஒரு கையால்

பிடித்துக்கொண்டு பாக்குள் (Bag) இருந்த மாலையைக் காட்டி "அதை முருகனுக்குப் போடு" என்றார். தனக்கு முருகன் அனுப்பியதையும் முருகனுக்கே சமர்ப்பணம் செய்யும் ஆசிரியரின் உயர்ந்த ஆன்மீகத்தை நினைத்துக் கண்கள் கலங்கின. வீடும் வேண்டா விறலின் விளங்கும் தன்மையும் ஈர அன்பும் அவரிடம் பொங்கிப் பிரவாகித்தன. விபூதிப் பிரசாதங்களை எடுத்துத் தட்டில் வைத்தேன். தொட்டுப்பூச எத்தனித்தவர் தள்ளாடி நின்றார். அவரைப் பிடித்தவண்ணம் "பூசிவிடவா சேர்" என்றேன். "ம்" என்றார். பூசிய பின்னர் பொட்டினையும் வைத்துவிட்டு பூவொன்றையும் எடுத்து அவர் காதில் வைத்தேன். பின்னர் லைற்றை அணைத்துவிட்டு என்னை வெளியில் வருமாறு கூறினார்.

அவரை அணைத்து அழைத்துச்சென்று வெளிவிறாந்தையில் இருந்த கதிரையில் அமர வைத்தேன். நானும் அருகில் அமர்ந்தேன். அவருக்கு அருகில் இருக்கும் போது எனது கதிரை மிக நெருக்கமாக இருக்க வேண்டும். இல்லையெனில் இப்படிவா என்று அருகில் அழைப்பார். முருகனின் பொங்கலை எடுத்துத் தரச்சொன்னார். எடுத்துக் கொடுக்க "ஆ" என்று வாயைத் திறந்தார். நான் கொஞ்சம் கொஞ்சமாக அவற்றை ஊட்டி விட்டேன். பின்னர் தண்ணீர் கேட்டார். கொடுத் தேன். எனது உதவியுடன் நீரைக் குடித்துவிட்டு முதல்நாள் பூசையறையில் வைத்த புத்தகத்தை எடுத்துவா என்றார். எடுத்துவந்து கொடுக்கப் "படி" என்றார். ஆசிச்செய்தி, வெளியீட்டுரை, பதிப்புரை என்பவற்றை வாசித்துவிட்டு அவரது பாடல் களையும் வாசிக்கத் தொடங்கினேன். இரண்டு கால்களையும் தூக்கி மடித்து கதிரையில் வைத்துக்

கொண்டு கேட்டுக்கொண்டு இருந்துவிட்டுச் சிறிது நேரத்தின் பின் "சரி... சரி" "இந்த நூலிலை என்ர பேர் இருக்குதே. இதை நானோ எழுதினன்?" என்றார். தன் முனைப்பு அற்ற அடக்கத்தின் பெரிய திருவுருவம் ஒன்று என் முன்னால் இருப்பது எனக்குப் புரிந்தது. இறைவனுக்கு என்று எழுதியதில் தனது பெயரை எவ்வாறு பொறிக்கலாம். அது கடவுளுக்குத்தானே சொந்தம் என்பது பற்றியதாக அவரது வினா இருந்தது. தனக்குப் புலவர்மணி பட்டம் கிடைத்தபோது அவர் ஆற்றிய உரை கவிதையில் அமைந்திருந்தது. அதில் தனக்கு எந்த தகுதியும் இல்லை என்று அடக்கமாகக் கூறியிருந்தார். அதன் ஒருபகுதி வருமாறு

"பெரியீர் நீங்கள் பேணமாய்ச் செய்வதிற்
சரிபிழை காணுந் தத்துவ மெனக்கிலை
எந்த விதச்சிறப் பியல்புக ளும்மிலா
இந்த வெளியனுக் கிவ்வளவு நேரமும்
சத்தனை வற்றையுந் தான்பிர யோகித்
எத்தனை யோசிறப் பெலாம்புரி கின்றீர்
அகரமே தெரியா வறிவிலி யெனக்கோ
மகிமையார் புலவர் மணியெனும் பட்டம்?
என்னுள மாசினை யீசன் ஒருவனே
நன்கன மறிந்த நடுவமர் சாட்சி
பட்டமும் பரிசும் பாராட் டுரைகளும்
ஒட்டுள மாசினை யுறிஞ்சி விடுமோ?
சொற்கலை பருத்தி நூல் துன்னொளி வெண்கலை
பொற்கலை யகத்தினைப் புனிதமாக்குமோ?
அன்றியும்
பொட்டிடு வார்களோ பொற்குட மதற்கு?
பொட்டிடிற் பித்தளை பொற்குட மாகுமோ?
பொட்டழ காக்கவே!
பொட்டினா லாகும் புறவழ கெதற்கோ?

விட்டகலாமல் மேவு வன்பிற
வித்தளை யதனை வெட்ட வறியாப்
பித்தளை யுளமுள பித்தளைக் குடம் யான்"

அப்போது மீனாக்கா அங்கு வந்தா. "என்ன சுதன் என்னவாம்?" என்றா. பின்னர் அவ கொண்டுவந்த பாயாசத்தை ஒரு கப்பில் வாத்து சேருக்குக் கொடுத்தா. சேர் எனக்கு வேண்டாம் "உதை உவனுக்குக் கொடு" என்றார். அதன் பின் அவரைப் பாயாசம் குடிக்க வைத்துவிட்டு நான் புறப்படத் தயாரானேன். "சேர் நான் போயிற்று வாறன்" என்றேன். வழமையான கேள்வி. "எப்ப வருவாய்?" "கெதியண்டு வருவன் சேர்." சரி... சரி வந்தாப் பாப்பம்" என்று இழுத்தார். "ஏன் சேர் அப்படிச் சொல்லுறியள்.?" "இல்லையடா. போ... போ... கவனம்" என்று கூறினார். வணங்கிப் புறப்பட்டேன். "வந்தாப் பாப்பம்" என்று அவர் ஒருபோதும் கூறுவதில்லை. அதனால் மனதில் ஒரு தயக்கம். அந்த வாக்கியம் மனதிற்குள் கனத்துக்கொண்டிருந்தது. பின்னர் தொலைபேசி வாயிலாக அவருடன் கதைக்க நேர்ந்தது.

14.02.2015 அன்று இரவு நித்தியண்ணையின் தொலைபேசி அவர் இறைவனடி சேர்ந்த செய்தியை எனக்குத் தெரிவித்தது. கடமை முடித்து விரைந்த நான் வீடுவர மாலை ஏழு மணியாயிற்று. அப்போது அவரின் உடல் அக்கினியைப் புனிதமாக்கியிருந்தது. தேவர்க்கு விருந்தினரான தூய ஆன்மா ஒன்று நெருப்பு வீட்டில் நுழைந்து விட்டது. கடவுளைச் சந்திக்க ஒளிவீசிச் சென்றிருக்கிறது. அரிதாள் நடுவே தீப்பொறிபோலப் பரந்து சுடர் வீசிச் சென்றுள்ளது. "வந்தாப் பாப்பம்" என்ற வார்த்தையின் உண்மை அப்போது விளங்கியது. "உயிரற்ற தனது தூல

உடலை இனி நீ தரிசிக்க முடியாது" என்பதைத்தான் 3.02.2015 அன்று "வந்தாப்பாப்பம்" என உதிர்த்து விட்டாரோ! கனவுகள் யாவும் மெய்யாகின. "நெல்லிமரத்தின் கீழ் என்னிடம் மட்டும் கட்டியணை த்து விடைபெற்றவர் அல்லவா அவர்.!"

அடுத்தநாள் காலை நான், நித்தியண்ணை, கிருபா அண்ணை, வேதவனம் அண்ணை, சிங்கன் அண்ணை, முத்து ஆகியோர் காடாற்ற வல்லை இந்து மயானத்துக்குச் சென்றிருந்தோம். அவரது புனித அஸ்திக்கு முதல்நீர் ஊற்றும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. சேரின் கடமைகளை நித்தியண்ணை செய்து முடித்தார். அவரது புனித அஸ்தியைத் தீண்டும்போது திருவாலவாயான் திருநீற்றைத் தீண்டும் உணர்வு எனக்குள் ஏற்பட்டது. அவரோடு 25 வருடங்கள் பழகிய எண்ண அலைகள் ஒன்றன்மேல் ஒன்றாக அடிக்கத் தொடங்கின. அவரது புனித அஸ்தியைக் கரைக்கச் சந்நிதி ஆற்றில் இறங்கினோம். எல்லோரும் ஆற்றுக்குள் நின்றோம். நித்தியண்ணை சந்நிதியாற்றில் நீலகண்ட சேரின் புனித அஸ்தியைக் கரைத்தார். கோயில் மணியொலித்தது. நீலகண்டன் சேர் நீரோடு நீராகினார். என்னோடு தமிழாகினார்.



# தஞ்சாவூரையும் உடுப்பிட்டியையும் தமிழால் இணைத்த பரம்பரை

மறவன்புலவு க.சச்சிதானந்தன்
தஞ்சாவூர் - தமிழ்நாடு

தமிழகத்தின் தஞ்சாவூருக்கும் ஈழத்தின் உடுப்பிட்டிக்கும் அறிவுத்தொடர்பு, இசைத்தொடர்பு, இல்வாழ்க்கைத்தொடர்பு. புண்ணியமூர்த்தி தமிழறிஞர் தஞ்சாவூரிலிருந்து உடுப்பிட்டி வந்தவர். அவரின் மகள் கதிராசிப்பிள்ளை. கதிராசிப்பிள்ளையின் மகன் சிவசம்புப்புலவர் சிவசம்புப்புலவரின் பூட்டர் புலவர்மணி கா.நீலகண்டன்.

சிவசம்புப்புலவரின் தந்தையார் அருளம்பலம் முதலியார். அவர் தொடக்கி ஆசிரியராகப் பணிபுரிந்த பாடசாலையில் இசையாசிரியர் நாகப்பர். தஞ்சாவூர்காரரான நாகப்பரிடம் இசை பயின்றவர் சிவசம்புப்புலவர். என் தந்தைவழி உறவினர் தியாகராசர், பண்டிதர் க.வீரகத்தி, நாடாளுமன்ற உறுப்பினர் மு.சிவசிதம்பரம் ஆகியோர் வடமராட்சியில் எனக்கு நன்கு அறிமுகமாகிப் பழகியோர். தச்சன்தோப்புப் பிள்ளையார் கோயிலில் உரை நிகழ்த்தத் தமிழகத்தில் இருந்து பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தன் ஆண்டு தோறும் வைகாசியில் வருவார். அங்கேயே தங்குவார். நான் அங்கு தங்கி அவர் உரை கேட்பேன்.

அக்காலங்களில் உடுப்பிட்டியின் புலவர் பரம்பரையை எனக்குக் கூறுவார்கள். சிவசம்புப்புலவர் வழிவந்தவர் திரு கா.நீலகண்டன் அவர்களை என் மாணவப் பருவங்களில் எனக்கு அறிமுகம் செய்தவர் பண்டிதர் வீரகத்தி.

திரு கா.நீலகண்டன் அவர்களைக் காணும் பொழுது அவர் பின்னால் நெடிது நீண்டபுலவர் பரம்பரை என் கண்களில் நிழலாடும். ஆசிரியர் புண்ணியமூர்த்தி, ஆசிரியர் அருளம்பலம் முதலியார் இவர்களின் மரபணுக்களை த்தாங்கிய சிவசம்புப்புலவர், அவரின் மரபணுக்களைத் தாங்கியவர் புலவர்மணி கா.நீலகண்டன்.

யாழ்ப்பாணத்தில் இருந்த காலங்களில் அறிந்திருந்த தமிழறிஞர் பலரின் தொடர்புகள் பின்னர் எனக்கு அற்றுப் போயின. செய்திகள் செவியுறுவேன். ஆடியில் வடமராட்சியில் நடந்த புத்தகக்காட்சிக்குப் போனேன். புலவர்மணி கா.நீலகண்டன், செல்லத்துரை சுதர்சன் இருவரும் இணைந்து தொகுத்த நூலைக் அக்காட்சியில் கண்டேன். என் நினைவுகள் விரிந்தன. பண்டிதர் க.வீரகத்தியை நினைத்தேன். புலவர் மணியினூடனான அறிமுகத்தை நினைத்தேன் பண்டிதர் க.வீரகத்தியின் நூல்களையும் காட்சியில் பார்த்தேன். இருவரும் இன்று நம்முடன் இல்லை.

தமிழக ஈழ இலக்கியத் தொடர்புகள் வலுவானவை

சைவமும் தமிழுமான பண்பாட்டுப் புலமைகள். உடுப்பிட்டி உவந்தளித்த செல்வம் புலவர்மணி கா.நீலகண்டன். தமிழ்ச் செல்வங்களுள் மரகதமாய் மாணிக்கமாய்த் திகழ்கிறார்.



# நீலகண்டர் நம் காலச்சித்தர்பிரான்

திருமிகு முருகேசு கௌரிகாந்தன்

விரிவுரையாளர்,

யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி.

அண்மையில் அமரத்துவம் எய்திய புலர்மணி காங்கேயன் நீலகண்டன் (31.03.1930 14.02.2015) அவர்களை முப்பது ஆண்டுகளுக்கு முன்பிருந்தே அறிவேன். இவருடன் பழகுவதற்கான வாய்ப்பைத் தொண்டைமானாறு செல்வச்சந்நிதி கோவில்தான் ஏற்படுத்தித் தந்தது. அண்மையில் இரண்டு வாரங்கள் இவர் கோவிலுக்கு வருகை தராமையினைக் கண்டு, உடுப்பிட்டியைச் சேர்ந்த திரு பாலசிங்கம் அவர்களிடம் வினவியபோது தான் சம்பவம் தெரியவந்தது.

இதன்பின்னர் அவரின் இல்லம் சென்று அவரின் பிள்ளைகளான திருமதி சிவாம்பிகை செல்வநேசன், திரு நீ.நித்தியானந்தன் ஆகியோருடன் உரையாடிய பொழுது தமது தந்தையார் தொடர்பான மூன்று நூல்களை எம்மிடம் கொடுத்து, அவருக்கும் எமக்கும் இடையிலான உறவை அறிய ஆவல் கொண்டனர். அத்துடன் விரிவுரையாளர் திரு செல்லத்துரை சுதர்சன் அவர்களையும் கேட்டனர். இவையிரண்டும்தான் குறுகிய நேரத்திலே இச்சிறு கட்டுரை எழுதப்படுவதற்கான காரணங்கள் எனலாம்.

பெரியார் நீலகண்டன் அவர்களுடனான எமது உறவு சித்தருடனான உறவு போன்றது என்று தெரிகின்றது. இதனை அவரின் பிள்ளைகளுக்கு எம்மால் உடனடியாகக் கூறமுடியவில்லை. சித்தர்கள் மீதான ஈடுபாடு எமக்கு நீண்டகாலமாக இருந்து வந்து கொண்டிருக்கின்றது. மாலை நேரங்களிலே சித்தர்கள் செல்வச்சந்நிதி கோயிலுக்கும் வந்து செல்வதை அறிந்து, அண்மைக் காலத்தில் வெள்ளிக்கிழமை மாலை வேளைகளில் சிலரை அங்கு சந்தித்திருக்கின்றோம். அவர்களில் பெரியார் நீலகண்டன் அவர்களும் ஒருவர். இவ்வாறு இவரை பல தடவை கண்டுவிட்டு, பேராசிரியர் கி. விசாகரூபன் அவர்களிடம் "இக்காலத்திலும் சித்தர்கள் வாழ்கிறார்களா?" என்று கேட்டபோது அதற்கு அவர் "வாழ்கின்றார்கள் இலைமறை காய் போலத் தெரியாமல் வாழ்கின்றார்கள்" என்று சுருக்கமாகச் சொன்னார். தெரியாமல் வாழ்ந்த சித்தராக பெரியார் நீலகண்டன் அவர்களும் பேசப்படுகின்றார்.

புலவர்மணி நீலகண்டன் அவர்களது இழப்பு எம்மைவிட எனது புதல்வரையே கூடுதலாக வாட்டியிருக்கிறது. ஏனெனில் அவருக்கு அண்மையில் சந்நிதி கோவிலில் வைத்து அரிய உபதேசம் ஒன்றைச் செய்திருக்கிறார். இவ்வுபதேசத்தைப் பெறுவதற்கு முன்னர் இவர் திரு. நீலகண்டன் அவர்களாலும் விரிவுரையாளர் செ. சுதர்சன் அவர்களாலும் பதிப்பிக்கப்பட்டு உடுப்பிட்டி அமெரிக்கன்மிஷன் கல்லூரியில் வெளியிடப்பெற்ற சிவசம்புப்புலவரின் பிரபந்தப் பெருந்திரட்டு நூல் வெளியீட்டு விழாவுக்கு வந்து

பெரியார் நீலகண்டன் அவர்களின் அருமை பெருமைகளைப் பற்றி அறிந்து அவர்மீது ஈடுபாடு கொண்டிருந்தார்.

சித்தர்கள், புலமையாளர்களாகவும் கவிஞர்களாகவும் இருந்திருக்கின்றனர் என்பதற்கு சித்தர் பாடல்கள் சான்று பகர்கின்றன. பாரதியார் தானும் ஒரு சித்தன் என்றே குறிப்பிடுகின்றார். அவரின் ஞானகுருவான யாழ்ப்பாணத்துச்சுவாமி பருத்தித்துறையைச் சேர்ந்தவர் என்றே கூறப்படுகிறது. நீலகண்டன் அவர்களின் பண்பட்ட வாழ்வும் கவித்துவ ஆற்றலும் இறை ஈடுபாடும் தனிமையான வாழ்வும் அவரைச் சித்தராக்கியிருக்கலாம் என்று தெரிகின்றது.

நீலகண்டன் அவர்களின் பூட்டனாரான சிவசம்புப்புலவர் (1829-1910), நவாலியூர் சோமசுந்தரப்புலவர் (1878-1953), சைவப்பெரியார் சு. சிவபாதசுந்தரனார் (1878-1953), திக்கம் சி. செல்லையாபிள்ளை முதலானோரால் பரவப்பெற்ற பொலிகண்டி கந்தவன முருகன் மீது இவரால் பாடப்பெற்று விரிவுரையாளர் செ. சுதர்சன் அவர்களால் பதிப்பிக்கப்பெற்ற "கந்தவன மணிமாலை" (2015) முருக பக்தர்களை மேன்நிலைக்கு இட்டுச் செல்லும் தன்மையுடையவை. இவற்றைப் படிக்கும் போது திருவாசகத்தைப் படிப்பது போன்ற உணர்வு தோன்றுகின்றது. அத்துடன் சைவ சித்தாந்தக் கருத்துக்களும் விரவி பக்தியும் ஞானமுங் கலந்த பனுவல்களாகக் காணப்பெறுகின்றன. இத்தகைய உயர்வான நூலின் அரங்கேற்றத்துடன் நூலாசிரியர் அரனடி சேர்ந்திருக்கலாம் என்றே தோன்றுகின்றது.

"பக்தரும் சித்தரும் சொன்னவை



# எங்கள் இளமை வானத்து மூன்று பறவைகளில் ஒரு பறவை

திருமிகு இ.பஞ்சநாதன்

ஓய்வுபெற்ற பிரதி அதிபர்,

தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி

அமரர் திரு.காங்கேசு நீலகண்டன் பாடசாலையில் கற்ற நாள் தொடக்கம் அவர் இறக்கும் வரை எனது அன்பர். அமரர் நீலகண்டன் அவர்கள் ஓர் "அறிவாலயம்".

ஒரே பாடசாலை A.M.C இல் கற்றோம், கற்பித்தோம். எமது பாஷையாகிய தமிழ், தமிழ் இலக்கணம், தமிழ் இலக்கியம், சைவசமய சாஸ்திரங்கள் என்பவற்றின் சிறந்த ஆற்றலும் முதிர்ச்சியும் உடையவர். மேற்படி கலைகள் தொடர்பான விடயங்களை இவரிடம் தெளிவாகவும் விளக்கமாகவும் கேட்டுத் திருப்தியடையலாம். அவர் ஓர் ஆங்கில ஆசிரியருமாவார். நீலகண்டன் அவர்கள் உடுப்பிட்டியில் ஒரு புகழ்பூத்த குடும்பத்தில் தோன்றியவர். அன்பு, ஆற்றல், பண்பு, சமயப்பற்று ஆகிய மனிதப் பண்புகள் நிறைந்தவர். எவருடனும் அன்பாகவும் மகிழ்ச்சியாகவும் பேசுவார். சமய விடயங்கள் சைவ சமயக்கிரியைகள் போன்றவற்றை முறைப்படி அறிவுறுத்துவார். உதவிசெய்வார்.

உடுப்பிட்டி ஊரில் கல்வியறிவும் ஒழுக்க சீலமும் பண்பாடும் நெடுங்காலமாக நிலவியது. இதற்கு ஒரு சான்றாக உள்ளவர் பெரியார்

சிவசம்புப்புலவர். புலவரது பாட்டனார்களில் ஒருவர் தான் எமது நீலகண்டர். பாடசாலைக் கல்வியைத் தொடர்ந்ததனால் புலவராவதைச் சற்றுத் தவறவிட்டார். ஆனால் மிகப்பிரபல்யமானவர். போற்றப்படுபவர். புலவர் பெருமையையும் அவரது படைப்புக்களையும் படைப்புகளின் விளக்கத்தையும் எமக்கும் வருங்கால மக்களுக்கும் புத்தக வடிவில் ஆக்கித் தந்துள்ளார்.

பாடசாலையில் அதிபர், ஆசிரியர், மாணவர், பெற்றோர் அனைவரும் விரும்பத்தக்கவராகவும் அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்பவராகவும் விளங்கினார். இறக்கும் வரை பாடசாலை தொடர்பான உதவிகளைச் செய்வதோடு நற்பெயரையும் பேணிப் பாதுகாத்தவர்.

திரு.நீலகண்டன் அவர்கள் எமது A.M.C யில் படிக்கும் போதும் படிப்பிக்கும்போதும் பிரியமான நண்பர்களாக சிதம்பரப்பிள்ளையும் பஞ்சனாதனும் இருந்தோம். மூன்று பறவைகள் கூடித்திரிவதுபோல காணப்படுவோம். கதைக்கும் போதும், படிப்பிக்கும் போதும் திருக்குறள், நாலடியார், ஔவையார் பாடல்கள் போன்றவற்றைப் பிரயோகித்து அறிவூட்டுவார். வகுப்பு கலகலப்பாக அமையும்.

ஆசிரியரவர்களின் சமயப்பற்று பாடசாலை யிலும் கோவிலிலும் வீட்டிலும் ஊரிலும் மக்களுக்கு நன்குதவியது. தேவார திருவாசகங்கள், சைவப் பிரசங்கங்கள் எப்போதும் அவருக்கு உயிர் கொடுப்பனவையாக அமையும். அவரது வீட்டிற்கு

அண்மையில் பிள்ளையார் கோயில் அமைந்திருப்பது ஒரு சிறப்பு அம்சமாகும்.

அவரது வீட்டுத் தோட்டத்தைப் பலவித பூஞ்செடிகள் அலங்கரிக்கின்றன. பூக்களும் தேவை. எனக்கு சொற்ப உடற்பயிற்சியும் தேவை என்பார். இவற்றினால் இவர் வாழ்நாள் நீண்டது. அது போல் சம வயதான எனது வாழ்நாளும்.

திரு.நீலகண்டன் ஒரு சிறந்த சாரண ஆசிரியர். Mr.K.M.மதியு , V.K.நல்லையா, K.நீலகண்டன், A.எம்பெருமான் ஆகிய ஆசிரியர்கள் இருந்து சாரண குழுமங்களைச் சிறப்புற நடத்தின. இலண்டன் வரை A.M.C சாரணகுழுமம் சென்று புகழ்பெற்றது. இலங்கையிலும் சாரண விழாக்களில் இருமுறைகள் முதலிடங்களைப் பெற்றது. பாடசாலைக்கும் நற்பெயரையும் வாழ்த்துக்களையும் பெற்றுக்கொடுத்தது.

ஆசிரியர் அவர்கள் செல்வச் சந்நிதி முருக பக்தர். வெள்ளிக்கிழமை தோறும் மாலை வேளையில் கோவிலுக்குச் சென்று வருவார். கடைசிக்காலம் முச்சக்கரவண்டியில் செல்வார். அப்போது எனது வீடுவந்து என் சுகசெய்திகளையும் அறிவார். ஆசிரியரின் தந்தையார் திரு காங்கேசரையும் அவரது பூக்கூடையையும் நினைவுகூருவேன். அவரை வணங்குவேன்.

நீலகண்டரும் அவரது துணைவியும் சிறந்த மதிப்பான ஆசிரியர்கள். அவர்களுக்கு மிக்க தகுதிவாய்ந்த மகனும் மகளும் உள்ளனர். மகன் நித்தி எஞ்சினியராக நோர்வே நாட்டில் தொழில்புரிகிறார். முயற்சியே செல்வம் என

வாழ்பவர். படிக்கும்போது காலை நான்கு மணியளவில் சில நாட்களில் என் வீடுவந்து பாடத்திலுள்ள சில சந்தேகங்களைத் தீர்ப்பார். தந்தையாரைத் தெய்வம் என மதிப்பவர். அவரை நன்கு வாழ்த்துகிறேன்.

நீலகண்டருக்கு ஒரு நற்புதல்வி. சீரும் சிறப்புடனும் கனடா நாட்டில் வாழ்கிறார். அவருக்கு "தேவகி" என்று தாயின் பெயரினைக் கொண்ட மகள். குடும்பம் சிறப்பாக வாழ என் நல்வாழ்த்துக்கள். தகப்பனாரைத் தெய்வம் எனக் கொள்பவர்.

ஆசிரியரின் பிரிவால் கவலையுற்றிருக்கும் மகன், மகள் குடும்பத்திற்கும் உற்றார், உறவினர், நண்பர்கள் யாவருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். திரு.நீலகண்டரின் ஆன்மா முருகப் பெருமானின் அருளால் சுவர்க்கமடைந்து சிறந்த நிலையில் இருக்கப் பிரார்த்திக்கின்றேன்.

கால காலன் றனதுநெற்றிக்
கண்ணி லிருந்து தோற்றமுற்றோன்
கோல மஞ்ஞை மீதுவரு
குழகன் கந்த வனக்குமரன்
சீல மில்லாச் சிறியனிவன்
சிந்தைக் குகையிற் புகுந்தொளிர்வான்
சால வின்பிற் புணர்த்திடுவான்
தமியேற் கென்ன குறையினியே.

(கந்தவன மணிமாலை : 13-
புலவர்மணி கா.நீலகண்டன்)



# A CLASSMATE, CO - TEACHER GOOD FAMILY FRIEND

Mr.R.Ponnambalam
*(R.P.Master)*

We joined school in 1946 when Mr K,T,John was our principal, Mr S.S.Sellathurai our vice principal. The tutorial staffs were excellent. There were some lady teachers also, 3 of them were my relations. The medium was entirely English. The discipline was very good. To mention a few devoted teachers I like, Mr.V.R.Rajaratnam, Muthuarulanantham, Robert Navaratnam, Richard Subramaniam, V.Sivapragasam, C.Kanapathipillai from Allvai, S.S.Kanapathipillai, pandit S.Velupillai, N.R.Balasingam, Leela wamse and Ragavan and many others.

Later when we were in the SSC, Mr Sellathurai was our primcipal and Robert Navaratnam was our deputy. The staff consisted of very good teachers like Mr K.Mathew, K.C.Jacob and T.Abraham from Kerala. To mention a few classmate like former VC Prof.A.Thurairajah, Mr.V.Raja from Valvetti. Mrs.C.Sankarakumaran, Mrs.R.Baskarasingam, Mr.A.Jeyaraja, Mr.A.Nesadurai, Mr.P.Velupillai, Mr.K.Murugesu, Mr.T.Aboorvasingham, Mr Krishnapillai and many others Neelakandan got through the SSC in the first try with all credits.

Then he joined Point Pedro Hartely College, one of the best schools in the island, to do our A/ls.Neelakandan did arts and entered the Palali training college when Mr.S.Kanadaswamy was the principal from Puloli and studied under good lectures like Mr.K.Nadaraja, Mr.S.Mahasen from Puloly amd Mr.V.Kandasamy from karaveddy, After completing his training college course, he joined schools to teach. Then je got a transfer to Uduppiddy A.M.College. I entered the Ceylon University and graduated in science. Mr.Sellathurai, who was my chemistry and mathematics teacher, gave me an appointment as an assistant teacher to teach physics and mathematics for O/Ls and A/Ls. As such we were co-teachers also. He is very religious, being the grandson of Sivasambupulavar. He named his house as 'Pulavar illam".

He married his cousin Devaki, daughter of Pasupathi. He was blessed with a son Nithiananthan and a daughter Tharani. They are abroad and employed. Tharani is married. His house is a walking distance from the pillayar temple, which he visits before going to school. The children had their nursery education in a Montessori school run by Pastor E.D.Rajaratnam's daughter. My daughter also studies there.

Neelakandan was associated with Kandamurugesanar of Puloli. Unfortunately, his sister in- law's husband Thillaiambalam, a famous maths teacher and former principal of our school, passed away about 10 months back. He was my neighbor at Karanavai and a good friend of mine.

He was an excellent English teacher and scout master who worked under Mr.K.Selvanayagam, biology teacher and a contempory of mine in the university . our decpest sympathies to Nithi, Tharani and family, Sinnakunju, his sister-in-law (Mrs.Thillaiambalam), and rest. Let us pray for him so that his soul will in peace with lord SIVA.



# சாகாவரம்பெற்ற புலவர்மணி

டாக்டர் சி.ஞானசேகரன்.
பிரதம ஆசிரியர்.
ஞானம் கலை இலக்கியச் சஞ்சிகை.

சிவசம்புப்புலவரின் பூட்டன் புலவர்மணி காங்கேயன் நீலகண்டன் அவர்கள் இவ் உலகை விட்டுப் பிரிந்தார் என்ற செய்தியை கேட்டபொழுது பெரும் துயரடைந்தோம்.

புலவர்மணி நீலகண்டன் அவர்கள் மரபு இலக்கியத்திலும் இலக்கணத்திலும் ஆழ்ந்த புலமையுடையவர். புலமை காரணமாக வந்த வித்துவச்செருக்கு அவரிடம் துளியளவும் இருக்கவில்லை. மிகவும் எளிமையான, மிகவும் அமைதியான மனிதனாக அவர் வாழ்ந்தார். கல்வி நிரம்பப்பெற்ற ஒருவரின் அடையாளம் அமைதி என்பதற்கு இந்த நூற்றாண்டில் இலக்கணமாக வாழ்ந்தவர் புலவர்மணி அவர்கள்.

தம்மைத் தேடிவரும் மாணவர்களுக்குத் தமிழையும் ஆங்கிலத்தையும் இலவசமாகக் கற்பிக்கும் நல்ல மனப்பாங்கை அவர் வைத்திருந்தார். வணிகமயமாகி வரும் உலகில் கற்பித்தலை அறிவுக் கண்திறக்கும் சேவையாக நினைத்துச் செய்பவர் புலவர்மணி.

புலவர்மணி ஆலயங்கள் பலவற்றுக்கும் கோயில் பிரபந்தங்கள் பாடியுள்ளார். அவரின்

பாடல்களில் காலத்துக்கேற்ற எளிமையை அவதானிக்க முடியும். பக்திரசம் மேலோங்கிக் காணப்படும். அவர் எழுதிய சந்நிதி அடைக்கலப்பத்து மிகவும் எளிமையான முறையில் அனைவரும் விரும்பத்தக்க முறையில் அமைந்த பிரபந்தமாகும்.

அவரது கட்டுரைகள், கவிதைகள் அனைத்தும் நூல்வடிவம் பெறவேண்டும். அப்போதுதான் புலவர்மணிக்கு உரிய முக்கியத்துவத்தை வரலாற்றில் நிறுவமுடியும்.

புலவர்மணி அவர்கள் சமயம், சமூகம் என்பவற்றைப் பற்றி எழுதிய கட்டுரைகள் பொருளாலும் நடைச்சிறப்பாலும் உயர்ந்து விளங்குகின்றன. அவற்றையும் எதிர்காலச் சந்ததிக்குப் பயனளிக்கும் வகையில் திரட்டாக வெளியிடவேண்டும்.

மரபுத் தமிழ்க் கல்விப் புலமையாளராகவும் அதேவேளை ஆய்வுத் திறன்கொண்ட ஆங்கில ஆசிரியராகவும் விளங்கிய புலவர்மணியின் ஆத்ம சாந்திக்காய் ஒரு கலையிலக்கியச் சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் என்ற வகையில் இதழியல் துறையின் சார்பில் பிரார்த்திக்கின்றேன். ஞானம் சஞ்சிகையின் மதிப்பிற்குரிய வாசகர்களுள் ஒருவராக இருந்த அவரின் குடும்பத்தினருக்கும் எனது அனுதாபங்கள். புலவர்மணியின் மாணவர் என் இனிய நண்பர் சுதர்சன் அவர்களுக்கும் என் ஆறுதல்கள்.

தமிழுக்குத் தொண்டு செய்வோன் சாவதில்லை.



# வல்வை ஆவணக் காப்பக ஆரம்ப விழாவில் ஆசி பொழிந்தவர்

ந.நகுலசிகாமணி, உமா
வல்வை வரலாற்று ஆவணக்காப்பகம்
Images of Valvai

நீலகண்டன் அவர்கள் 19ம் நூற்றாண்டில் வாழ்ந்த சிவசம்புப் புலவரின் பூட்டன். இவரின் பூட்டனாரான சிவசம்புப்புலவர் அவர்கள் நூறு வருடங்களுக்கு முன்பே வல்வெட்டித்துறையின் சிறப்புகள் பற்றி "வல்வைக் கலித்துறை" என்னும் பாடல்களை இயற்றி எழுதி எம்மையெல்லாம் சிறப்பித்தவர். எமது வல்வை இயற்றமிழ்ப் போதகாசிரியர் ச.வயித்தியலிங்கபிள்ளை அவர்களின் குருவாக இருந்தவர். பிள்ளையவர்களின் கந்தரலங்கார நூலின் உரைக்கு உரைச்சிறப்புப் பாயிரம் எழுதியவர்.

புலவர்மணி கா.நீலகண்டன் அவர்கள் உடுப்பிட்டி அமெரிக்கமிஷன் கல்லூரியின் பழைய மாணவர். ஆறுமுக உபாத்தியாயரின் குருகுலத்தில் சீடர். பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையிலும் பயின்றவர். பண்டிதர் கணபதிப்பிள்ளை, புலோலி தமிழ்தாத்தா கந்தமுருகேசனார் ஆகியோரிடம் சிலகாலம் பயின்றவர். சமஸ்கிருத மொழியிலும் ஆழ்ந்த புலமையுடையவர். உடுப்பிட்டி அமெரிக்கன்மிஷன் கல்லூரியில் புகழ்பூத்த ஆங்கில ஆசிரியராகச் சேவையாற்றி ஓய்வுபெற்றவர். வல்வெட்டித்துறை மாணவர்களில் பலர் ஆசிரியரிடமும், காலஞ்சென்ற அவரது மனைவி

தேவகியம்மா நீலகண்டன் ஆசிரியையிட மும் (உடுப்பிட்டி மகளீர் கல்லூரி) கல்வி கற்றவர்கள்.

2014ல் நீலகண்டன் அவர்கள் தனது பூட்டனாரின் தொகுப்புகளையெல்லாம் சேர்த்து "உடுப்பிட்டி சிவசம்புப்புலவர் பிரபந்தப் பெருந்திரட்டு" தேவபாகமும் மானுடபாகமும் என்ற மிகப்பெரும் நூலை 600 பக்கங்களில் தனது மாணவன் செல்லத்துரை சுதர்சனின் துணையுடன் உடுப்பிட்டியில் வெளியிட்டிருந்தார். நீலகண்டன் அவர்கள் தனது மகள் தாரணியிடம் கனடா வந்தபோது எமது இல்லம் வந்து சிறப்பித்தார். நானும் மனைவியும் கனடாவிலிருந்து வல்வைக்கு வரும்போது திரு.நீலகண்டன் அவர்களின் இல்லத்திற்குச் சென்றுவருவோம். அவரும் நன்கு உபசரிப்பார். 2014ல் சென்றபோது புலவர் இல்லத்தில் காய்த்த மாம்பழங்களையும் தான் வெளியிட்ட பெருந்திரட்டு நூலையும் தந்து உபசரித்து மகிழ்வித்தார். இன்று அந்தநூல் வல்வை யிலுள்ள வல்வை வரலாற்று ஆவணக்காப்பகத்தை (Images of Valvai) அலங்கரிக்கின்றது. 2012ல் ஆவணக்காப்பகம் வல்வையில் நிரந்தரமாக ஆரம்பிக்கப்பட்ட விழாவில்கலந்து சிறப்பித்து எம்மை வாழ்த்திச்சென்ற பெருமகன். இதன்மூலம் நூறு வருடங்களுக்கு முன்பு உடுப்பிட்டி சிவசம்புப்புலவருக்கும் எமது இயற்றமிழ் போதகா சிரியர் வயித்தியலிங்கபிள்ளை அவர்களுக்கும் ஏற்பட்ட பாரம்பரிய உறவு இன்றும் தொடர்கிறது. அவரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனை வேண்டியும், பொறியியலாளரான நீ.நித்தியானந்தன் மற்றும் தாரணி சிவநேசன் இவர்தம் மக்களுக்கு வல்வை மக்கள் சார்பில் அநுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.



# பூச்செடியிலிருந்து....
# புத்தகம் வரை


**வைத்திய கலாநிதி பானு தில்லையம்பலம்**

இருதயவியல்துறை

கொழும்பு தேசிய வைத்தியசாலை


ஆசை ஐயா.... உச்சரிக்கும் முன்பே அவரது முன்சரிந்த கண்ணாடியும் அதன் மேலாக ஊடுருவும் பார்வையும் தான் எனக்கு மனதிலே ஓடுகின்றன.

"என்ன....?" என்ற வார்த்தைக்கு அவர் உச்சரிக்கும் பொழுது அத்தனை கம்பீரம் எங்கிருந்து வந்து ஒட்டிக்கொள்கிறதோ என நான் பல முறை நினைத்ததுண்டு.

எனது குடும்பத்திற்கும் அவரிற்குமான உறவுப்பாலம் மிகவும் பலமானதும் நெருக்க மானதும் ஆகும். (எமது வீடுகளிற்கு இடையேயுள்ள பனங்காணி போல)

எனது அனுபவங்களை சிறு பிராயத்தி லிருந்து ஆரம்பிப்பது தான் முறையானது. ஏன் முழுமையானதும் கூட. நானும் எனது சகோதரியும் பெரியதாயாரது கணவராகிய இவரிடம் ஆங்கிலம் கற்கப்போவோம். அவரிற்கோ எனது சகோதரிக்கு கற்பிப்பது பிரியமான ஒன்று. ஏனெனில் அவரது ஆங்கில உச்சரிப்பையும் புத்தகத்தின் பக்கங்க ளையும் நுணுக்கமாக உள்வாங்குவதில் எனது சகோதரி திறமை வாய்ந்தவர்.

நானோ எனது பெரியதாயின் சேலையைப் பற்றியபடி சமையலறைக்குள் பதுங்கிக் கொள்வேன்.

"எங்கே அவள்...? அவர் வினாவுகின்ற நேரத்தில் எனது விழிகள் நித்திரையில் பாதி சொக்கியபடி இருக்கும். இப்படியான நேரங்களில் எனது பெரியதாயார் என்னைக் காப்பாற்றி விடுவார் "இனி என்ன படிப்பு நேரம் போய்விட்டது"

ஆனாலும் ஆங்கில தினப்போட்டியில் வெல்ல வேண்டும் என்கிற அவா என்னை அலைக்கழிக்கும். அவரது கண்டிப்பான பார்வையையும் கடுமையான வார்த்தைகளையும் சமாளித்து ஏதோ 'POEM' சொல்லப் பழகிக் கொள்வேன்.

இன்றுவரை யார்முன்பும் எந்த ஆங்கில வார்தையையும் உச்சரிக்கும் பொழுதும் அவரது உச்சரிப்புப் பாங்கே எமது நாக்கில் ஒட்டிக்கொள்ளும்.

"நீலகண்ட வாத்தியார்" அவரது பாண்டித்தியமும், கண்டிப்பும் நாணயத்தின் தலையும் பூவும் என்பது யாரும் மறுக்கமுடியாது. இவற்றையெல்லாம் கடந்து அவரது கனிவான தோற்றத்தைப் பலரும் பலதடவை தரிசித்து இருக்கின்றார்கள்.

ஒரு மொழியிலே காதல் கொண்டவர்கள் பல மொழிகளில் மோகமுடையவர்களாக இருப்பார்கள் என்பது இவரிற்கு மிகவும் பொருந்தும்.

தமிழில் இவர் புலவர்மணியானாலும் அவரது ஆங்கிலப் புலமைக்கு ஈடுகட்ட முடியாமல் தமிழும் திணறுவதுண்டு.

தன்னைச் சுற்றி இருந்த சூழலை இவரையன்றி யாரும் அப்படி நேசித்து இருக்கமாட்டார்கள்.

புல் முதல் பசுமாடு வரை அவரது ஸ்பரிசத்தை நன்கறியும். பசுமாடும் அவரது முதுகை வாஞ்சையாக வருடும் காட்சி அந்தக் காலத்தில் மாணாக்கர் பலரும் தரிசிக்கும் தினசரி நிகழ்வு.

எல்லோருடைய அறிவும் ஆற்றலும் இறுதிக் காலங்களில் மழுங்கிப் போவதுண்டு. ஆனால் இவரது அந்திம காலத்தில் இவர் யார் எதை வந்து கேட்டாலும் விளக்கமாக விளங்கப்படுத்தக் கூடியவராக இருந்தார். ஏன் இறப்பதற்கு ஒரு வாரம் முன்பும் ஒரு ஆங்கிலச் சொல்லின் உச்சரிப்பை இவரிடம் நான் ஐயமுறத் தெரிந்து கொண்டேன்.

"அப்படி அல்ல ...... இப்படித்தான்" என்று கூறிய குரலின் உரப்புக் கொஞ்சம் குறைந்து இருந்தாலும் உறுதி ஏனோ பல வருடங்களுக்கு முன்பு கேட்டது போலவே இருந்தது.

நான் என்னதான் அவரது தன்மை இறுதிநாள் வரை அப்படியே இருந்தது, என என்னைச் சமாதானப்படுத்தினாலும் நானும் நெகிழ்ந்த நிறை தருணங்கள் பல.

உதாரணமாக "அன்ரி அம்மா" எனப் பலராலும் செல்லமாக அழைக்கும் திருமதி பொன்னையா என்னை அவசரமாக தொலை

பேசியில் அழைப்பார் "பிள்ளை doctor குடுத்த மருந்து அப்படியே இருக்குது " இது என்ன குளிசை நான் குடிக்க மாட்டேன்" என அடம் பிடிக்கிறார். நீ கொஞ்சம் கதை..."

நானோ "ஆசை ஐயா இதற்குத்தான் இந்தக் குளிசை போடுங்கோ " என்பேன். ஒரு நிமிட மௌனம் "நீ சொன்னால் சரி" என்ற வார்த்தையில் அந்த நொடியில் அவரது கம்பீரம் சரிந்து, அவர் குழந்தையானதை ஏனோ என்னால் தாங்கமுடியாமல் தவித்தது.

தூய்மையும் பக்தியும் அவரது வாழ்வில் பிரிக்க முடியாதவை. ஏன் அளவிற்கு அதிகமாக அவரை அபகரித்துக் கொண்டவை கடைசி நாள் வரை அவர் இந்த இரண்டையும் கடைப்பிடித்தார் என்பதை நாமனைவரும் அறிவோம்.

அவரை நாமாக ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டிய தேவை எப்பொழுதும் எமக்கு இருந்ததில்லை. ஏனோ கல்கியின் அமரதாராவையும் பார்த்த சாரதியின் மணிபல்லவத்தையும் புத்தகக் கடையில் கண்டாலே எனக்கு அவரது வீட்டில் உள்ள புத்தக அறை கண்முன்னே வலம் வரும். என்னைப் போல் பலரும் கூறுகிறார்கள் அவர்கள் வீட்டிலுள்ள பூச்செடியிலிருந்து புத்தகம் வரை ஏதோ ஒன்று அவரது நினைவுகளை தம்முன் தட்டியெழுப்பு வதாக.



# நீலகண்டன் ஐயா எங்கள் நெஞ்சு நிறை அறிஞர்

சட்டத்தரணி சோ.தேவராஜா
தேசிய கலை இலக்கியப் பேரவை
இலங்கை

அந்தக் காலம். அது ஒரு கஷ்ட காலம். மூன்று தசாப்தங்கள் முந்திய காலம். 1990களுக்குப் பிற்பட்ட காலம். யாழ்ப்பாண மக்களின் இடப்பெயர்வுக் காலம். ஆனால் அதுவே கொழும்புக் கோயில் கொடியேற்றக் காலம்.

"குவலயத்தின் கண் போல்வான் யாழ்ப்பாணத்தான்" என்பார் மகாகவி பாரதியார். அந்தக் கண்கள் அநேகம் கொழும்புக்கு 'ஒப்பிறேசன் லிபறேசன்' ஆன காலம். ஆம். அறிஞர் அநேகர் கொழும்புக்கு வந்தனர். கொழும்புத் தமிழ்ச் சங்கத்துக்கு அதுவோர் பொற்காலம். காய்ந்து கிடந்த சங்கம் களை கட்டத் தொடங்கிய காலம். அங்கே அப்போதுதான் சிவந்த மேனி, சிரித்த கண்கள், நிமிர்ந்த நடை, குறுமுனி உருவம். அவர்தான் எங்கள் நெஞ்சம் நிறை அறிஞர் உடுப்பிட்டி நீலகண்டன் ஆசிரியர். அவரை கொழும்பு தரிசிக்கும் காலங் கனிந்தது.

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் மாலை நேரங்களில் அழையா விருந்தாளிகளாகவே அறிஞர்கள் கூடினர். அவர்கள் சந்திப்பது சற்சங்கமாகவே நிகழ்ந்தது. அதுவே நல்ல சகுனமாக அமைந்தது. திருக்குறள் பற்றி ஒவ்வொரு

புதன்கிழமையும் கூடி ஆராய்ந்து வாதப்பிரதி வாதங்கள் நடந்தன. தில்லைச்சிவன், சண்முகநாதன், பன்மொழிப்புலவர் கனகரத்தினம், எழுத்தாளர் கசின், ஆசிரியர் வேலுப்பிள்ளை எனப் பல யாழ்குடாநாட்டு அறிஞர்கள் மட்டுமன்றி இலங்கையின் பல பாகங்களிலுமிருந்து வந்த அறிஞர்கள் சங்கமித்தனர். புலவர் ஜின்னா ஷெரிபுத்தீன்,மட்டக்களப்பு புலவர்மணியின் மகன் விஜயரட்ணம், தினகரன் ஆசிரியர் சிவகுருநாதன் என இன்னும் பலர் ஒன்று கூடி இலக்கியம் பற்றிப் பேசுவதைக் கேட்பது ஓர் இனிமையான அனுபவம். இந் நிகழ்வே பின்னர் அறிவோர் கூடல் நிகழ்வுகளாகப் பரிணமித்தன.

ஒவ்வொரு வெள்ளிக்கிழமை தோறும் நூல்கள் ஒவ்வொன்றைத் தேர்ந்து அவை பற்றிய நயங்கள், விமர்சனங்கள் என்பவை பற்றி ஆழமாக ஆராயப்பட்டன. அதிலும் மகிழ்வுடன் தவறாமல் கலந்து கொண்டு தனது கருத்துக்களை தெளிவாக முன்வைக்கும் பெரியார்களுள் ஒருவராக எங்கள் நீலகண்டன் ஐயா திகழ்ந்தார். அந் நிகழ்வே நூல் நயம் என்று பிரதி வெள்ளி தோறும் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் இன்றும் நடைபெற்று வருகின்றது. அங்கே தனது கருத்துக்களை ஆணித்தரமாக வலியுறுத்துவதிலும் இனிமையாகவும் நகைச்சுவையாக முன்வைப் பதிலும் நீலகண்டன் அவர்கள் முக்கியத்துவம் பெற்றார்.

ஆசிரியர் நீலகண்டன் அவர்கள் பெரும் பொறுப்புகளுடன் இடம் பெயர்ந்து சுமைகளுடன் வாழ்ந்த போதும் துன்பங்களைப் பற்றி துவழ்ந்து விடாமல் துக்கத்தைப் பலமாக மாற்றி வாழும்

வல்லமை பெற்றிருந்ததைக் காணக் கூடியதாக விருந்தது. ஒவ்வொரு மூத்த அறிஞர்களும் ஒவ்வொரு சிறந்த நூல்களே ஆவர். அவர்களது அநுபவம், ஆற்றல் அவற்றை ஒருமுகமாக்கி இலக்கிய நிகழ்வுகளுக்கப்பால் தனித் தனியாக தமிழ்ச் சங்கக் குந்துகளிலே, தெருக்களிலே நடக்கும் சம்பாஷணைகளே மிகப் பெறுமதிவாய்ந்த பொக்கிசங்கள் என்பதை நாமனைவரும் தெரிந்து கொண்டோம். தற்போதும் கொழும்புத் தமிழ்ச்சங்கத்திலே 'அற்றைத் திங்கள்' எனும் அறிஞர்களின் அநுபவப் பகிர்வு நிகழ்வு பிரதி பௌர்ணமி தினங்களிலும் இடம் பெற்று வருகின்றது. ஆசிரியர் நீலகண்டன் அவர்கள் இளம் மாணவர்களைத் தன் இருப்பிடத்துக்கு அழைத்து ஆங்கில வகுப்புகளை நடாத்தி அறிவூட்டினார். அவரது வகுப்பில் ஒருநாள் சிவத்த மாணவனும் கறுத்த மாணவனும் பக்கத்துக்குப் பக்கம் அமர்ந்து படித்துக் கொண்டிருந்த போது அவர் தன்னை அடக்க முடியாமல் சிரித்தார். 'பாலும் கோப்பியும் பக்கத்திலை பக்கத்திலை இருப்பது பார்க்க மகிழ்ச்சியாக இருக்கிறது' என்றுஅன்புடன் பிள்ளைகளை அரவணைத்துப் பாடங்களை நடாத்தினார்.

ஒவ்வொருவரையும் பிரியும் போதுதான் அவர்களின் பெருமைகளை மீட்டுக் கொள்கிறோம். தவற விட்டு விட்டோமே! இன்னுமின்னும் அவரைக் கண்டு பேசி மகிழ்ந்திருக்கலாமே என்று அங்கலாய்க்கின்றோம்! 'இன்பமே எந்நாளும் துன்பமில்லை' என்ற நாவுக்கரசரின் வரிகளையும் 'இன்பத்துக்காக வாழ்கிறோம், இன்பத்துக்காக போராடுகிறோம், இன்பத்துக்காக மரணத்தையும் எதிர் கொள்கிறோம்' என்ற யூலியஸ் பியூசிக்கின்

வாசகங்களில் நாமனைவரும் அமைதி கொள்வோம்.

வள்ளுவர் வாக்குப் போல் நேற்றிருந்தவர் இன்றில்லை என்னும் பெருமை படைத்த இவ்வுலகின் இயற்கையில் நாமனைவரும் சங்கமமாவோம்.

'நெருநல்லுள னொருவன் இன்றிலையெனும்
பெருமை படைத்ததிவ் வுலகு'"

எல்லாம் வல்ல பெருமானின்
னிணையி லின்ப வருட்புகழை
யெல்லாம் வடித்துத் திரட்டியொன்றாய்
இனிய தழிழி லழகாகச்
சொல்ல வல்லே னல்லன்காண்
தொன்மைக் கந்த வனத்தமலா
பொல்லேன் றனக்கா மாற்றலின்மை
பொறுத்தவ் வாற்றல் நல்குதியே.

*(கந்தவன மணிமாலை : 6 -*
*புலவர்மணி கா.நீலகண்டன்)*



# அரும் பெறல் யாக்கை

இராகவன்
எழுத்தாளர் – விமர்சகர்

தன்னைத்தான் காதலனாதல் பொதுநியதி. அதாவது ஒருவன் தன்னைப்பற்றிப் பிறர் விளம்பரப்படுத்துவதையும் புகழ்ந்து மொழிவதையும் உள்ளூர வெகுவாக விரும்புவான் எனினும் இகழ்ந்து மொழிவதையோ விமர்சணப்படுத்துவதையோ தாங்கிக் கொள்வதில்லை என்பதுதான் பொதுநியதி. இதை அபக்குவமெனவும் வகைக்குறிக்கலாம். இதற்கு மாறானதொரு கற்பிதமும் உண்டு.

அதுவே தன்னைத்தான் அந்நியனாதல் இது சிறப்பு நியதி. தன்னைத்தான் முன்னிலைப்படுத்தாத தன்மை. ஓடும் பொன்னும் ஒக்கவே நோக்கும் பற்றற்ற நிலை. இந்நிலை ஆன்றோர்க்குரியது. ஆன்றோருக்குத் தம்மைப் புகழ்வது மொன்றுதான். இகழ்வதுமொன்றுதான். இது லௌகீக போகங்களையெல்லாம் கடந்தேகிய நிலை இந்நிலை பரம்பொருளுக்கு அணுக்கமாக்கிவிடும். பரம்பொருளுக்கு அணுக்கமாகிவிட்டாலோ அநுபூதிநிலை சித்திக்கும். அந்தநிலை சித்தித்த அபூர்வர்களிலொருவர்தான் நம்முன்னே வாழ்ந்து சுவனமெய்திய அரும்பெறல்யாக்கை புலவர்மணி நீலகண்டன் ஐயா அவர்கள்.

தாம் இவ்வுலகில் வாழுங்காலம் முழுவதும் கற்றிந்த ஞாலத்தால் தம்மிடத்துப் பயின்ற மாணாக்கரையெல்லாம் பளிங்கென மிரளவைத்த பெருந்தகையாளர். இவருக்கு அணுக்கமாயிருந்த மாணாக்கரை தாடலைப்பட்ட சாயுச்சிய நிலைக்கு இட்டுச்சென்றார். இவருக்குத் தமிழ்வேளாம் முருகக்கடவுள் வாலாயமானதில் வியப்பேது மில்லை மரபுநிலைபட்ட தமிழிலிலக்கியத்தை தமது அநுபூதிநிலைப்பட்ட பாக்களால் செழுமைப்படுத்திக் கொண்டேயிருந்தார். பக்தி இலக்கியத்திற்கு இவர் செய்த பங்களிப்பு ஓர் அளப்பெருஞ்சாதனையாகத் தனித்து நோக்கப்பட வேண்டியதொன்று. இந்த வகையில் (1) கந்தவனமணிமாலை (2) சந்நிதி நூறு (3)வேற்குகன் கண்ணி (4)அடைக்கலப் பத்து போன்ற படைப்புக்கள் குறிப்பிடத்தகுந்தவை. இவை தவிரப் புலவர் மணியின் இன்னொரு சாதனையுமுண்டு. இவர் தமது அணுகத் தொண்டனும், இவரை நிழல்போல் தொடர்ந்த சீர்மை மாணாக்கனுமான செ.சுதர்சனுடன் இணைந்து தொகுத்த உடுப்பிட்டிச் சிவசம்புப்புலவர் பிரபந்தத்திரட்டு தேவபாகமும் மானுடபாகமும் எனும் பொக்கிஷம்தானது.

போர் மேகங்கள் சூழ்ந்திருந்த காலகட்டத்தில் புலவர்மணி இடம்பெயர்ந்து கொழும்புக்குச் சென்றார். அங்கே சென்றிருந்த காலப்பகுதியில் ஒரு பிற்பகல் வேளை கந்தவனத் தலத்தை மனத்திரையில் தரிசிக்கும் அனுபூதிநிலையடைந்து இரண்டு மணிநேரத்தில் இருநூற்றிச் சொச்சப்பாக்களாகத் தம்மையறியாம லேயே கந்தவன மணிமாலையை யாத்து முடித்தார். இம்மணிமாலை கந்தவனத்தான் பேரருளால்

புலவர்மணியின் அனுக்கத் தொண்டனும் சீர்மைமாணாக்கனுமாகிய செ.சுதர்சனைப் பதிப்பாசிரியராகக் கொண்டு பதிவாராக்கித் தைப்பூசத்திருநாளாம் 03.02.2015 அன்றி கந்தவனத்தான் சந்நிதியில் புலவர்மணி அரும்பெறல்யாக்கைவிட்டு நீங்குமுன்னே அவர் விரும்பியபடியே படையல் செய்து வெளியிடப்பட்டது மெய்சிலிர்க்கும் தருணமாகும்.

புலவர்மணியின் பிரபந்தங்களிலெல்லாம் காணுமொரு தனிச்சிறப்புண்டு. அவர் எளிமையான சொற்களைக் கோர்த்து படிப்பவரைக் கசிந்துருக வைத்துவிடுகிறார். இதுதவிர மரபு இலக்கண வரம்பினுள் தற்புதுமையான மாற்றங்களையும் தமது அநுபூதிநிலைக்குள் நின்று நிகழ்த்தி வந்திருக்கிறார். உடுப்பிட்டிச் சிவசம்புப் புலவரின் பூட்டன் என்கிற அடையாளத்தையும் கடந்து புலவர்மணியைத் தனித்துவமான அரும்பெறல் யாக்கையாக நோக்க வைப்பது இந்த அநுபூதிநிலையில் நிகழ்த்தப்பட்டு வந்த தற்புதுமையான மாற்றங்கள்தான்.

தகுதிக்கு மீறிய பலரும் பிரதேச செயலக மட்டத்தில் கலாபூஷணங்களாகவும், கலாகீர்த்தி களாகவும், கலாரத்னங்களாகவும் கௌரவிக்க ப்பட்டுக் கொண்டிருக்கும் இக்காலகட்டத்தில் முற்றுமுழுதாகக் கௌரவிக்கப்படத்தகைமை பெற்றிருந்த புலவர்மணி கண்டுகொள்ளப் படாமலேயே அரும்பெறல்யாக்கையை நீத்தமை நம்மவரின் இலக்கியம் வளர்க்கும் அக்கறைக்கும் தேடலுக்கும் தக்கசான்றாகும். புலவர்மணிப் பட்டதையே இதுவரை அவர் அவாவியதில்லை காங்கேயன் நீலகண்டன் என்ற பெயரே தமக்குப்

போதுமானதெனக் கருதி வாழ்ந்த பேராளுமை யல்லவா அவர் அதனால்தான் அவரை அரும்பெறல் யாக்கை என்றழைப்பது சாலப்பொருந்தும்.

புலவர்மணியின் மகிமையுணர்ந்து அவரது அணுக்கத் தொண்டர் செ.சுதர்சன் காலம் உள்ள காலம்வரை அவரது மகிமையைப்பரப்பிக் கொண்டிருப்பார் என்பது கண்கூடு. அவருக்கு அந்தப் பெருங்கடப்பாடு எப்போதும் பரவசப் பாமாலைகளைத்தந்த புலவர்மணியின் கீர்த்தி அரும்பெறல் யாக்கையென என்னென்றும் நிலைத்திருக்கும். கந்தவனத்தான் பேரருள் இதற் கென்றென்றும் வகைசெய்யும். புலவர்மணியின் ஆத்மா கல்யாணவேலவனின் பாதாரவிந்தங்களின் கீழ் சாந்திபெறட்டும்.

ஊனா ரிந்தக் குடிலகத்தி
லொன்று வாழ்வு தனைக்கொண்டேன்
யானா ரென்ப தறிதலின்றி
யிங்கார் மயக்கி லுற்றழிவேன்
றானா யுள்ள வெளியேனைத்
தாங்கிக் கொள்ளாய் கருணையிரு
மானா ரிடையில் மேவுகந்த
வனத்தில் வாழு முருகோனே.

(கந்தவன மணிமாலை : 10-
புலவர்மணி கா.நீலகண்டன்)



# சுத்த மனத்தோடு தொண்டுசெய் ஊக்கம்

திருமிகு ஐ.சண்முகலிங்கம் திருமதி பு.சண்முகலிங்கம்
ஓய்வுநிலை ஆசிரியர்கள்

என் ஆசிரிய வாழ்க்கையில் பட்டப்படிப்பின் கல்வி டிப்ளோமாக்காக பாடசாலை கீதங்களை ஆய்வு செய்து இலங்கையில் உள்ள தமிழ், முஸ்லீம், பாடசாலைகளில் 50, 60 கீதங்களையும் பிறநாட்டுப் பாடசாலைகளின் சில கீதங்களையும் படிக்க நேர்ந்தது. இந்த அடித்தளத்தில் உடுப்பிட்டி கொத்தணி பாடசாலைகளின் பாடசாலைக் கீதங்களை மையமாக வைத்தே எனது ஆய்வு அமைந்தது. இவ்வாறு படித்த பாடசாலைக் கீதங்களில் என்னை மிகவும் கவர்ந்த பாடசாலைக் கீதங்களின் ஒன்றாக உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் பாடசாலைக்கீதம் அமைந்திருந்தது.

அவ்வேளையில் பலவாறாக முயன்றும் இப்பாடசாலைக் கீதத்தை இயற்றியவர் யார் என அறிய முடியவில்லை. அண்மையில் தான் இப்பாடசாலைக் கீதத்தை எழுதியவர் என்பதையும் பல மொழிகளை அறிந்தவர் என்பதையும் நீங்கள் அறிவீர்கள். அவராலேயே இப்பாடசாலைக் கீதம் எழுதப்பட்டது என்பதை அறிந்த போது நான் மிகவும் மகிழ்ச்சியும் வியப்பும் அடைந்தேன். எனக்கு மிகவும் அறிமுகமானவர் என்பதில் மகிழ்ச்சியும் அவரது மரபு வழிவந்த மற்ற பாடல்களுள் ஒப்பிடுகையில் இது இலகுவான

தாகவும் சந்தநடை சந்தச் சிறப்பு உடையதாகவும் அமைந்து இருப்பதால் வியப்பும் அடைந்தேன். இவ்விடத்தில் செய்யுள், கவிதை, பாடல் (கீதம்) என்பன பற்றியும் சிறிது நோக்குதல் வேண்டும் செய்யுள் என்பது எப்பொருளையும் யாப்பமைதிக் குட்பட்டு கூறுவதாகும். கவிதை என்பது மனிதனை தன்னுள் மறந்து கிளர்ச்சி உற செய்யும் எதுவும் கவிதையாகும். இவ் உணர்வு மொழியில் வெளிப்படும் ஒன்றே மையப்படுத்தி இசையுடன் கூடிய சந்த நடையில் கேட்போர் உள்ளங்களை பின்னிப் பிணிக்க செய்வதாகும். எனவே கீதங்கள் கவிதைச் சாயலைப் பெற்றிருந்தாலும் அல்லது இல்லாவிட்டாலும் அதன் இசை அமைதியாலும் சந்தத்தாலும் கேட்போரை பிணிக்கவல்லன இந்த வகையில் அமரரர் கா.நீலகண்டனால் எழுதப்பட்ட உடுப்பிட்டி அமெரிக்கமிக்ஷன் கல்லூரியின் கீதமானது கவிதையின் சாயலைப்பெற்ற ஒரு அழகான கீதம் எனக் கொள்ளலாம்.

எல்லாப் பாடசாலைக் கீதத்தைப் போலவே இந்தக் கீதமும் பல்லவியுடனும், அனுபல்லவியிலும் பாடசாலையை வாழ்த்திப்பாடுகிறது. இக்கல்லூ ரியின் புகழ் பல திசைகளிலும் சிறப்புப்பெற பரவ வேண்டும் என வாழ்த்தப்படுகின்றது. ஏழிசை போலவும் இன்தமிழ்போலவும் இசைபல திசை தொறும் இசையுற வாழ்க என கவிஞர் வாழ்த்து கின்றார். ஏழிசைபோலவும் இன்தமிழ் போலவும் என உவமிக்கின்றார். ஏழுஸ்வரங்களில் இருந்தே ராகங்கள் பிறக்கின்றன. அதேபோலவே இக்கல்லூரி மாணவர்கள் பாடசாலை என்ற மையப்புள்ளியில் இருந்து எங்கள் இனிய தமிழ் மொழியில் உலகமெல்லாம் பரந்து புகழ்பெற வேண்டுமென கவிஞர் அவாவுகின்றார்.

பாடசாலை என்ற மையத்தில் கலையும் விஞ்ஞானமும் கற்று பல சிறப்புக்களை மாணவர்கள் பெற வேண்டும் ஓங்கும் உயிர் நலம் பெற வேண்டும். மெஞ்ஞானத்தை அடைய வேண்டும் பிரபஞ்சம் என்றும் பரந்தும் இடையறாது ஒலித்துக் கொண்டிருக்கும் நாதத்துடன் ஒன்றித்து சமூகமும் நாடும் அதன் மூலம் உலகமும் நலம்பெற்று வாழவேண்டும் என கவிஞர் விரும்புகின்றார்.

இத்தகைய இயங்கு தளத்தில் ஒழுக்கத்தையும் சத்தியத்தையும் உயிரினும் மேலாய் மதிக்க வேண்டும் எனவும் சுத்தமனத்தினாய், சோம்பல் இல்லாத ஊக்கத்துடன் தொண்டு செய்து தன்னையும் உலகையும் பேண வேண்டும் எனவும் அடுத்தத்த வரிகளில் கவிஞர் பாடுகின்றார்.

தன்னுடைய தாய்த் திருநாட்டிற்காக "சுயம்" மறந்த தன் நலம் மறந்த வாழ்வை அவாவுகின்ற உன்னத வீரரை கவிஞர் கனவு காண்கிறார். தாய் திருநாட்டின் இன்னலைப் போக்க வேண்டும் என்பதற்காகவே தம் நலன்களைத் தியாகம் செய்பவர்களாக அவர்களைக் காண்கிறார். இந்த இடத்தில் பின்னர் எங்கள் எல்லார் வாழ்விலும் ஏதேதோ விதங்களில் பதிப்பு செய்த அக்காலங்களில் வீறு கொண்டு எழுந்த உன்னத வீரர்களைக் கவிஞர் தீர்க்கதரிசனத்துடன் கூறிச் சென்றுள்ளாரோ என்றும் சிந்திக்கத் தூண்டுகிறது.

இவ்வாறெல்லாம் கல்லூரியை வாழ்த்திய கவிஞர் அத்துடன் அமையாது ஊழிதொறு ஊழிதொறு ஊழி என்று யுகம் யுகாந் தரமாக கல்லூரி வாழ வேண்டும் என்று வாழ்த்தி அமைகிறார்.

இவ்வாறான சிறந்ததொரு பாடசாலைக் கீதத்தை அமெரிக்கன்மிக்ஷன் கல்லூரிக்கு எழுதித் தந்த பெருமதிப்புக்குரிய அமரர் கா.நீலகண்டன் ஐ கல்லூரிச் சமூகம் காலம் உள்ளவரை நினைவுகூரும். அவருடைய மற்றைய ஆக்கங்களைப் போலவே இக் கல்லூரிக் கீதமும் அவருக்குப் பெருமை சேர்க்கும்.

அன்னாரின் ஆத்மா சாந்திபெற பிரார்த்திக்கிறோம்.

பூவே பூவி னறுமணமே
பொன்னே பொன்னின் தண்ணொளியே
பாவே பாவின் றனிச்சுவையே
பரிவே பரிவின் றிருவுருவே
தேவே தேவர் சிறைமீட்ட
சிவமே வளஞ்சேர் கந்தவனக்
கோவே நின்றாள் தஞ்சமெனக்
கொண்டே னென்னை யாண்டுகொள்ளே.

*(கந்தவன மணிமாலை : 7-
புலவர்மணி கா.நீலகண்டன்)*



# ஊரே மதித்த உயர் புலவர் எனது ஆசான்

வண. கலாநிதி சதானந்தன் சொலமன்
கல்லூரி முதல்வர்
யாழ்ப்பாணக் கல்லூரி.

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் நான் மாணவனாக இருந்தபோது நீலகண்டன் ஆசிரியர் அவர்களிடம் கற்றுள்ளேன். அவரது ஆழமான தமிழ் அறிவும் ஆங்கில அறிவும் எப்போதுமே என்னை வியப்புக்கு உள்ளாக்கும் விடயங்கள். அவரின் வழிகாட்டல் கனிவும் கண்டிப்பும் நிறைந்தவை. பல நூல்களைக் கற்று அதனை மிகத் தெளிவாக எல்லோருக்கும் விளங்கும்படி கூறுகின்ற இயல்பும் அவரிடம் நிறையவே இருந்தது. அவரிடம் சமய, சமூக பேதம் எதனையும் காணமுடியாது.

எனது தந்தையாரும் ஓர் ஆங்கில ஆசிரியர். நீலகண்டன் ஆசிரியரும் எனது தந்தையாரும் அமெரிக்கன் மிஷன் கல்லூரியிலே ஒன்றாகக் கற்பித்தனர். எனது தந்தையார் நீலகண்டன் ஆசிரியர் மேல் அளவுகடந்த மதிப்பும் அன்பும் வைத்திருந்தார். அதுபோல நீலகண்டன் ஆசிரியரும் என் தந்தையார் மேல் அதிக பற்று வைத்திருந்தார். எங்கள் வீட்டிற்கு தந்தையார் இருக்கும்போது வந்து உரையாடுவார்.

எமது மிக மதிப்புப் பெற்ற ஒரு புலவராகவும் ஆசிரியராகவும் அவர் விளங்கினார். அவரது வீடு

எப்போதுமே ஒரு நூலகமாகக் காட்சியளிக்கும். என்னைப் பொறுத்தவரையில் தமிழை மிக ஆழமாக நேசித்த ஒரு தமிழ் அறிஞர் அவர். அவர் தமிழ் மேல்கொண்ட தீராத காதலால் உருவாக்கிய பல பாடல்கள் உள்ளன. அவை அனைத்தையும் பகுதி பகுதியாகத் தொகுத்து வெளியிடுதல் வேண்டும்.

அவரது நினைவு தினத்தை வருடந்தோறும் நிகழ்த்தவேண்டிய கடமை அமெரிக்கன் மிஷன் கல்லூரி கல்விச் சமூகத்திற்கு உண்டு. அவர் எழுதிய கல்லூரிக் கீதமும் கல்லூரிக்கான அவரது செயற்பாடுகளும் என்றுமே மறக்க முடியாதவை. கல்லூரிக்கீதம் எழுதிய அவரின் நினைவாக கல்லூரி மண்டபம் ஒன்றிற்கு அவரின் பெயரை வைப்பது அவருக்கு நாம் செய்யும் நன்றிக் கடன்களுள் ஒன்றாகும்.

அவரது பிரிவால் துயருறும் அனைவருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்கள். அவரது ஆத்மா சாந்தியடைவதாக.



# அந்நிய தேசத்தில் வாழ ஆங்கிலம் தந்தவர் புலவர்மணி

**திருமிகு ச. இரவிச்சந்திரன்**

தலைவர் - பழைய மாணவர் சங்கம்
உடுப்பிட்டி அ.மி.கல்லூரி - சுவிஸ் கிளை

ஆசிரியர் நீலகண்டன் அவர்களின் மறைவு அவரிடம் கல்விகற்ற மாணவர்களைெல்லாம் துயரத்திலாழ்த்தியுள்ளது. உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியிலும் ஊரிலும் மதிப்புடன் வாழ்ந்த அப் பெரியாரின் நினைவுகள் என்றும் எம் மனதை விட்டு நீங்காது. ஆங்கிலப் பாடம் கற்பதில் தன்கென்றே ஓர் இடம் எடுத்துக் கொண்டவர். எம்மில் பலர் ஆசானிடம் ஆங்கிலமும் சைவசமயமும் கற்றவர்கள், சைவ மதத்தின் மிகுந்த பற்றுதி கொண்ட எம் ஆசான் எமக்குக் கூறிய கதைகளும் நெறிமுறைகளும் இன்றும் செவிகளில் ரீங்காரமிட்டுக் கொண்டிருக்கின்றன. ஆங்கிலப் பாடத்தில் சொற்களின் நெறிபிறழா உச்சரிப்புக்களை நினைவில் நிறுத்த பல உத்திகளை வகுத்துத் தந்தவர். இன்று நாம் வாழும் அந்நிய தேசத்தில் ஆங்கில மொழியின் செல்வாக்கும் தேவையும் முக்கியப் படுத்தப்பட்ட சூழ்நிலையில் ஆசானின் பாண்டித்தியம் மிக்க ஆங்கில மொழியூட்டல் இன்றும் அவரின் இன்முகத்தை உளமெல்லாம் தேங்க வைத்துள்ளது.

விளையாட்டுப் போட்டிக் காலத்தில் ஆசானின் சுறுசுறுப்பான உந்துதல்கள் உற்சாகப்படுத்தலை மீட்டுப் பார்க்கின்றோம். 1976,

1977ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் எமது பாடசாலை இறுதிக்காலத்திலும் அவருடன் எமக்கிருந்த அன்னியோன்யமான காலங்களும் நினைவில் நீங்காத சம்பவங்களாகும். கற்பித்தல் தகமையும் ஆசானின் கணீரென்ற குரலும் ஆசானின் அணிகலன்கள். ஆசிரியர் பதவியிலிருந்து ஓய்வு பெற்ற காலத்திலும் சைவ சமயத்தின் மேற் கொண்ட பற்றுதலால் பல சேவைகளை மேற் கொண்டமை அவரின் அயரா உழைப்பின் வெளிப்பாடும், சைவசமயம் காக்கும் பற்று உறுதியுமாகும். அவரிடம் கல்வி கற்ற அவருடன் வாழ்ந்த காலம் எமக்கும் கிடைத்த பேறாகும். ஆசானின் மறைவால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தாருக்கும் சுற்றத்தாருக்கும் ஆறுதல் கூறி எம் துயர்தனைப் பகிர்ந்து கொள்கின்றோம்.

வெண்ணீ றன்ன மணல்வீதி
விளங்கு கந்த வனத்தளியி
லுண்ணீ டொப்பில் பத்தியினால்
நெஞ்ச முருகத் தொண்டரொடு
பண்ணீ டின்பப் பஜனைசெயும்
பணியி னாளு மீடுபட
எண்ணீ டல்லல் தொல்லையெலா
மில்லா தோடிப் பறந்திடுமே.

(கந்தவன மணிமாலை : 11-
புலவர்மணி கா.நீலகண்டன்)



## *TRIBUTE TO A TRUE SAIVITE*

Kiruppalini Kandavanam

Firstly I am indeed very honoured to be given an opportunity to write a few words about Neelankandan Annay who was more than a brother to me.

I first met him way back in 1977 when I made my first trip to Sri Lanka or Ceylon as it was known than with my late father Mr Kandavanam Muthusamy. My first impression of Annay was a very strict, and a stern disciplinarian who always seems to be talking about Hinduism and its greatness. I was not wrong though, he was a great Saivite to say the least and in many ways, over the years, was responsible for grooming and developing my spiritual growth and understanding of Hinduism. I used to talk to him about many matters sometimes religious, sometimes personnel and he always seemed to have an answer to these questions and put my mind at ease, that was Annay, a wonderful loving brother but who also became a good friend to me in his later years.

His demise is indeed a very great loss not only to me but all members of the Kandavanam family who

will eternally be grateful to Annay for being there at most occasions in Malaysia and being the link between Sri Lanka and Malaysia for all of us. I am truly going to miss you Annay!

Annay realising my ignorance of the relatives in Sri Lanka, decided to write a family tree tracing the relatives to the roots way back to Pundit Punniyamorthy and Komalam, covering almost four generations.A book I cherish and keep till today.

In this family tree Annay mentions and writes a note of the great Sivasambu Pulavar, whom he describes as a poet laureate. To me Neelakandan Annay was also a great man. He was larger than life, as his interest and commitments extended beyond family and into Society as a whole.Just as SivasambuPulavar was a smart man I belief Annay was also a great man in many ways and will always be remembered as such by me and I believe many others. God Bless you!

Honestly I cannot find the exact words to describe my beloved brother and his greatness. The Kandavanam family prays that this true Saivite soul will rest in everlasting peace and serenity.
Om Nama Sivaya!



# அயலினை அணைத்து வாழ்ந்த அருந்தமிழ் அறிஞர்

சுப்பிரமணியக் குருக்கள் இராட்சியலக்சுமி
துவாளிவீதி
உடுப்பிட்டி

அமரர் புலவர்மணி கா.நீலகண்டன் வாத்தியார் அவர்கள் உடுப்பிட்டி சிவசம்புப் புலவரின் பரம்பரையிலே தோன்றியவர். மிக நீண்டகாலமாகப் பழகிய ஓர் அன்பு உள்ளம் இன்று இல்லை என்பதை எண்ணும் போது எமது மனம் கவலையடைகிறது. இல்வாழ்விலே சிறந்து விளங்கி நன்மக்களைப் பெற்று அன்பும் பண்பும் நிறைந்த குடும்பமாக வாழ்ந்தவர். இவர் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியின் ஓய்வு பெற்ற ஆங்கில ஆசிரியரும் பழந்தமிழ் இலக்கியப் புலமை முதிர்ந்த தமிழ் அறிஞரும் ஆவார்.

ஆசிரியராக இருந்தகாலத்தில் பாடசாலையில் மட்டுமல்லாது வீட்டிலும் பல மாணவர்களுக்கு ஆங்கிலப்பேச்சு உச்சரிப்புப் பயிற்சியளித்தவர். பாடசாலையிலும் பாடப் பொறுப்புக்களை ஏற்று முன்மாதிரியாக செயற்பட்டவர். விளையாட்டு உடற்பயிற்சி தலைமை மாணவனுக்கு ஆங்கில மொழியில் உச்சரிப்பை சொல்லிக் கொடுக்கும்போது பிழைவிட்டால் அவருடைய தடிபேசும். ஆங்கில உச்சரிப்பில் நிபுணத்துவம் வாய்ந்தவர்.மிகவும் அர்ப்பணிப்புடன் சேவை செய்த கண்டிப்பான ஆசான். சாரணியத்தின் பொறுப்பாசிரியராக

இருந்தது மட்டுமன்றி ராணி சாரணியராக உயர்பதவி வகித்தவர். கல்லுவம் செல்லத்துரை மாஸ்ரரின் சாரணியமாணவன். இவ்வாறு தன்னுடைய பணிக்கால அனுபவங்களை எல்லாம் ஓய்வுகாலத்தில் எம்முடன் பரிமாறியுள்ளார்.

"வாத்தியார்" என்று செல்லமாக நாங்கள் அழைத்தால் அவர் புன்சிரிப்புடன் நெருங்குவது எவராலும் மறக்கமுடியாது. நல்ல ஞாபக சக்தி நிறைந்தவர். பணிநிலை ஒய்வில் அவருடைய பொழுதுபோக்கு புத்தகங்களுடன் பேசுவது, பூமரங்கள் வளர்த்து அழகுபார்ப்பது. இவர் வாசிக்காத புத்தகங்களே இல்லை என்றே கூறலாம். வீட்டில் அழகாக அடுக்கிப் பேணிப் பாதுகாத்த பெரிய நூலகம் ஒன்று அவர் இறுதிவரை சேர்த்துவைத்த பெரிய சொத்து. அரிய, கிடைக்கப் பெறமுடியாத புத்தகங்களை சேமித்துப் பேணிப் பாதுகாத்துள்ளார். கேட்டபோதெல்லாம் தந்துதவியவர். நூல்களை சேமிக்கும் பழக்கம், வாசிப்பு என்பவற்றை இவரிடமே நாம் கற்றுக் கொண்டோம். விளக்கம் கேட்டால் அகராதியுடன் பலபொருள் கூறித் தெளியவைப்பார். இவருடைய முதிர்ந்த அனுபவம் இன்று எம்மிடையே இல்லை என்பது பெருந்துயரம்.

இருபத்தோராவது வயதிலேயே துவாளி கண்ணகி அம்மன் மீது திருவூஞ்சல்பாடி அருள் பெற்றவர். இவர் இயற்றிய கந்தவன மணிமாலை, துவாளிப்பிள்ளையார், மாடந்தைப் பிள்ளையார், வில்லூான்றி, உடுப்பிட்டி வைரவர் ஆலயம், உடுப்பிட்டி விஸ்வகுல பத்திரகாளியம்மன் எனப் பல ஆலயங்களுக்கு ஊஞ்சற் பாடல்களைப் பாடிப்பெருமை பெற்றவர். இவருடைய பாடல்கள்

மிக எளிய அழகு தமிழ் நடையில் இனிமையான முறையில் பாடப் பெற்றவை. இவர் சிறுவர் முதல் பெரியோர் வரை பாமர மக்களும் பாடும் வகையில் பாடல்கள் இயற்றியது போற்றுதற்குரியது. உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியின் பாடசாலைக் கீத்தை உணர்வுபூர்வமாக இயற்றியமை குறிப்பிடத்தக்கது. இக்கீதத்தைப் பாடும் போது சொல்லின் அழகுநடையையும் இனிமையையும் புகழ்ந்து வடமராட்சி வலயக் கல்விபணிப்பாளர் அதிபர்களுக்கான கூட்டத்தில் போற்றிக் கூறியமை பாராட்டிற்குரியது.

இவ்வாறு காலவோட்டத்தில் நீண்ட பயணத்தில் அளப்பரிய செயல்களையெல்லாம் செய்து அன்பையும் ஆன்மீகத்தையும் வென்றுகாட்டிய அன்புள்ளம் மரணத்தின் பின்பும் உற்றார் உறவினர் அழும் சத்தம் கேட்டு இவ்வுலக வாழ்வு நிலையற்றது என்பதனை உணர்த்தி சிரித்த முகத்துடன் விடைபெற்ற காட்சி எம்மனதை விட்டு என்றும் நீங்காது. ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.



# A GREAT POET

Vallipuranthan and Sakuntala

The late Mr. K Neelakandan is the great grandson of the famous poet Sivasambu. He was a leader at his Uduppiddy American mission school. His knowledge and command of both Tamil and English languages earned him high respect among the students as well as the teachers. Hence he was given the opportunity in teaching both languages. He is a devoted Hindu and made it a practice to visit and pray at three Temples in the mornings and evenings every day.

By virtue of his poetic knowledge he became very popular in the locality. and among the religious society.

In the year 1962 he was wedded to my sister and led a happy life. Unfortunately 10 years ago, my sister passed away. In a few years time his health started to fail and he became a dependent person Fortunately his own sister and one of my sister and her daughter, took charge of taking care of him in a very dedicated manner. However the passage of age and failing health took a toll and he passed away a few months before he reached his 85th birthday.

I wish and pray that his soul rests in peace.



# அமரர் காங்கேசு நீலகண்டன் ஆசிரியர்

திருமிகு மா.தருமலிங்கம்
முன்னாள் நுண்கலைமன்றத் தலைவர்
உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரி

கடுகு சிறிது காரம் பெரிது என்று கூறினார்கள். அதே போல் அமரர் நீலகண்டன் ஆசிரியர் அவர்களும் அவ்வாறே. அதாவது அமரர் அவர்கள் சிறிய ஆள் தான். ஆனால் கற்பித்தல், ஆன்மீகம், புலமை, அன்பு ஆகிய காரங்கள் நிறையப் பெற்ற பெரியவர்.


இவர் கற்பிக்கும் காலத்தில், தான் கற்பிக்கும் பாடம் மாணவரைச் சென்றடைய வேண்டும் என்னும் நோக்கத்தோடுதான் கற்பிப்பார். கற்பித்தலை செவிமடுக்காத மாணவர்களைக் கூப்பிட்டு ஒரு நுள்ளு (தொடையில்) செல்லமாக நுள்ளுவார். மாணவர்கள் அப்பொழுது ஒரு அடி உயர்வார்கள். அதன் பின் அவர்கள் செவிமடுக்கத் தவறுவதில்லை. அப்படி அவர்களிடம் கற்ற மாணவர் இன்றும் கூறுவார்கள். நீலகண்டன் சேர் நுள்ளிய நுள்ளல் தான் எங்களை இந்த நிலைக்குக்கொண்டு வந்தது என்று சொல்வார்கள். அது மட்டுமல்ல சாரண இயக்க வளர்ச்சியிலும் அரும்பாடுபட்ட துடன் சாரண ஆசிரியராகவும் கடமையாற்றியவர்.

மேலும் இறுதிக் காலம் வரை பழைய மாணவர் சங்கக் கூட்டம், ஏனைய நிகழ்வுகள் எதுவென்றாலும் நேரத்திற்கு சமூகம் கொடுக்கத் தவறமாட்டார். இப்படி சமூகம் கொடுக்கும் பொழுது திடீர் சுகயீனம் ஏற்பட்டதும் உண்டு. அப்படியிருந்தபோதும் கடமை, கண்ணியம் தவறாது நடந்தவர் என்பதை யான் கூறிவைக்கின்றேன். இப்படியாக எழுதிக்கொண்டே போகலாம்.

*ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி*

கந்த வனத்தான் வேலுண்டு
கதிகொள் நீல மயிலுண்டு
கந்த மலர்த்தா ளிணையுண்டு
கருது வேறு படையுண்டு
நந்த லில்சீர் நாவுண்டு
நவிலின் சுவைத்தேன் பாவுண்டு
எந்த வகையா மிடர்த்தொகையு
மெம்மை யென்ன செயுமினியே.

*(கந்தவன மணிமாலை : 14-*
*புலவர்மணி கா.நீலகண்டன்)*



# நீலகண்ட ஆசானே நித்தியத்தில் நீடிப்பாய்

திருமிகு வ.செல்வராசா

ஓய்வுநிலை மாகாணக் கல்விப்பணிப்பாளர்

வடமாகாண கல்வியமைச்சு

இருபதாம் நூற்றாண்டின் இரண்டாம் காலுதித்து
மலேசிய மண் மலர்ந்து பின் தாயிழந்து
தாய்நாடு வந்து உடுப்பிட்டி மிசனில் கற்று
தாய் மொழிதனை வளர்த்த தகவே யுறைந்திடுவாய்

காங்கேயன் செய் தவத்தால் கருவிலே திருவாகி
கண்ணான கல்வியினை உடுவை மிசனில் கற்று
கனிவுமிகு கலைப்பிரிவில் கற்றுத் தேறிக்
காவியம் படைத்த பெருந்தகையே யுறைந்திடுவாய்

செந்தமிழ் வல்சிவசம்பனாரின் மருகரிடம்
கந்தவனக் கடவையிலே கல்வியடியெடுத்து
பைந்தமிழும் ஆங்கிலமும் சீர்பெறவே கற்ற
காங்கேயன் புத்திரனே உறைந்திடுவாய்

அமெரிக்க மிசனறியில் ஆங்கிலத்து ஆசானாய்
ஆண்டாண்டு காலமாய் போதனைகள் புரிந்து
சாதனைகள் புரிந்து சரித்திரம் படைத்திட்ட
நீலகண்ட ஆசானே நித்தியத்தில் உறைந்திடுவாய்

சிவசம்பனாரின் செழுமைமிகு கவிதைகளை
சிதையாது சேகரித்துக் காத்த கவிமகனே
அரனாரின் அடிநோக்கிச் சென்றனையோ
அவரடியில் நித்தியத்தில் உறைந்திடுவாய்.



# சிவசம்பு வழி நின்று சீர்செய்த தமிழ் மகனே

கவிஞர் வல்வைக் கமல்

ஈழத்துத் தமிழ்ப்புலமை
மரபினது ஊற்றாக
இறுதி மூச்சு வரையோடி
இலக்கியத்தை இலக்கணத்தை
இயன்றவரை வளர்த்தவரே
வாழ்ந்துவிட்டீர்
வாழ்க்கையினை
நிறைவாக்கிச் சென்றுவிட்டீர்
விதைத்த விதை விருட்சமாகும்

எளிமை அதன் உருவாய்
பண்பதனின் குருவாய்
அறிவதுவே திருவாய்
அமர்ந்த
ஞானகுருவே

சிவசம்பு வழி நின்று
சீர் தமிழை வளர்த்து நின்றீர்
பார் போற்றும் படியாக
பணிபலவே நீர் செய்து
பணிந்ததனால் உயர்ந்தவரே
தமிழ் வாழ்வில் நிறைந்தவரே

இலக்கியத்தின் பூக்களிலே
உம் வாசம் நிறைந்திருக்கும்
வரலாற்று நதிகளிலே
உம் ஓசை ஒலித்திருக்கும்
நீலகண்டக்குருவே நீர்
நிலையாக இருக்கின்றீர்

# நன்றிகள்

எமது குடும்பத்தலைவர் அமரர் புலவர்மணி காங்கேயன் நீலகண்டன் 14.02.2015 அன்று இவ்வுலகை நீத்த செய்தியைத் தாங்கிக் கொள்ளும் வலுவைத் தந்த இறைவனுக்கு எமது நன்றிகள்.

அன்னாரோடு வைத்தியசாலையில் கூட இருந்து உதவியவர்களுக்கும் எமது நன்றிகள். திருமதி இராஜேஸ்வரி தில்லையம்பலம், வைத்தியகலாநிதி பானு தில்லையம்பலம், திருமதி மீ.விநாயகமூர்த்தி, திரு தங்கேசு உமாபதி, திருமதி சி.ஜெயராம், திரு கண்ணன் ஜெயராம், திருமதி பொன்னையா, திரு ந.நவரட்ணசிங்கம், திரு க.முத்துலிங்கம் ஆகியோருக்கும் உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் மந்திகை வைத்தியசாலை வைத்தியர்களுக்கும் எமது நன்றிகள்.


அன்னாரின் இறுதிக்கிரியைகளை நடாத்திய குருக்கள் ஐயாவுக்கும் அஞ்சலி நிகழ்வில் உரையாற்றியோருக்கும் அஞ்சலிப் பதாதைகள், மலர் வளையங்கள் மற்றும் அஞ்சலிப் பிரசுரங்கள் மூலம் அஞ்சலி செலுத்தியோருக்கும் இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டோருக்கும், தொலைபேசி, மின்னஞ்சல் வாயிலாக அஞ்சலி தெரிவித்தோருக்கும் நன்றிகள்.

16.03.2015 அன்று ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொண்டோருக்கும், ஞானகுரு மலருக்கு ஆக்கம் அளித்த பெரியோருக்கும் பதிப்பித்துத் தந்த திரு செ.சுதர்சன் அவர்களுக்கும் எமது நன்றிகள்.

**குடும்பத்தினர் சார்பில்**


**திரு நீலகண்டன் நித்தியானந்தன்**

# FAMILY



★Ponnavandoo
★Sinnathai
+
★Sinapariyar
★Seethevy
+
★Sivasambu Pulavar
★Sivakamy
★Ponny
+
★Muthusamy
★Sivakamy
+
★Arumugam
★Kangesu
+
★Shengamalam
( Sethupillai)
★Alagammah
+
★Kandavanam
+
★Manomani
★Kamalamuthu i
★Kamalamuth
+
★Pasupath
★Rasiah
★Chelliah
Thanaletchumi
★Sivasamboo
+
Devakie
★Kumarakuru
+
Chan wai Woo
★Kamaladev
★Kandavanam
+
★Kanagamah
Shoroopini
Aruna
Krisen
Yasotha
★Vinayagamoorthy
★Perinpanayagam
Tharmasothy
Pathmalosany
★Nagaratnam
+
★Manikam
★Nageswar
+
★Velmurug
+
Meenalosany
Umapathy
Manivannan
+
Inderadevi
(pattu)
Alalasundaram
+
Krishnaveni
★Visagasundaram
★Elango
Bhuvaneswary
Sri
Komaladevi
Kumuthanayaki
Loganayaki
Abiman
★Neelakandan
Sivambikai( Dharini)
+
A. Selvanesan
S.Thevaki

# Y TREE


*Kaddaiyar
*Valli
+
*Murugan
*Meenatchi
+
*Seniyar
*Shanmugam
*Muthu
+
*Arumugam
*Manikam
+
*Mylar
*Sinnathamby
uthu ii
athy
*Parvatham
*Kathirasi
*Ehamparan
*Ambikapathy
*Poopalan
*Kurunathan
+
*Lakshmi
devi Suyampuligam
+
Norsiah Bt Nordin
Ratnashima
Abdul Razak
Kirupalini
+
Rajarani
Muhila
Hema
Sivashankari
Kalamathy
+
Nesarajah
Deepa
Vinoshka
Varnakumar
Sivam
+
Meera
Karina
Karisha
Jaritha
wary
rugu
Srinathan
Vallipuranathan
+
Sakuntala
*Balasubramaniam
Kanagambigai
+
Mahadevan
Uma
+
Fernando Sergio Velayos
Sofia Aarya Velayos
Dharshini
Rajeswary
+
*Thillaiampalam
Rajkumar
Venuga
+
N.Kugathasan
Rhadheshyam
Vidyaram
Bhanu
+
V.Prasanna
Harish
Beeshman
an + *Thevaki
hi)
Nithiyananthan
*Deceased

சிவசம்புப் புலவரின் வழிவந்து கந்தவன முருகனின் கழல்பாடி வாழ்ந்தவர் புலவர்மணி அவர்கள். பக்திரசம் ததும்ப அவர் பாடியது கந்தவன மணிமாலை.

*சிவப்பிரம்மஸ்ரீ. ச.வைத்தியநாதக் குருக்கள்*
*கந்தவனம் கல்யாணவேலவ சுவாமி தேவஸ்தானம்.*

ஈழமண்ணின் மிகப்பெரிய கவிதை ஆளுமையை உரியமுறையில் உரிய இடத்தில் பதிவு செய்து தன்னையும் வரலாற்றில் பதிய வைத்துக் கொண்ட புலவர்மணி கா. நீலகண்டன் காலத்தை வென்று நிற்பார்.

பேராசிரியர் சா. உதயசூரியன்
*அயல்நாட்டுத் தமிழ்க் கல்வித்துறைத் தலைவர்*
*தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.*

புலவர்மணி ஈழத்துப் புலமை மரபின் ஊற்றுக்களில் ஒருவர். அவரது புலமைத் திறன் பல புலமை ஓட்டங்களுக்குக் காரணமாகியமை சிறப்பிற்குரியது.

பேராசிரியர் வ.மகேஸ்வரன்
*தமிழ்த்துறைத் தலைவர் - பேராதனைப் பல்கலைக்கழகம்.*

கவிதை, கட்டுரை, கற்பித்தல் எனப் பல்பரிமாண ஆளுமையால் தம்புகழ் நிறீஇய புலவர்மணி காங்கேயன் நீலகண்டன் பழுத்த பழமாக வீழ்ந்தவர்.

பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.*

*இலங்கை மண் ஒருபோதும் மறக்க முடியாத மாண்புமிகு மனிதராக வாழ்ந்து மறைந்தவர் புலவர்மணி காங்கேயன் நீலகண்டன்.*

பேராசிரியர் துரை. மனோகரன்
பேராதனைப் பல்கலைக்கழகம்.

மரபுத்தமிழ்ப் புலமையுடன் ஆய்வறிவுத்திறனும் முற்போக்குச் சிந்தனையும் ஒருங்கே வாய்க்கப்பெற்ற புலவர்மணி வியக்கத்தக்க ஓர் ஆளுமை.

பேராசிரியர் கி.விசாகரூபன்
*தமிழ்த்துறைத் தலைவர் - யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.*

ஈழத்து இலக்கிய வளத்துக்கு வடமராட்சி தந்த பெரும் அறிஞர்களில் புலவர் மணியும் ஒருவர். ஈழத்து மரபு இலக்கிய வளர்ச்சியில் முக்கியமான ஒருவர்.

பேராசிரியர் செ.யோகராசா
*மொழித்துறை, கிழக்குப் பல்கலைக்கழகம்.*

கல்வியெனும் வித்தையால் பல வித்துக்களை விதைத்து வித்தியா உலகிற்குப் பணியாற்றியவர் புலவர்மணி எங்கள் ஆசான் நீலகண்டன் அவர்கள்.

உடுவை எஸ். தில்லை நடராசா
*பொதுச்சேவைகள் ஆணைக்குழு - இலங்கை.*

Neelakandan Master was a manifestation and embodiment of Vidhiya Dharma.

*Prof. S.Srisatkunarajah*
*Prof. in Mathematics / Dean, Faculty of Science, University of Jaffna.*

*Guru Printers, 021 222 8266*